

பள்ளியில் பயிலுகின்ற சிறுவர்களில் சிலர் காது
கேளாதவர்களாக இருக்க நாம் காணுகின்றோம்.
இத்தகைய குறைகளைக் கொண்டுள்ளதால் அவர்கள்
கல்வியில் போதிய கவனம் செலுத்த முடியாமல், பின்
தங்கிய நிலையினை அடைகின்றனர். இந்தக் குறைகளைப்
போக்கினால் அவர்களின் கல்வியில் தகுந்த பயன்கள்
பெற வாய்ப்புகள் ஏற்படலாம். எனவே இவற்றினைக்
கருத்திற்கொண்டு, முதல்வரின் உடல் ஊனமுற்றோர்
மறுவாழ்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாக-காதுகேட்
காத சிறுவர்களுக்கு இலவசமாகக் காது கேட்கும்
கருவிகளை வழங்க அரசு ஏற்பாடு செய்தது. 1975
ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களுக்குள் ஏறத்தாழ 1,000
சிறுவர்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
இத்திட்டத்தின் வாயிலாக முதலில் 102 சிறுவர்
களுக்குக் காதுகேட்கும் கருவிகளை முதல்வர் கலைஞர்
அவர்கள் 15-11-74-ல் சென்னை எழும்பூர்
குழந்தைகள் நல மருத்துவ மனையில் நடைபெற்ற
விழாவில் வழங்கி சிறப்புச் செய்தார்கள்.

●

பள்ளியில் பயிலுகின்ற காலத்தில் சில குழந்தைகள்
எதிர்பாராத வகையில் விபத்துகளுக்கு ஆளாகி
உடல் ஊனம் அடைகிறார்கள். இவர்களில் சிலருக்கு
நீண்ட காலம் வரை சிகிச்சைகள் அளிக்கப்பட
வேண்டியிருக்கும். இந்த நீண்டகாலச் சிகிச்சைகளினால்
குழந்தைகளின் கல்வி நிலை பழுது படாமலிருக்க
அவர்களுக்கென பள்ளிகளை, சிகிச்சை பெறுகின்ற
மருத்துவமனைகளில் அமைத்து கல்வி கற்றுத்தர அரசு
ஏற்பாடு செய்துள்ளது. இந்தியாவிலேயே இத்தகைய
முறையில் பள்ளியினை நடத்துவது தமிழகத்தில்தான்
என்பது குறிப்பிடத்தக்கதாகும். சென்னை எழும்பூர்
குழந்தைகள் நல மருத்துவமனையில் 10 சிறுவர்கள்
கொண்ட பள்ளி ஒன்றினைத் தமிழக முதல்வர் டாக்டர்
கலைஞர் அவர்கள் 15.11.74-ல் துவக்கி வைத்தார்
கள் தமிழ்நாட்டில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை
களில் 7 பள்ளிகள் துவக்கப்பட உள்ளன. ஒவ்வொரு
பள்ளியிலும் 10 சிறுவர்கள் சேர்க்கப்பட்டு, அவர்
களுக்கென ஆசிரியர் ஒருவரையும் நியமனம் செய்து,
கல்வி கற்றுத்தரப்படும். முன்னேற்றம் கண்டுள்ள
மேற்கத்திய நாடுகளில் தான் இத்தகைய பள்ளிகள்
பரவலாகக் காணப்படுகின்றன. ஆனால் இந்தியாவில்
துவக்கப்பெற்றுள்ள முதல் பள்ளி இதுவேயாகும்.
இத்தகைய உன்னதமான திட்டம் முதல்வரின் உடல்
ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டத்தின் ஒரு அங்க
மாக அமைந்துள்ளது.


# தமிழரசு

மலர் 5 இதழ் 11

1-12-1974




# சமண இலக்கியங்கள்

# சமணச் சிற்பங்கள்

# சமணக் கல் வெட்டுகள்

**2500** ஆண்டுகளுக்கு முன்பு கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு 599 ஆம் ஆண்டில் விதேக நாட்டில் ஒரு மன்னனுடைய வீட்டில் பிறந்த பிள்ளை வர்த்தமானர். பிள்ளைப் பருவத்திலேயே வீரச்செயல்களில் ஈடுபட்டு, தோட்டத்திலே வந்த பாம்பைக் கண்டு இளம் சிறுர்கள் எல்லாம் பயத்தோடு ஓட, தான் மாத்திரம் பயப்படாமல் அந்தப் பாம்பின் தலையில் அடியை வைத்து மிதித்து அந்தப் பாம்பைத் துரத்தி, அதற்குப் பிறகு பல வீரச் செயல்கள் புரிந்து மகாவீரர் என்ற பட்டத்தைப் பெற்றவர்; அவர் பிறந்தபோது நாட்டில் வளம் பெருகிய காரணத்தால் வர்த்தமானர் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவர்; வர்த்தமானர் என்றாலே வளத்தைப் பெருக்குபவர் என்று பொருள்பட அந்தப் பெயரைப் பெற்றவர்; பிறகு, தனக்கு நாடு தேவையில்லை என்றும், ஆட்சி தேவையில்லை; மாளிகை, இன்பங்கள் தேவையில்லை என்று அவைகளை எல்லாம் துறந்து, மக்களுக்குப் பணியாற்றித் தன்னுடைய 72 வயது வரை மக்கள் நலனுக்காகப் பணியாற்றி, மக்களுடைய உள்ளத்தில் மண்டிக் கிடந்த காட்டுமிராண்டி எண்ணங்கள், மூடநம்பிக்கைகள், கடவுளின் பெயரால் ஏற்பட்டிருந்த அறிவுக்கு ஒத்துவராத தொத்து வியாதிகள் இவைகள் அத்தனையையும் விரட்ட வேண்டுமென்று பாடுபட்டவர் தான் வர்த்தமானர்.

வர்த்தமானர் சமண மதத்தில் 24-வது தீர்த்தங்கரர்; முதலாவது தீர்த்தங்கரர் விருஷபதேவர்; அவரை ஆதி பகவன் என்றுகூட அழைப்பார்கள். அதையொட்டித் தான் திருக்குறளில் ''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு'' என்கிற அந்தக் குறளிலேகூட, வள்ளுவர் அந்த ஆதி பகவனைத் தான் சொன்னார்; வேறு கடவுளைக் குறிப்பிடவில்லை என்று வாதமிடுகிற சமண மதப் பெரியவர்களும் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன்.

தமிழர்கள் ஏற்றுக்கொண்ட ஒரு முக்கியமான நல்ல கொள்கை சமணக் கொள்கையாகும். அதற்கு ஆதாரம் சொல்ல வேண்டுமேயானால் , தமிழகத்தில் உள்ள சமணப் பெரியவர்களால் எழுதப்பட்ட நூல்களாகும். 12-வது நூற்றாண்டில் இளம்பூரணர் என்ற சமணப் புலவர் தொல்காப்பியத்திற்கு உரை எழுதியபோது அதிலே குறிப்பிட்டிருக்கிற ஒரு வாசகத்தைப் பார்த்தால், இளம்பூரணர் இலக்கணத்திற்குச் சில எடுத்துக் காட்டுகளைக் கூறுகிற நேரத்தில் கேள்விக்குப் பதில் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதற்கு உதாரணத்தைக் காட்டும்போது ''நும் நாடு யாது'' என்று கேட்கும்போது, ''எம் நாடு தமிழ்நாடு'' என்று சொல்வது தான் பதில்' என்று குறிப்பிடுகிறார்.

ஆக 11-வது, 12-வது நூற்றாண்டிலேயே இதற்குத் தமிழ்

முதல்வர் கலைஞர்



# தமிழ்நாட்டில் போற்றிப் பாதுகாக்கப்படும்

நாடு என்று பெயர் விளங்கியது. அந்தத் தமிழ்நாடு இந்தியா முழுமையும் பரவிக்கிடந்த நாடாக இருந்தது. இந்திய நாடு முழுமையும் தமிழர்கள் வாழ்ந்தார்கள்; இந்தியா முழுமையும் இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்கின்ற சமணக் கருத்துக்களை உள்ளத்தில் பதியவைத்துக் கொண்டிருந்த மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகு இறக்குமதியான சில சரக்குகள், இங்கே வந்து புகுந்து சில மூட நம்பிக்கைகள் கொஞ்சம் கொஞ்சமாக வந்தன. அப்படிப்பட்டக் கருத்துக்களை தென் புறத்திற்குக் கொண்டு வந்து, தென்னகத்திலே தமிழகத்திற்குக் கொண்டு வந்து சேர்த்து, இளைக்க வைத்து விட்டார்கள். சமணர்கள் பழி வாங்கப்பட்டார்கள். கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள்; இன்றைக்கு அந்த நிகழ்ச்சிகள் வரலாறுகளாக, புராணங்களாக, ஏன் இலக்கியங்களாகக்கூட இருக்கின்றன.

மதுரையில் நடைபெற்ற சைவ, சமணத் தகராறில் சமணர்கள் தோற்றுவிட்டார்கள் என்று சொல்லப்பட்டு - அவர்கள் தோற்றார்களோ, இல்லையோ எனக்குத் தெரியாது — ஆனால் அவர்கள் தோற்றார்கள் என்று சொல்லப்பட்டு, அவர்களைக் கழுவிலே ஏற்றிய கொடுமை நடைபெற்றது. அப்படிக் கழுவிலே ஏற்றப்பட்ட சமணர்களுடைய எண்ணிக்கை எண்ணாயிரம்பேர் என்றும் சொல்லப்பட்டது.

ஒருமுறை, ஒரு பண்டிதர், நான் மாணவனாக இருந்த பொழுது திருவாரூரில் வந்து கதாகாலட்சேபம் நடத்திய போது, 'சமணர்கள் சைவர்களிடம் தோற்றார்கள்; அப்படித் தோற்றுப்போன சமணர்கள் 8000 பேரைக் கழுவிலே ஏற்றினார்கள்' என்று சொன்னார். மாணவனாக அப்போதிருந்த நான் உடனே எழுந்து, ''சைவ மதமும், அன்பைப் போதிக்கிற மதம் அல்லவா? சமண மதமும் அன்பைப் போதித்த மதம் அல்லவா! இப்படி அன்பைப் போதிக்கின்ற மதங்களுக்கிடையே தகராறு ஏற்பட்டு அதில் சிலர் தோற்றிருந்தாலும் அன்பைப் போதிப்பதாகச் சொல்கிற சைவ மதத்தினர் சமணர்களைக் கழுவில் ஏற்றலாமா? அன்பு எங்கே போயிற்று?'' என்று கேட்டேன். உடனே அந்தப் பாகவதர் ''இந்தச் சின்னப் பையனுக்கு விஷயம் தெரியவில்லை. நான் பாட்டைச் சொல்கிறேன், கேளுங்கள்'' என்றார்.

''எண்பெருங்குன்றத்து எண்ணாயிரவரும் ஏறினார்கள்'' என்ற பாட்டைச் சொல்லிச் சமணர்கள் தாங்களே கழுவில் ஏறினார்கள் என்று பாடிக்காட்டினார். அந்தப் பாட்டு எனக்கு முன்பே தெரிந்திருந்த அக்காரணத்தால் உடனே, நான் திரும்பக் கேட்டேன். ''நீங்கள் பாட்டின் கடைசி அடியை மட்டும் பாடிக் காட்டுகிறீர்கள்! நான் முழுமையும் சொல்கிறேன் கேளுங்கள்'' என்று

''பண்புடை அமைச்சனாரும்
பாருளோர் அறியும் ஆற்றல்
கண்புடை பட்டு நீண்ட
கழுத்தரி நிறையில் ஏற்ற
எண்பெருங் குன்றத் தெண்ணாயிர வரும் ஏறினார்கள்.''

ஏற்ற, ஏறினார்கள் என்றுதான் பாட்டு இருக்கிறது. ஆகவே அவர்கள்தான் சமணர்களைக் கழுவிலே ஏற்றினார்கள் என்று நான் சொன்னேன்.

ஆகவே தமிழகத்திலே பெரியார் ராமசாமி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு அவர் வழிநின்று பேரறிஞர் அண்ணா அவர்களால் நடத்தப்பட்ட தன்மான இயக்கம்; இன்றைக்கு நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற சுயமரியாதைக் கொள்கை இவைகள் எல்லாம் வடிவெடுக்கக் காரணமாக இருந்த கொள்கைகளில் சமணக் கொள்கையும் தலையாய கொள்கை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சமணக் கொள்கைகளில் முக்கியமானது, ''உலகத்தை ஆண்டவன் படைத்தான்'' என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இன்னும் சொல்லப்போனால் ஒரு மனிதன் தன்னுடைய பாவங்களை எல்லாம் அகற்றிவிட்டால் அவனே கடவுள் ஆகின்றான். இதுதான் சமண மதத்தின் கொள்கை. ஆகவே மனிதனே தன்னைத் தெய்வமாக ஆக்கிக் கொள்ள வேண்டும்; அந்தத் தெய்வம் சிறந்த தெய்வம் என்பது சமண மதத்தின் கொள்கையாகும். அந்தக் கொள்கையோடு தான் இன்றைக்கு இந்த அரசு 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற வகையில் பணியாற்றி வருகிறது. மகாவீரர் வர்த்தமானர் எந்தக் கொள்கை மக்கள் மத்தியில் பரவ வேண்டும் என்று விரும்பினாரோ அந்தக் கொள்கைகளுக்காகப் பாடுபட்டு வருகிறோம். அது மாத்திரமல்ல; சமண இலக்கியங்கள்; சமணச் சிற்பங்கள்; சமணக் கல்வெட்டுகள் இவைகள் எல்லாம் தமிழகத்தில் போற்றிப் பாதுகாக்கப்பட தமிழக அரசு இந்த ஆண்டு மேலும் முனைப்பான முயற்சியில் இறங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[17-11-1974 அன்று சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தருகில் நடைபெற்ற வர்த்தமானர் 2500வது நினைவு நாள் விழாவில் ஆற்றிய உரை.]



குமார்

# தூய தொண்டாற்றவும்




சீரணி அமைப்பு பற்றி சட்ட மன்றத்தில் அறிவித்தபோது, இது கட்சி வளர்ச்சிக்காக அமைக்கப்படுகிறது எனச் சிலர் தவறாகப் புரிந்துகொண்டு வாதம் எழுப்பினர். அது தவறான கண்ணோட்டம் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு மேற்கொள்ளும் தூய நல்ல திட்டங்களுக்குத் துணை நிற்பது, உதவுவது, ஒத்துழைப்பது நாட்டுக் குடிமக்கள் அனைவரது பொறுப்பு. ஆனால் எல்லா மக்களும் இதில் நேரடியாக ஈடுபட இயலாது. தொழில் தொல்லைகள், குடும்ப பாரம், இன்னும் பல ஆசாபாசங்கள் அதற்குக் குறுக்கே நிற்கும். எந்தக் காலத்திலும், எந்த நாட்டிலும் மக்கள் அனைவரும் நேரடியாக இக்கடமையைச் செய்வது கடினம். எனவே அரசின் பணிகளுக்குப் பாடுபட சிலராவது முன்வர வேண்டும்.

பொதுப்பணிக்குத் தங்களை அர்ப்பணிக்க இதயம் படைத்தவர்கள், தங்களது குடும்பக் காரியங்களை கவனித்தது போக மீதமுள்ள நேரத்தை, வெறும் பொழுது போக்குக் களியாட்டங்களில் வீணடிக்காமல், நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குப் பயன்படுத்த வேண்டும். பணம் படைத்தோர் நிதியும், ஆற்றல் மிக்கவர் தம் ஆற்றலையும் அளித்து நாட்டுக்கு உதவுவது போல, மற்றவர்கள் தங்கள் நேரத்தில், உழைப்பில் ஒரு பகுதியைச் சமுதாயப் பணிக்கு அளித்திட வேண்டும் என்பதே சீரணியின் அடிப்படை நோக்கம்.

சீரணி பற்றி அறிவித்ததும், அதை யாரும் அலட்சியப்படுத்தவோ, அதில் அக்கறை காட்டாமல் இருக்கவோ முடியவில்லை. அதுபற்றி கவனித்து உடனே கருத்தும் தெவித்துள்ளனர். கருத்து தவறாக இருப்பினும் எல்லார் கவனத்தையும் ஈர்த்துள்ளது என்பதை அது காட்டுகிறது. ''ஏதோ ஒரு சீரணியாம், அது எந்த அளவுக்கு வளருமோ, எப்படி எப்படிப் பயன்படுத்தப்படுமோ!'' என்று பேசுகின்றனர். ஆக இது வளரத் தகுதியுடையது. வளரத்தான் போகிறது என்பதற்கு இதுவே நல்ல அறிகுறி. வளருவது நல்லதற்கே அன்றி, கெடுதலுக்கு அல்ல.

சீனத்துச் செங்காவல் படையுடன் சீரணியை ஒப்பிட்டுப் பேசுவது தவறு. வன்முறை குழப்பம் ஏற்படுத்துவது சீரணியின் எண்ணமல்ல. வன்முறை, ஒழுங்குபடுத்தப்பட்ட படைகளால் எப்போதும் ஏற்படுவது இல்லை. சீரணியின் நோக்கம் வன்முறை அல்ல: தூயதொண்டாற்றவும், தோழமை வளர்க்கவுமே அது அமைக்கப்பட்டுள்ளது. சாதாரண, சராசரி மக்களானாலும் தங்களது ஆற்றலை-தூய தொண்டினை-நாட்டுவளத்தைக் கூட்ட, மக்கள் வாட்டத்தைப் போக்க அளித்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்டத்திற்கு ஆயிரம் பேர் சீரணியில் சேர்ந்தால் போதுமெனக் கணக்கிட்டிருந்தோம். மாவட்டங்களிலிருந்து கிடைக்கின்ற தகவல்களைப் பார்த்தால் பலதரப்பட்டவர்களும்-வாலிபர்கள், மாணவர்கள், தாய்மார்கள் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள், கட்சிகளையே சேராதவர்கள், பல்வேறு வகுப்பினர், வகுப்புக்களே வேண்டாம் என்ற போக்கு எண்ணம் கொண்டோர், இப்படி பல திறத்தவரும்-சீரணியில் பெருமளவு சேர முன் வந்திருக்கின்றனர்.

சீரணியின் பத்துக் கொள்கைகளில் எந்தக் கொள்கைக்கும் யாரும் மறுப்புத் தெரிவிக்கமாட்டார்கள். ஏனெனில் அத்தனையும் நல்ல கொள்கைகளே. அவற்றைச் செயல்படுத்தும்போதுதான் சிக்கலும் சங்கடமும், சில வேலைகளில்

# தோழமை வளர்க்கவும்...

சஞ்சலங்கூட வரலாம். எனவே இந்தப் பணியில் ஈடுபடுவோருக்குத் தொல்லைகளைத் தாங்கும் இதயமும், எடுத்த இலட்சியத்துக்கு ஏற்பப் பாடுபடும் உறுதியும் வேண்டும்.

பழம்பெரும்நாடு, நம்நாடு; என்றாலும் ஏழ்மை இருளில் ஆழ்ந்துள்ளது. நம் நாட்டில் இயற்கை வளம் நிரம்ப இருக்கிறது. ஆனால் அந்த வளத்திற்கு உரிய செல்வ வளத்தில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட இங்கு இல்லை. நாடு வளம் பெற மக்கள் வாழ்வு செம்மையுற, சீர்பட தமிழக அரசு மட்டும் முயன்றால் போதாது.

இங்குப்பாடப்பட்ட சீரணிப் பண்ணில் முதலமைச்சர் அண்ணாதுரை ஆணைக்குக் கட்டுப்படுவோம் என்று பாடப்பட்டது. அதில் அண்ணாதுரை என்ற சொல்லை அகற்றி விட்டு வெறும் 'முதலமைச்சர்' என்று இருக்கும்படிச் செய்யலாம். யார் முதல்வரானாலும் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் அதன் நல்ல திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு உதவ வேண்டும். அரசினரால் மட்டும் எதுவும் செய்துவிட முடியாது.

சர்க்கார் பற்றற்ற, சர்க்கார் நேரடித் தலையீட்டில் வராத, ஊதியம், பணம் உத்தியோக உயர்வு கோராத 'ஒருவித படைபலம், ஒவ்வொரு நாட்டுக்கும் நிச்சயம் தேவை.

இத்தகைய படைக்கு என்ன பெயர் வைப்பது என்று பல இரவுகள் சிந்தித்தேன்; பல பகல்கள் ஏடுகளைப் புரட்டிப் பார்த்தேன். நாட்டைச் சீர்ப்படுத்த, சிக்கல்கள் நீக்கிச் செப்பனிட, சமுதாயத்தை-மக்கள் வாழ்வைச் சீரமைக்க ஓர் அணி தேவை என்று உணர்ந்தபோது, அத்தகைய சீரிய செயல்களைச் செய்யும் அணிக்குச் 'சீரணி' என்ற பெயர் பொருத்தமாயிருக்கும், என எனக்குத் தோன்றிற்று; மற்றவர்களும் அதற்கு ஒப்புதல் அளித்தனர்.

இங்கு தொண்டர்கள் அணிந்திருக்கும் சீரணி சின்னத்தில் பச்சை நிறமும் பொன்னிறமும் பொறிக்கப்பட்டிருக்கிறது. பச்சை வண்ணம் பசுமையை-வளத்தைக் காட்டுகிறது. பொன்னிறம்எங்களுக்குத் தங்கமான இதயம் உண்டு என்பதைக் காட்டுகிறது. இத்தகைய சின்னத்தைத் தொண்டர்கள் தங்கள் மார்பில் குத்திக் கொள்வது மட்டுமல்ல, இதயத்தில் இருத்திக் கொள்ள வேண்டும்.

## பேரறிஞர் அண்ணா

நாட்டுக்காக செய்ய வேண்டிய பணிகள் நிரம்ப இருக்கின்றன. சென்னை மாநகரைப் பொறுத்தவரை குறிப்பாக துப்புரவுப் பணியிலும், முதியோருக்குக் கல்வி அறிவூட்டுவதிலும் சீரணித் தொண்டர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

நகர வீதிகளில், ஏழைகள் வாழும் பகுதிகளில், வீடுகளைச் சுற்றிலும் அசுத்தம் அகற்ற-அசுத்தமாக்கும் பழக்கத்தைப் போக்க-துப்புரவுப் பணி அவசியம். கையிலே ஒரு கூட்டுக் கோலுடன், குப்பையை வாரிப் போட்டுக் கொள்ள ஓலைச்சாதனம் ஒன்றையும் கையில் ஏந்தி சீரணித் தொண்டர்கள் துப்புரவுப் பணியில் ஈடுபடுகின்ற காட்சியைக் காணுகின்ற மக்கள், நிச்சயம் தங்கள் ஒத்துழைப்பைத் தருவார்கள். மகனைப் பெற்ற எந்த மாதாவும் மறுநாள் தெருவிலே குப்பையைக் கொட்ட மாட்டார்கள்.

குப்பை என்று நான் சொல்லும்போது, குழந்தைகளைத் தெருவோரத்தில் விட்டுக் கழிக்கச் செய்யும் மலஜலத்தையும் சேர்த்தே சொல்கிறேன். 'அதையும் நாங்கள் சுத்தம் செய்வதா?' என்று நினைக்கக்கூடாது. அதை எடுக்கக் கூசுவோர், எதிரி நாட்டார் வீசும் குண்டை அப்புறப்படுத்தும் வீரனாக முடியாது. அருவருக்கத் தக்கவற்றையும் சகிப்பதுதான், அந்த அளவுக்கு



மனதைப் பக்குவப்படுத்திக் கொள்வதுதான் சிறப்பு.

அடுத்தது முதியோர் கல்வி. சென்னையில் எழுத்தறிவு பெற்றவர்கள் நிரம்ப இருந்தாலும், ஏடு படிக்க இயலாத-உலகை அறியாத பலர் உள்ளனர். அவர்களுக்கு 'அ, ஆ' 'படம், பட்டம்' சொல்லித்தர வேண்டாம். அப்படிச் சொல்லித் தருவதானால், அவர்களில் பலர் அதைக் கற்குமுன் காலமாகிவிடக்கூடும். எனவே மாநகராட்சியின் அனுமதி பெற்று, அதன் பள்ளிகள் சிலவற்றில் இரவு நேரங்களில் அப்பகுதி முதியோரைக் கூட்டி., செய்தித்தாள், நல்ல நூல்களைப் படித்துக் காட்டி விளக்கினால், அவற்றைப் புரிந்துகொண்டு விரைவில் உலக அறிவு பெறுவர். முதியோர் கல்வியில் இம்முறையைக்கையாளவேண்டும். எழுத்தின் மூலமாக அல்லாமல் எண்ணத்தின் மூலம் அறிவு புகட்டவேண்டும்.

சீரணித் தொண்டர்கள் மகத்தான பணிகள் புரிய 'வாய்ப்பிருக்கிறது. சென்னை நகரில் ஓடுகின்ற கூவத்தைச் சுத்தப்படுத்தி, உல்லாசப் படகுகள் செல்லத்தக்கதாக ஆக்க வேண்டும் என்று அமைச்சர் கருணாநிதி திட்டமிட்டிருக்கிறார். அதற்கென ஆட்கள் நியமிக்கப்படுவார்கள் என்றாலும், சீரணியினர் விரும்பினால், 'நாங்கள் 500 பேர் இப்பணியில் ஈடுபட விரும்புகிறோம்' என அதிகாரிகளுக்குத் தெரிவித்து, ஒருநாளை ஏற்பாடு செய்துகொண்டு பணி புரியலாம். அப்படி, நல்ல கட்டுடல் படைத்தவர்கள், வசதியோடு இருப்பவர்கள், எந்தப் பலனும் கேட்காதவர்கள், கண்ணியமான வாழ்க்கை நடத்துபவர்கள் ஒரு 500 பேர், 600 பேர் கூட்டமாகச் சென்று பாடுபட்டால் அந்தக் காட்சியைக் காணுகின்ற மக்கள், 'இவர்களல்லவா சீரணித் தொண்டர்கள்'! என்று வியந்து பாராட்டுவர். அதுதான் உங்களுக்குப் பரிசு. அந்த ஒரு பரிசைத் தவிர என்னிடமிருந்தோ, நாட்டு அரசிடமிருந்தோ வேறு பரிசை எதிர்பார்க்கக் கூடாது.

சென்னைப் புற நகர்களில், சுற்றுப்புற கிராமங்களில் உள்ள ஏரி, குளங்களைச் சீரமைக்கவும், சீரணி மெத்த பயன்படும்.

அரசாங்க நிதியைக்கொண்டு அதிகாரிகளைக் கொண்டு மட்டும் எதையும் சாதித்துவிட முடியாது. தொண்டர்கள், மக்களது நிரந்தர ஒத்துழைப்பும் முக்கியம். தொண்டாற்றும் எண்ணம் வளரவேண்டும். வளரும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

சீரணி மிகுந்த வெற்றியினைப் பெறும் என்ற எனது இந்த நம்பிக்கை வீண்போகாத அளவுக்குப் பணியாற்றுவார்கள் என்பதால், சீரணியை மெத்த மகிழ்ச்சியோடும், நம்பிக்கையோடும் துவக்கி வைக்கிறேன்.

*[1967-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16-ஆம் நாள் சீரணியைத் தொடங்கி வைத்து அறிஞர் அண்ணா ஆற்றிய உரையிலிருந்து....]*

---




# படமும்



உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசு போக்குவரத்து, அரசு போக்குவரத்துக் கழகங்கள், அரசு அச்சகம், துணி அட்டை சரிபார்த்தல் பயிற்சித் திட்டங்கள் 15-11-74 அன்று சென்னையில் தொடங்கப்பட்டன.

குமார் —

சிறுவாணித் திட்டப் பணிகளை முதல்வர் அவர்களும் அமைச்சர்களும் பார்வையிட்டனர்.



# செய்தியும்

உடல்ஊனமுற்றோர் நல்வாழ்வுப் பயிற்சித் தொழில் நிலையத்திற்கு செங்கற்பட்டு மாவட்டம் முட்டுக்காட்டில் 19-11-74 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.





தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியததில் 14-11-74 அன்று கூட்டுறவு வாரவிழாவை தொழிலாளர் நல அமைச்சர் தொடங்கி வைத்தார்.

சென்னை செங்கை மாவட்ட சமூக நலக் கருத்தரங்கை 19-11-74 அன்று திருமதி மதுபென்ஷா தொடங்கி வைத்தார்.





தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தில் நடத்திய கல்லூரி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டி நடைபெற்றது.

# தொண்டின் பெருமை



மாண்புமிகு பிற்பட்டோர் நல அமைச்சர்

**என். வி. நடராசன்**

'**ஊ**ர் கூடித் தேர் இழுப்பது' என்பது தமிழ்நாட்டில் வழங்கும் பழைமையான வாக்கியமாகும். பொதுப்பணிகளில்- ஊரார் அனைவருக்கும் பயன்படும் பணிகளில் எல்லாரும் ஒன்றுபட்டுப் பாடுபடுவது என்பது நம் தமிழ்நாட்டில் தொன்று தொட்டு இருந்து வரும் வழக்கமாகும். அந்தப் பண்பாட்டை இன்றையச் சூழ்நிலைக்கு ஏற்பப் புதுப்பித்துக் கொள்ளும் வகையிலே அமைக்கப்பட்டதுதான் சீரணி



மகளிர் மன்றம் தையற்பயிற்சிக் கூடத்திற்காக சேலம் மாவட்டம் வநரம்பட்டியில் சீரணியினர் உருவாக்கிய கட்டடம்.



அண்ணா அவர்கள் சீரணி அமைத்தபொழுது அச்சுறுத்தும் வகையில் ஆரூடம் கணித்தார்கள் சிலர். ஆனால், அவர்களும் ஆனந்தமடையும் வகையில் மிகச் சீரிய பணிகளைச் சீரணி செய்துள்ளது.—செய்து வருகிறது.

ஓய்வு நேரத்தில் ஊதியம் கருதாது ஊரார் அனைவருக்கும் பயன்படும் வகையில் சீரணித் தொண்டர்கள் பல அருமையான பணிகளைச் செய்துள்ளனர். இதனை சின்ன கிராமங்களிலுள்ள கட்சி சார்பு அற்றவர்கள் மட்டுமல்ல வேறு கட்சிகளில் உள்ளவர்களும் சீரணியின் தொண்டுகளை உளமாறப் பாராட்டுவதை நான் நன்கு அறிவேன்.

ஏனைய மாநிலத்தவரும் சீரணியின் அரும்பணிகளைப் புகழ்ந்துள்ளனர். சீரணி செய்து வரும் அருஞ்செயல்களைப் பற்றி மத்திய அரசின் செய்தித்துறைகூட நம் நாட்டிலுள்ள முக்கிய மொழிகளில் சீரணியின் பணிகளை விளக்கி செய்திகள் வெளியிட்டுள்ளது.

சின்னஞ்சிறு கிராமங்களில் அதுவும் நினைத்துப் பார்க்க முடியாத குக்கிராமங்களில் சீரணியினர் சாலைகள் அமைத்திருப்பதையும், வானொலி மன்றங்களுக்குக் கட்டடம் கட்டியிருப்பதையும் ஆங்காங்கே சுற்றுப்பயணம் சென்று வரும் பொழுது பார்க்கின்றேன்.

**தமிழரசு**
டிசம்பர் 16வ இதழ்
**காவல் துறைச் சிறப்பிதழாக**
மலர்கிறது

குமரி மாவட்டம் போன்ற இடங்களில் மடிச்சல் கால்வாய் அமைத்திருப்பது போன்ற மகத்தான பணிகளையும் சீரணி செய்திருக்கிறது.

சீரணியின் பணிகளைப் பொருளாதாரக் கண்ணோட்டத்தோடு பார்ப்பதை விட, அந்தத் தன்மையை ஏனைய பணிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது தான், சீரணியின் பணிகளின் அடித்தளமாக அமைந்துள்ள தொண்டின் பெருமையை மதிப்பிட முடியும்.

பள்ளிக் கட்டடங்களுக்கு வெள்ளையடிப்பது மிகச் சாதாரணமாகத் தெரியலாம். ஆனால் தொண்டுணர்வுடன் செய்யும் இந்தப் பழக்கம் ஒவ்வொருவரிடமும் வளர வேண்டும்.

அண்ணா அவர்கள் கண்ட கனவுகள் பலவற்றை நாம் நனவாக்கி வருகின்றோம். சீரணியினரும் அண்ணா அவர்கள் நினைத்தவைகளை நனவாக்கி வருகிறார்கள் என்பதை நாட்டுக்கு அறிமுகப்படுத்தும் வகையில் இந்த இதழ் தமிழரசு சீரணி பற்றிய தகவல்களை வெளியிடுவது மகிழ்ச்சிக்குரியது.

சீரணியினர் தொண்டுள்ளம் நாளும் வளர, சீரணியினர் பணிகள் பட்டி தொட்டி எங்கும் பரவிட அனைவரும் பாடுபடுவோம்! வெற்றி குவிப்போம்!

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள்!

## 1. முல்லைச் செடிக்கு உரமிடுவதில் புதிய முறை :

உழவர் பெருமக்கள் முல்லைச் செடிக்குப் பலவிதமாக உரமிடுகிறார்கள். சிலர் உரக் கலவைகளையும், மற்றும் சிலர் அம்மோனியம் சல்பேட்டு போன்ற உரங்களையும் இடுகிறார்கள். தமிழ் நாடு வேளாண்மைப்பல்கலைக் கழகம் கோவையில் ஏற்கனவே செய்த ஆராய்ச்சியில், ஒரு செடிக்கு ஒரு ஆண்டிற்கு 120 கிராம் தழைச்சத்து (நைட்ரஜன்) வீதம் (அதாவது ஒரு செடிக்கு 600 கிராம் அம்மோனியம் சல்பேட்டு —பாதி ஜனவரியிலும், பாதி ஜூலையிலுமாக) இடுவதால் விளைச்சல் அதிகமாகிறது என்று கண்டு பிடிக்கப்பட்டது. பின்னர் இதை விடக் குறைந்த அளவு தழைச் சத்தைச் செடிகளின் மீது நீரில் கரைத்துத் தெளிப்பதன் மூலம் அதிக விளைச்சலைப் பெற முடியுமா என ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. 1971 முதல் 1973 வரை நடத்திய ஆராய்ச்சியில், ஒரு செடிக்கு ஓராண்டிற்கு 60 கிராம் தழைச் சத்தை நீரில் கரைத்துத் தெளிப்பதன் மூலம் 23 சத வீதம் விளைச்சல் அதிகரித்து உள்ளது. சாதாரணமாக மண்ணிற்கு இடப்படும் 120 கிராம் தழைச் சத்து அளவில் 9.5 சத வீதம் தான் விளைச்சல் அதிகரித்தது. இதன் விவரங்கள் கீழ்க் கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது :

| | ஒரு செடியின் மகசூல் (கிலோ) 3 ஆண்டுச் சராசரி | தழைச்சத்து இடாத செடியைவிட அதிக விளைச்சல் (சதவீதம்) |
|---|---|---|
| 60 கிராம் தழைச்சத்து தெளித்தல் | 15.6 | 22.9 |
| 120 கிராம் தழைச்சத்தை மண்ணில் இடுதல் | 13.9 | 9.5 |
| தழைச்ச த்து இடாதது | 12.7 | ... |

ஆகவே மண்ணில் இடும் அளவில் பாதியைச் செடியின் மீது தெளிப்பதால் அதிக விளைச்சல் பெறலாம் என்பது தெளிவாகிறது. இதற்கு யூரியாவை நீரில் கரைத்து (ஒரு சதவீதம்) 12 தடவைகள் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். முதல் எட்டு தடவைகள் மார்ச்சு முதல் ஜூன் வரை மாதத்திற்கு இரு முறையும், மற்ற நான்கு தடவைகள் மாதத்திற்கு ஒரு முறை ஜூலையிலிருந்து அக்டோபர் வரையிலுமாகத் தெளிக்க வேண்டும்.

இம்முறையில் தழைச்சத்து அளிப்பதில் செலவும் குறைகிறது! ஒரு செடிக்கு 60 கிராம் தழைச் சத்து வீதம் தெளிக்க ஒரு ஏக்கராவுக்கு 144 கிலோ யூரியாதான் தேவைப்படுகிறது. ஒரு செடிக்கு 120 கிராம் தழைச் சத்தை மண்ணில் இடுவதற்கு ஒரு ஏக்கராவுக்கு 720 கிலோ அம்மோனியம் சல்பேட்டு தேவைப்படுகின்றது. ஆகவே, ஒவ்வொரு செடிக்கும் 60 கிராம் தழைச் சத்து அளிக்க யூரியாவை நீரில் கரைத்து தெளிப்பதன் மூலம் உரமிடும் செலவில் ஏக்கருக்கு ரூபாய் 500 குறைகிறது. அத்துடன் விளைச்சலும் அதிகமாகின்றது.



## 2. சோளத்தின் இலைப்புள்ளி நோய்களும், தடுப்பு முறைகளும்:

பெருந் தானியங்களில் ஒன்றாகிய சோளம் தமிழ் நாட்டில் ஓர் முக்கிய உணவுப் பயிரும், தீவனப் பயிருமாகும். இப் பயிர் 5.9 இலட்சம் எக்டேரில் மானாவாரிப் பயிராகவும், 1.2 இலட்சம் எக்டேரில் இறைவைப் பயிராகவும் தமிழ் நாட்டில் பயிரிடப்பட்டு ஓர் ஆண்டிற்கு 5.5 இலட்சம் டன்கள் தானியம் உற்பத்தி செய்யப் படுகிறது.

பலவித இலைப் புள்ளி நோய்கள் சோளப் பயிரைத் தாக்கி விளைச்சலைக் குறைக்கின்றது. இந் நோய்களால் உண்டாகும் சேதம் கால நிலைக்கு ஏற்பவும், சோள வகைகளுக்கு ஏற்பவும் வேறுபடுகிறது. இலைக் கருகல் நோயும், சொறி நோயும் இலைப் புள்ளி நோய்களில் முக்கியமானவை. இந் நோய்கள் இளம் நாற்றுக்களில் தோன்றுமானால், ஏறத்தாழ விளைச்சலில் 30 சதவிகிதம் குறைகிறது. சாதாரணமாக இலைக் கருகல் நோய் சோளம் விதைத்த 30—35 நாட்களிலும், சொறி நோய் சோள விதை விதைத்த 45—50 நாட்களிலும் தோன்றுகின்றது.

உருண்டை அல்லது நீண்ட உருண்டை வடிவ சிவப்புக் கலந்த பழுப்பு நிறச் சொறிகள் இலைகளின் இரு புறங்களிலும் தோன்றி கறுப்பாக மாறுகின்றன. இந்த கொப்புளங்களின் நிறம், சோள வகைகளுக்குத் தக்கபடி மாறும். செடியின் அடி இலைகள் முதலில் இப் பூஞ்சாளத்தினால் பாதிக்கப்பட்டு, பின்பு இந் நோய் செடியின் மேலுள்ள இலைகளுக்குப் பரவுகிறது. இந் நோய் முற்றும் தருணத்தில் இப் பகுதிகள் ஒன்றோடு ஒன்று இணைந்து காய்ந்துவிடுகின்றன. இளம் பயிர்கள் இந்நோயால் தாக்குண்டால் விளைச்சல் அதிகமாகக் குறைகிறது. மழைக் காலங்களிலும், காற்றில் ஈரச் சத்து அதிகமாக உள்ள நேரங்களிலும் இந் நோயால் தாக்குண்ட செடிகள் வளர்ச்சி குன்றி இருப்பதைத் தூரத்திலிருந்தே காணலாம்.

பெரிய, நீண்ட, நாற்கண்டு வடிவ பழுப்பு நிறப் புள்ளிகள் இலைகளில் தோன்றுகின்றன. இப் புள்ளிகள் சாதாரணமாக இலையின் நுனியில் தோன்றி, பின்பு ஓரங்களில் பரவுகின்றன. இப் புள்ளிகள் வைக்கோல் நிற மையமும், அடர் பழுப்பு நிற ஓரமும் கொண்டவை. காற்றில் ஈரச் சத்து அதிகமாக உள்ள காலங்களில் இப்புள்ளிகள் ஒன்றோடொன்று இணைந்து இலை முழுவதும் பரவி இலை கருகிவிடுகிறது. இப்பூஞ்சாளம் உள்ள விதைகள் முளைக்காமல் அழுகிவிடுகின்றன. இந் நோய் வாய்ப்பட்ட இளஞ் செடிகள் கருகிவிடுகின்றன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 1971, 1972-ஆம் ஆண்டுகளில் மூன்று பருவங்களில் சொறி நோய், இலைக் கருகல் நோய் ஆகியவற்றைத் தடுக்க, ஏழு பூஞ்சாளக் கொல்லிகள் வயலில் பரிசோதிக்கப்பட்டன. இப் பூஞ்சாளக் கொல்லிகள், சோளப் பயிர் முளைத்த 30, 60, 75 நாட்களில் தெளிக்கப்பட்டன.

'சினப்' 0.2 சதம், சொறி, இலைக் கருகல் நோய்களைத் தடுப்பதிலும், தானியம், தட்டு ஆகியவற்றின் விளைச்சலை அதிகரிப்பதிலும் தலைசிறந்து விளங்கியது. இப் பூஞ்சாளக் கொல்லி தெளிப்பதால், ஒரு எக்டேருக்கு சுமார் 720 ரூபாய் அதிக நிகர வருவாய் கிடைக்கிறது. 'சினப்' மருந்திற்கு அடுத்தபடியாக, 'தைரம்' 0.2 சதம் என்ற மருந்து, இவ்விரு நோய்களையும் கட்டுப்படுத்தியது. 'தைரம்' தெளித்ததால் எக்டேருக்கு சுமார் ரூபாய் 440 அதிக நிகர வருவாய் கிடைத்துள்ளது.

## 3. தமிழ்நாட்டிற்கேற்ற அமோக விளைச்சல் தரக்கூடிய சாம்பல் நோய்த் தாக்காத ஓர் சோள ரகம், சி.எஸ். 3541.

தமிழ் நாட்டில் 'கீழ்ச்சாம்பல்' நோய் சோளப்பயிரைத் தாக்கி மிகுந்த சேதம் விளைவிக்கிறது. சோளத்தின் இளம் பயிரிலிருந்து முற்றின பயிர் வரை இந்நோயைக் காணலாம். இந்நோய்த் தாக்கப்பட்ட சோளப்பயிர் இலைகளின் அடியில் வெண்மையான பூசாணம் தோன்றும். பின்பு இப்பூசணம் இலை முழுவதும் பரவி, இலையின் மேற்புறம் மஞ்சளாகத் தோன்றும். இந்நோய் மிகுதியாகப் பரவப்பரவ, இலைகளில் வெண்மை கலந்த பசுமைக் கோடுகள் தோன்றி பழுப்பாக மாறுகின்றன. பின்பு இலைகள் இக்கோடுகளின் வழியே நார் நாராகக் கிழிகின்றன. இளஞ் செடிகள் இந்நோயினால் தாக்கப்பட்டால் வளர்ச்சியடைவதில்லை. கதிர்களும் தோன்றுவதில்லை. ஆகவே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் இந்நோய் தாக்காததும், அதிக மகசூல் தரக்கூடியதுமான சோள ரகங்களைக் கண்டு பிடிக்க ஆராய்ச்சி தொடங்கப்பட்டது.

சோளத்தில் அதிக மகசூல் கொடுக்கக்கூடிய ஐந்து புதிய ரகங்களான 'சி.எஸ். 3541' '555', '148', 'சுவர்ணா', '604' ஆகியவை 'கோ. 18' சோள ரகத்தோடு சேர்த்து அடிச்சாம்பல் நோய்க்காக முதன்மைப் பயிரிலும், மறு


சி.எஸ். 3541. சோளம்

தாம்புப் பயிரிலும், ஆராய்ச்சிக் கூடத்திலும் ஆராயப்பட்டது.

இந்த ரகங்கள், அடிச்சாம்பல் நோய்ப் பூசணவித்துக்கள் நிறைந்த நிலத்தில் பயிரிடப்பட்டன. அடிச்சாம்பல் நோயால் தாக்கப்பட்ட இலைகள் தூளாக்கப்பட்டு, 5—8 செ.மீ ஆழத்தில், 40 சதுர மீட்டருக்கு ஒரு கிலோ இலைத்தூள்கள் என்ற விகிதத்தில் புதைக்கப்பட்டு, அடிச்சாம்பல் நோய் பூசணம் நிறைந்த நிலம் உண்டாக்கப்பட்டது. மேலும் ஆராய்ச்சியில் உள்ள இந்த ஐந்து ரகங்கள் 25 நாட்கள் வயது இருக்கும்பொழுது, அடிச்சாம்பல் நோய்த் தாக்கப்பட்ட இலைத்தூள்கள் செடிகளின் குருத்துக்களில்—அதிக ஈரம் சூழ்ந்த நிலையில்-இடப்பட்டன. விதைத்ததிலிருந்து அறுவடையாகும் வரை இப்பயிர்களுக்கு எந்தவிதமான பயிர் பாதுகாப்புக் கட்டுக்கோப்பு முறையும் அனுசரிக்கப்படவில்லை. இந்த ஆராய்ச்சியின் முடிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆராய்ச்சிச் செய்யப்பட்ட ரகங்கள் | 1973 பருவ காலம் | | |
|---|---|---|---|
| | முதன்மைப் பயிரில் அடிச் சாம்பல்நோய் தாக்குதல் சதவிகிதம் | மறுதாம்புப் பயிரில் அடிச் சாம்பல் நோய் தாக்குதல் சதவிகிதம் | ஆராய்ச்சிக் கூடத்தில் அடிச் சாம்பல் நோய் தாக்குதல் சதவிகிதம் |
| 148 | 0.1 | 7.2 | 8.6 |
| 555 | 13.2 | 82.8 | 93.2 |
| சி.எஸ். 3541 | தாக்குதல் இல்லை | தாக்குதல் இல்லை | தாக்குதல் இல்லை |
| சுவர்ணு | 0.8 | 21.2 | 36.9 |
| 604 | 5.5 | 62.9 | 57.7 |
| கோ. 18 | 6.0 | மறுதாம்புப் பயிர் செய்யப் படவில்லை. | 31.2 |

மேலே கண்ட அட்டவணையிலிருந்து 'சி. எஸ். 3541' என்ற சோள ரகம் அடிச்சாம்பல் நோயினால் முதன்மைப் பயிரிலும், மறுதாம்புப் பயிரிலும், ஆராய்ச்சிக்கூடத்திலும் ஒருவிதமான தாக்குதலும் இல்லாமல்இருப்பதைக் காணலாம். மேலும் இந்த 'சி.எஸ். 3541' என்ற ரகம் அதிக மகசூல் கொடுக்கும் தன்மையுடையது. இந்த ரகம் மானாவாரிப் பயிராகவும், இறைவைப் பயிராகவும் பயிரிட ஏற்றது. இந்த ரகம் இறைவைப் பயிரில் ஒரு எக்டேருக்கு 5,000-5,500 கிலோ தானியமும், 10,000 கிலோ தட்டும் கொடுக்க வல்லது. இந்த ரகம் முத்து வெள்ளை நிறமான தானியம் கொண்டது. இத்தானியம் மிகுந்த மழையில் நனைந்தாலும் கெடாத தன்மையுடையது.

ஆகவே, 'சி.எஸ். 3541' என்ற சோள ரகம் அதிக மகசூல் தருவதாலும், அடிச்சாம்பல் நோய் தாக்காததுமாக இருப்பதால் இறைவைப் பயிராகவும், மானாவாரிப் பயிராகவும் தமிழ்நாட்டில் பயிரிட ஏற்றது என்பது தெளிவாகிறது.

தகவல் :—

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

## நம் நாட்டில் வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள்

* நம்நாட்டில் இப்போது 19 வேளாண்மைப் பல்கலைக் கழகங்களும், 71 வேளாண்மைக் கல்லூரிகளும் உள்ளன.


* ஐந்தாவது திட்டகாலத்தில் உத்தரப் பிரதேசத்தில் மேலும் இரண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகங்களையும், ஜம்மு காஷ்மீரில் ஒரு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தையும் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

* 1969 முதல் 1971 வரையிலான காலத்தில் நாட்டில் உள்ள விவசாயப் பல்கலைக்கழகங்களில், சராசரியாக ஆண்டுக்கு 7,159 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

* எத்தனை மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை அந்தந்தப் பல்கலைக் கழகங்களே முடிவு செய்கின்றன. மாநில அரசுகளின் தேவை, அரசு சார்பற்ற நிறுவனங்களின் வேலைவாய்ப்பு, சொந்த வாய்ப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு மேற்கொள்ளப்படுகிறது.

* விளைபொருள் உற்பத்தியைப் பெருக்குவதில் வேளாண்மைப் பட்டதாரிகள் பயனுள்ள வகையில் பணிபுரிவதற்கு ஏற்ப, அவர்களுக்குப் போதிய செய்முறை வாய்ப்புகள் அளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# விடியாத இரவுகள் விடிகின்றன



## மாமல்லன்

உறக்கத்தில் கேட்பதுபோல் தூரத்துத் தார் ரோட்டில் ஐந்து மணி பி.ஆர்.சி. பஸ் போகும் இரைச்சல் கேட்டது. வெறிச்சோடிக் கிடந்த தெருவில் திடீரென ஒரு குழந்தை அழுவது கேட்டதும் தாவாரத்துக் கயிற்றுக் கட்டிலில் முடங்கிக்கிடந்த பேச்சிக் கிழவி, கண்ணிமைகள் படபடக்க எழுந்து உட்கார்ந்து கொண்டு, ''வேலம்மா .....! என்னடி இன்னைக்கி நேரத்தோட வந்துட்டே?! ஆரு காட்டுக்கு வேலைக்கி போனே ? என்று கேட்டாள். கிழவிக்குக் கண் பார்வை இல்லாவிட்டாலும் காதும் கவனமும் மிகவும் கூர்மை. அந்தக் கைக்குழந்தையின் அழுகுரலை இனம் வைத்து அங்கே வேலம்மாதான் வந்து கொண்டிருக்க வேண்டும் என்ற துல்லியமான தீர்மானத்தோடு கேட்டாள். இந்த விஷயத்தில் பேச்சிக் கிழவி ''பொல்லாதவள்''. இரண்டு தெருக்கள் தள்ளி ஒரு எருமை கத்தினாலும் அது யார்வீட்டு எருமை என்பதை அணுப் பிசாகாமல் அடையாளம் சொல்லுவாள்.

''இன்னைக்கி தனுக்கோடி மாமனுக்கு மந்தக்காட்லகளே வெட்டுனோம். கள அம்புட்டு ரொம்ப இல்ல. அதான் நேரத்தோட வந்துட்டோம்.'' என்று வேலம்மா பதில் சொல்லிவிட்டு, இடுப்பிலிருந்து கத்திய குழந்தையைக் களைப்போடு இறக்கிச் சக்கென்று தரையில் இருத்தி வைத்துவிட்டுக் கதவைத் திறந்தாள். வேலம்மாவுக்குப் பக்கத்து வீடுதான்.

''அந்தக்காட்ல எப்பவுமே கள மத்திமமாத்தான் இருக்கும். ரெண்டு குறுக்கம்காடு. பதுனஞ்சு ஆள் உடுவாக. லாத்தலா எடுத்துட்டு நாலு நாழியப் பொழுது இருக்கவே கரையேறிடுவோம். ஹூம்.... (பேச்சிக்கிழவி தான் முன்பு களையெடுக்கப் போனதை நினைத்துப் பெருமூச்சு விட்டாள்)...இன்னைக்கி எத்தன ஆள் எடுத்திக.....?''

''இன்னைக்கும் பதுனஞ்சு ஆள்தான்.''—வேலம்மா வீட்டிற்குள்ளிருந்து குழந்தையை மடியில் போட்டுப் பால் கொடுத்தவாக்கில் பதில் சொன்னாள்.

''எங்க வூட்டு தாடவ இன்னைக்கி ஒங்ககூட வேலக்கி வரலியா?''

''இல்ல. அவ இன்னைக்கி எலந்தா ஊரணிக் காட்டுக்குப் போயிருக்கா.''

**முதல் பரிசு பெற்ற சிறுகதை**

''ஆருகூட.....?''

''மேலத்தெரு வெள்ளச்சி கூட......''

''சம்வ்வேல் தேவரு காட்டுக்காடீ......?''

''ஆமோவ்....''

''அப்போ வெளங்குளப் புலதான். அவ வாறதுக்கு இன்னைக்கி மசங்கிரும்''.—பேச்சிக்கிழவி சோர்வடைந்து மௌனமாகிவிட்டாள்.

பேச்சிக்கிழவிக்கு வயது அறுபதுக்கு உட்படத்தான் இருக்கும். இளம் வயதிலேயே தாலியறுத்துவிட்டு விதவையாகி வெள்ளைச் சேலை கட்டிக் கொண்டு காடுகரைக்குக் கூலி வேலைக்குப் போக ஆரம்பித்து விட்டதால் விரைவாகவே இளமையையும், பொலிவையும் இழந்து கிழவிபோலாகிவிட்டாள். பேச்சிக் கிழவிக்கு ஒரே ஒரு மகன் இருந்தான். அவனும், கல்யாணமாகி நான்கைந்து வருடங்கள் வெறும் வாழ்க்கை வாழ்ந்துவிட்டு ஒரு பிள்ளைகூட இல்லாமல் அற்பாயுளில் செத்துப் போனான்.



இப்போது அந்த வீட்டில் கிழவியும் அவள் மருமகளுமாகத்தான் இருக்கிறார்கள்.

நல்ல நாளிலேயே மாமியார் என்றால் மருமகளுக்கு எட்டிக் காயாகத்தான் இருக்கும். கண் தெரியாமல் வீட்டோடு கிடக்கும்போது கேட்கவேண்டுமா? மருமகள் உழைத்து மாமியாளுக்கு ஊத்தவேண்டியநிலைமை வந்ததும் மருமகளின் கை வெகுவாக ஓங்கிப்போயிற்று. பாவம் பேச்சிக்கிழவி! மருமகள் வேண்டா வெறுப்பாய் முனங்கி முனங்கி ஊற்றுவதை மறுபேச்சுப் பேசாமல் குடித்து விட்டு, அந்த கயிற்றுக் கட்டிலும், தாவாரமுமே கதியாய்க் கிடந்தாள்.

பேச்சிக்கிழவி இரண்டு வருடங்களுக்கு முன்னால் வரை வேலை வெட்டிக்குப் போய்க் கொண்டுதானிருந்தாள். அவள் கண்பார்வை கொஞ்சங் கொஞ்சமாக மங்கிக்கொண்டே வந்தது. எதிரேவரும் உருவம் 'துலாம்பரமாக' அடையாளம் தெரியாவிட்டாலும் மங்கலான உருவமாய்த் தெரியும் வரை அவள் வேலைக்குப் போனாள். ஒருநாள் அப்படி வேலைக்குப் போய்விட்டு வீட்டிற்கு வந்து சாப்பிட்டுவிட்டுக் களைப்போடு இரவில் படுத்தாள். படுக்கும்போதே இலேசான தலைவலி இருந்தது. சிறிது நேரத்தில் தலை விண் விண்ணென்று தெறிக்க ஆரம்பித்தது. உறங்கவும் முடியாமல் கண்ணைத் திறக்கவும் முடியாமல் விடிய விடிய அனத்திக் கொண்டே புரண்டுவிட்டு அதிகாலையில் விழித்துப் பார்த்த போது பார்வை சுத்தமாக இருண்டு போயிருந்தது. அவளைப் பொறுத்தவரை அன்று இருட்டிய இரவு இன்னும் விடியவேயில்லை.

கண்பார்வை மட்டும் இருந்தால் கிழவியால் இன்றுகூட வேலைக்குப் போய் ஒன்றரை ஆள் வேலையைச் சாய்க்க முடியும். அவள் உடம்பில் இன்னும் அந்த அளவுக்குத் தெம்பு இருக்கிறது. வெறும் தெம்பு மட்டும் இருந்து என்ன செய்ய? அவள் அதை நினைத்துத்தான் அடிக்கடி மனம் நொந்து கொள்வாள். தன் பார்வை போனதைக்கூட அவளால் சகித்துக் கொள்ள முடியும் போலிருந்தது, ஆனால் அந்த நிரந்தர இருட்டுக்குள் சிறைப் பட்டு அந்தக் கயிற்றுக் கட்டிலே கதியென்று கிடக்க வேண்டியிருப்பதையும், வேலை வெட்டிக்குப் போக முடியாமல் சும்மா இருப்பதையும்தான் அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவள் கால்கள் வெகுதூரம் நடக்கத் துடிக்கின்றன. அவள் கைகள் ஏதாவது வேலை செய்வதற்காகச் சதா பரபரக்கின்றன. ஆனால் அந்தத் துடிப்பையும், பரபரப்பையும் அடக்கி அடக்கிச் சாகடிக்க வேண்டியிருக்கிறதே அதுதான் அவளுக்குத் தீராத மனவேதனையாயிருந்தது.

பேச்சிக்கிழவி வெகுதூரம் பேசாமல் அப்படியே உட்கார்ந்திருந்தாள். அவள் கவனம் தன் மருமகள் எப்போது வருவாள் என்பதிலேயே, அடிக்கடி குவிந்து நின்றது. அவளுக்கு அப்போது பசியாயிருந்தது. அதிகாலையில் அரைப்படி பிடிக்கிற ஒரு அலுமினியக் குவளையில் அவள் மருமகள் கம்மங்கஞ்சியைக் கரைத்து நாய்க்கு ஊற்றுவது போல் ஊற்றிப் போட்டுவிட்டு பக்கத்திலேயே இரண்டு 'ஈராங்காயத்தையும்' போட்டு விட்டுக் கதவை இழுத்துப் பூட்டிக்கொண்டு போய்விட்டாள். காலையில் அதைக் குடித்த பிறகு இந்நேரம் வரையிலும் பச்சைத் தண்ணீர்கூடப் பல்லில் படவில்லை. இனி எந்நேரம் மருமகள் வந்து கம்பு இடித்துக் கஞ்சி காய்ச்சி இவளுக்குத் தரப் போகிறாளோ?

கிழவி மீண்டும் வேலம்மாவோடு பேச்சு கொடுத்தாள்.

''யடி வேலம்மா.....!'''

''ஓய்.........!''

''என்ன செய்யிற?''

''கைகால்லாம் ஓஞ்சிக்கிட்டு வந்துச்சி, சித்த படுத்திருக்கேன்,''



''நேரம் இருட்டிடுச்சி...?'''

''இப்பத்தான் மம்மலா இருக்கு''

''நீ கஞ்சி காச்சலயா?''

''இல்ல. நேத்து காச்சின கஞ்சி இம்புட்டூண்டு கெடக்கு. இன்னக்கிக் காணும்.''

பேச்சிக்கிழவி மீண்டும் அமைதியானாள். அப்போது வேலம்மாவிடம் கொஞ்சம் கஞ்சி வைத்துக் கரைத்துத் தரச் சொல்லிக் குடிக்கலாமா என்று அவளுக்கு எண்ணம் ஓடிற்று. ஆனால் அதற்குத் தயக்கமாக இருந்தது. கேட்போமா, வேண்டாமா என்று அவள் தன் மனத்துக்குள்ளேயே போராடிக் கொண்டிருந்தாள். தந்தால்தான் ஆயிற்று. கேட்டும் கேட்காது போல் இருந்துவிட்டால்? அல்லது 'கஞ்சி கொஞ்சமாத்தான் கெடக்கு' என்று அவள் சொல்லிவிட்டாளானால் அந்த அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியாதே என்ற பயமும் ஏற்பட்டது. ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாகப் பசிமயக்கமும் நாவறட்சியும் அவளைக் கிறக்கின.

''வேலம்மா......''

''ஓய்.....''

''தண்ணி தாகமா இருக்குடி. இத்தனூண்டு கஞ்சி வெச்சி கரச்சி தண்ணி தரமாட்ட ?''

''...............''

வேலம்மாவிடமிருந்து பதில் ஏதும் வராததால் கிழவிக்கு 'திக்' கென்று நெஞ்சை அடைத்தது. மனத்துடிப்போடு மீண்டும் ஒரு குரல் கொடுத்தாள்.

''வேலம்மா......''

''ஓய்....! கேட்டுச்சி. தோ.. கரச்சிக் கொண்டாறேன்.''

கிழவியின் துடிப்பு அப்போதுதான் அடங்கிற்று. சிறிது நேரத்தில் ஒரு கும்பாவில் கஞ்சி வைத்துக் கரைத்து உப்புப் போட்டுக் கலக்கிக் கொண்டு ஒரு அலுமினியத்தம்ளரும், இரண்டு மிளகாய் வற்றலும் எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். கிழவியின் அருகில் வந்து நின்று கொண்டு அவள் கையைப் பிடித்து ''இந்தா. . . தம்ளரைப் புடிச்

சுக்க, ஊத்தறேன்.'' என்று சொல்லி தம்ளரைக் கொடுத்துவிட்டு கும்பாவிலிருந்த கஞ்சியைக் கலக்கி ஊற்றினாள். கடித்துக் கொள்வதற்கு ஒரு மிளகாய் வற்றலையும் அவள் கையில் கொடுத்தாள் மிளகாய் வற்றலை வாங்கி ஒரு கடி கடித்துக்கொண்டு, பசியின் வேகத்தில் கிழவி கஞ்சியை மடமடவென்று குடித்தாள். அவளுக்குப் புரையேறிற்று. ''மொள்ளமா குடியேன். என்ன அவசரம்?'' என்று சொல்லிக்கொண்டே வேலம்மா கிழவியின் உச்சந்தலையில் மெள்ளத்தட்டினாள். பிறகு இரண்டாவது முறையாகத் தம்ளரை நிரப்பினாள்.

அந்நேரம் பார்த்துக் கிழவியின் மருமகள் ஆவடை வீட்டிற்கு வந்து விட்டாள். அங்கே நடந்த காட்சியைக் கண்டதும் ஆவடைக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது.

''கெழட்டு முண்ட. வீடு வீடா வாங்கிக்குடிக்க ஆரம்பிச்சுட்டியா? குடி..குடி. ஒன் இஷ்டம்போல கொற நாளைக்கும் இப்பிடியே வீட்டுக்கு வீடு பிச்சை எடுத்து குடிச்சிக்க. இன்னமே நான் கஞ்சி ஊத்துவேண்ணு மட்டும் சிந்தயில நெனச்சிராத....'' என்று பலமாகக் கத்திக் கொண்டே போய் கதவைத் திறந்தாள்.

இந்த சனியனை எப்போது தொலைக்கலாம்' என்று காத்துக்கொண்டிருந்த ஆவடைக்கு இது ஒரு சரியான சந்தர்ப்பம் கிடைத்ததுபோல் ஆயிற்று. இதுதான் சாக்கென்று வைத்து மாமியாளை இத்தோடு தலை முழுக வேண்டும் என்று ஆவடை முடிவு செய்து கொண்டாள். உண்மையில் ஆவடையின் எண்ணம், 'குருட்டு முண்ட எங்கனையும் நாலு வீட்ல போயி வாங்கிக் குடிச்சா என்ன ? இதுலயே கெடந்து நம்ம உசிர வாங்குறாளே......' என்பதுதான்.

ஆவடை வீட்டிற்குள்ளிருந்து கிழவியின் ஒரு பழைய சேலையையும், அவள் சாப்பிடுகிற இன்னொரு அலுமினியத் தட்டையும், ஒரு பித்தளைத் தம்ளரையும் வெளியே தூக்கி வீசினாள். ''இந்த...ஒன் சாமானல்லாம் இந்தா கெடக்கு. நீ எங்கினயும் போயி வாங்கிக் குடிச்சிக்க.'' என்று தீர்மானத்தோடு, ஒரு பெட்டியில் கம்பும், ஒரு குண்டாச் சட்டியில் தண்ணீரும் எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள்.



தெருவோரம் கிடந்த உரலுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, பெட்டியிலிருந்த கம்பை குண்டாச்சட்டித் தண்ணீருக்குள் கொட்டி, அலசி, அரித்து உரலில் போட்டுக்கொண்டு, உலக்கையை எடுத்துத் 'தக்..., தக்..' கென்று இடிக்க ஆரம்பித்தாள். கம்பு இடிக்க இடிக்கக் கிழவியையும் கிழவிக்குக் கஞ்சி ஊற்றிய வேலம்மாவையும் சாடையிலுமாக இரண்டு 'பாட்டம்' ஆபாசமான வார்த்தைகளால் திட்டிவிட்டு, இடித்த கம்பைத் தோண்டிக்கொண்டு வீட்டிற்குள் போனாள். பேச்சிக்கிழவியோ, பக்கத்துவிட்டு வேலம்மாவோ, ஆவடையை எதிர்த்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அவளிடம் வாய் கொடுத்துவிட்டு மீள முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும்.

ஆவடை அடுப்புப் பற்றவைத்து சோறு பொங்கி முடிப்பதற்கு இரவு பத்து மணிக்கு மேலாகிவிட்டது. அதுவரை பேச்சிக்கிழவியும் தன் குருட்டுக் கண்களைக் கொட்டக் கொட்ட விழித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். ஆவடை தனக்குச் சோறு தருவாள் என்று எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தாள். ஆனால் ஆவடை, கிழவிக்குச் சோறு கொடுக்கவேயில்லை. அவள் மட்டும் வேக வேகமாகச் சாப்பிட்டுவிட்டுப் பாத்திரங்களை கழுவிக் கவுத்திவிட்டு, கிழவியின் காதில் நன்றாக விழட்டும் என்று கதவை ஓங்கித் தள்ளி ஓசைப்படச் சாத்திக்கொண்டு வீட்டிற்குள் படுத்துவிட்டாள்.

அதைப் புரிந்து கொண்டதும் பேச்சிக்கிழவிக் கட்டிலில் உட்கார்ந்து சுவரோடு சாய்ந்துகொண்டு கண்ணீர் விட்டு மௌனமாக அழுதாள். அந்தக் குருட்டுக் கண்களுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு கண்ணீர் வந்ததோ? பிறகு நடுச்சாமத்தைப் போல் அவளால் பசி தாங்க முடியாமல் போனபோது அவள் பெரிதாய் ஒப்பாரி வைத்து அழ ஆரம்பித்துவிட்டாள். அவள் தனக்கு ஏற்பட்டுவிட்ட அவல நிலையை எண்ணி உருகி ஓலமிட்டாள். பிறகு தன்னை இப்படி நிராதரவாய் தவிக்க விட்டு விட்டுச் செத்துப்போன தன் கணவனையும், மகனையும் வைது வைது ஒப்பாரி வைத்து அழுதாள். அந்த நள்ளிரவின் அமைதியில் அந்தக் கிழவியின் அழுகுரல் ஊரெங்கும் கேட்கும்படியாகத்தான் ஒலித்தது. பலன்..........?'

மறுநாள் விடிந்தது.

ஆவடை எழுந்து, இன்னும் அதே வேகத்தோடு பாத்திரம் தேய்த்துப் பல் விளக்கி, கஞ்சி ஊற்றிக் குடித்து விட்டு, வீட்டை இழுத்துப் பூட்டிக்கொண்டு வேலைக்குப் போய் விட்டாள். அப்போதும் அவள் கிழவிக்குக் கஞ்சி கொடுக்கவே இல்லை. தூக்கமோ அல்லது பசியின் மயக்கமோ? கிழவி கட்டிலில் சாய்ந்துகிடந்தாள்.

வெயிலேறிற்று. பருத்திக் காட்டுக்குக் களையெடுப்பு நேரமானகையால் ஊருக்குள் ஆள்நடமாட்டம் குறைந்துகொண்டே வந்தது. சின்னஞ்சிறுசுகளெல்லாம் பள்ளிக்கூடம் போய்விட்டன. வேலம்மாவும் களைக்குப் புறப்பட்டாள். அவள் மறுபடியும், காலையில் பொங்கிய சோற்றை ஒரு தட்டில் போட்டுக் கொண்டு வந்து கிழவியை எழுப்பினாள். கிழவி எழுந்து உட்கார்ந்தாள். ஆனால் அந்தச் சோற்றைச் சாப்பிடப் பிடிவாதமாக மறுத்துவிட்டாள்.

''வேலம்மா, எனக்குக் கஞ்சியும் தந்துட்டு, அந்த தாடவ வையுற வசவையும் எதுக்குடி நீ கேட்கணும்? எனக்குச் சோறு வாண்டாம்! நான் சாப்பிட மாட்டேன். எனக்குத்தான் அவ வையுறத கேக்கவேண்டிய விதியிருக்கு. நீயேன் கேக்கணும்? அந்த முண்டச்சி ஒன்ன என்னென்ன சொல்லி வையிறா பாத்தியா ? இந்தா பாரு. அவ நாசமாத்தான் போயிருவா! என்னைய இப்பிடி வயிறெரிய வைச்சிட்டு அவ ஒருநாளும் வெளங்மாட்டா...'' என்று ஆத்திரத்தோடு சாபமிட்டாள். வேலம்மாவும் காட்டுக்கு, வேலைக்குப் போனாள்.

சிறிது நேரத்தில் பேச்சிக் கிழவியின் மனத்தைப்போலவே அந்தத் தெருவும் வெறிச்சோடிப் போயிற்று.

அன்று மாலை காடுகரைகளிலிருந்து ஜனங்கள் வீடுதிரும்பியபோது பேச்சிக்கிழவியை அந்தத் தாவரத்தில் காணவில்லை. அவள் படுத்திருந்த கயிற்றுக்கட்டில் சுவரோரம் சாத்தி வைக்கப்பட்டிருந்தது. அவள் எங்கே போனாள்? என்ன ஆனாள்? என்பது யாருக்குமே தெரியாமல் போயிற்று. தெருவில் ஆண்களும் பெண்களுமாகக் கும்பல் கும்பலாய் நின்றுகொண்டு கிழவியைப் பற்றிப் பேசித் தங்களுக்குள் 'ஆற்றாமைப்பட்டு'க் கொண்டார்கள்.

''பாவம், கண்ணு தெரியாம எங்கபோயி தடுமாறிக்கிட்டு கெடக்குறாளோ?''

''எங்கயாச்சும் கெணத்துகளுக்குள்ள போயி விழுந்து செத்திருப்பாளோ?'

''எங்கிட்டும் போயி நாண்டிக்கிட்டு நின்னுட்டாளோ!''

''மூட்டப்பூச்சி மருந்தக் குடிச்சிட்டு எங்கிட்டும் போயி பேசாமப்படுத்துட்டாளோ?''

''ரோட்டுவழி போயிருந்தான்னா கார்ல அடிபட்டு செத்துருப்பா.''

''கண்ணுபோன பின்னால மனுசப் பெறவி வாழ்றதுலே என்ன இருக்கு ?''

''இந்த ஆவட முண்டைட்ட அவளும் எத்தனை நாளக்கித்தான் வசவு வாங்கி வசவு வாங்கி கஞ்சி குடிப்பா பாவம்.

''இவகிட்டக் கஞ்சி வாங்கி குடிக்கிறதவிட அவ செத்துப் போனதே நல்லதுதான்.''

''பாவம் பேச்சிக்கிழவி. இந்தத் தெருவுக்கு காவலானாச்சும் சத்தம் குடுத்துக்கிட்டு கெடந்தா. அவளும் போய் சேந்துட்டாளா?''

''அவ எப்படிப்பட்ட வேலக்காரி! கள வெட்டுல நெற பிடிச்சாள்னா எப்பேர்ப்பட்ட ஆளா இருந்தாலும் அவ நெற முந்தமுடியாது.''

''..............''

ஊர் ஜனங்கள் பேச்சிக் கிழவியைப் பற்றி நினைத்துக் கொண்டபோதெல்லாம் அவளை பற்றித் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். ஒருநாள்-இரண்டுநாள்-மூன்றுநாள் — அவளைப்பற்றிய பேச்சு குறைந்து கொண்டே வந்தது. அவளைப்பற்றி ஒரு தகவலும், யாருக்கும் கிடைக்கவில்லை. அவள் செத்துத்தான் போனாளா? அல்லது எங்காவது இன்னும் உயிரோடுதான் இருக்கிறாளா? யாருக்கும் தெரியவில்லை.

பத்து நாட்களாயிற்று. ஊரில் யாருக்கும் பேச்சிக் கிழவியைப் பற்றிய நினைவே இல்லை.

அன்று சாயங்கால நேரம். ஆவடையின் வீடு பூட்டிக்கிடந்தது. பேச்சிக்கிழவி படுத்திருந்த கட்டில் இன்னும் சுவரோடு சாத்திவைக்கப்பட்ட நிலையிலேயே இருந்தது. பக்கத்து வீட்டிற்குள் வேலம்மா அரிசி புடைத்துக்கொண்டிருந்தாள். பள்ளிக்கூடம் போய் விட்டு வந்த பிள்ளைகள் தெருவில் கிட்டியடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். இரண்டு பெண்கள் தெருக்குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அந்தத் தெருவுக்குள் ஒரு வெள்ளைநிற 'மோட்டார் வேன்' வந்து, ஆவடையின் வீட்டுக்கு முன்னால் நின்றது. விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களெல்லாம் ஓடிவந்து அந்தக் காரைச் சூழ்ந்துகொண்டார்கள். தெருவில் நின்ற எல்லோருடைய பார்வையும் அந்தக் காரின்மேல் வந்து பதிந்தது. வீட்டிற்குள் அரிசி புடைத்துக் கொண்டிருந்த வேலம்மா வெளியே வந்து எட்டிப்பார்த்தாள்.

அப்போது அந்தக் காருக்குள்ளிருந்து பேச்சிக்கிழவி இறங்கினாள். அவளைக் கண்டதும் சூழ்ந்து நின்ற சிறுவர்களெல்லாம் ''ஏ.....பேச்சிப் பாட்டி வந்துட்டா!....பேச்சிப் பாட்டி வந்துட்டா!'' என்று மகிழ்ச்சிக்குரல் எழுப்பினார்கள். அதைக் கேட்டதும் தூரத்தில் நின்ற ஆண்களும்-பெண்களும் அங்கே வந்து கூடிவிட்டார்கள். அந்த 'வேன்' திரும்பிப்போய் விட்டது. பேச்சிக்கிழவி அலட்சியமாக நடந்துபோய் தாவாரத்துச் சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த கட்டிலை எடுத்துப்போட்டு உட்கார்ந்தாள். அவளுடைய இடது கண்ணில் உள்ளங்கையகலத்தில் நீலநிற துணித்திரை தொங்கிக்கொண்டிருந்தது. அவள் அந்தத் துணித்திரையை மெல்லத் தன் இடது கையால் தூக்கிக் கொண்டு எதிரிலே நின்றவர்களைப் பார்த்தாள். அவள் ஒவ்வொருவரையும் இனம்கண்டு பெயர் சொல்லி அழைத்துப் பேசினாள். சுற்றி நின்ற கூட்டம் அவளை ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டு நின்றது. 'அட! பேச்சிக்கெழவிக்குக் கண்ணு தெரியுது!'

வேலம்மா பேச்சிக்கிழவிக்கு கஞ்சி கரைத்துக்கொண்டு வந்தாள். கிழவி, அவளைக்கண்டதும், ''அடி வேலம்மா.....எம் புண்ணியாட்டி, என்னப் பாத்தியாடி..! எனக்கு இப்போ கண்ணு தெரியுதுடி! ஒரு கண்ணு நல்லா தெரியுது. எனக்கு இனிமே இருட்டுத்தான் கதின்னு நெனச்சேன். எனக்கு வெளிச்சம் வந்துட்டு. எனக்கு கண்ணு தெரியுது! அண்ணைக்கி அந்த ஆவட முண்ட என்னைய என்னபாடு படுத்திட்டா பாத்தியா? எம் மனசு என்னபாடு பட்டுச்சி தெரியுமா? இனிமே நம்ம இந்த ஒலகத்துல இருக்கப்புடாது, செத்துப்போயிடணும்னுதான் நெனச்சேன். எப்படி சாவலாம்னு ரோசன பண்ணிக்கிட்டு இருந்தேன். ஆனா அதுக்குள்ள, கவுர்மெண்டு ஏற்பாட்டுல கண்ணுக்கு ஆப்ரேசன் பண்றாங்கன்னு, இப்ப வந்துட்டு போவுதே..இந்த கார்ல வந்து என்னய உசுலம்படிக்கி கூட்டிகிட்டு போய்ட்டாங்க. போகும்போது யார்ட்டாச்சும் சொல்லிட்டுப் போவலாம்னாகூட அப்பம் இந்த தெருவுல ஒரு நாதி இல்லாம போச்சி. நானு என்ன செய்யட்டும்?''-என்று பேச்சிக்கிழவி பூரிப்போடும், ஒருவித நன்றியுணர்ச்சியோடும் பேசினாள்.


பிறகு வேலம்மா ஊற்றிக் கொடுத்த கஞ்சியை வாங்கிக் குடித்தாள். குடித்து முடித்ததும் அவள் வேலம்மாவின் கைகள் இரண்டையும் பற்றிக் கொண்டு ''அடி வேலம்மா. அடுத்த வாரம் நானும் உங்கூட களக்கி வாறேன். என்னையும் ஒரு ஆளு சேத்துக்கடி.... என்ன!'' என்று சொன்னாள். கிழவியின் வார்த்தைகளில் ஆர்வத் துடிப்பும், அதீதமான நம்பிக்கையும் பொரியாய்த் தெறித்தன. அவளால் இனி எப்படி வேலை செய்யாமல் சும்மா இருக்கமுடியும்?

*

# வரலாறு சமைப்போம்!

அறிவியலில் உலகமெலாம் நெறியோங்கி வாழ்கிறது ;
வறியரென ஒருபிரிவில் வாட்டமுமே சூழ்கிறது !
கொள்ளைகொள்ளும் நோய்பலவும் அறிவியலால் குறைகிறது ;
வெள்ளமெனப் பிறப்புக்கள் அறியாமை விளைக்கிறது !
வெண்மதியின் வியன்பரப்பை மிதித்திடவும் நாடுகிறார் ;
உண்பதற்கே உணவின்றி உலைவதுவும் காணுகிறோம்!
செல்வமெனும் அறிவியலின் தெண்ணீரை மேன்மேலும்
பல்துளையாம் பெருகுமக்கள் பானையிலே ஊற்றுதல்போல்
முன்னேற்றத் திட்டமெலாம் முனைப்பாகத் தீட்டிடினும்
தின்னுதற்கும் உடுப்பதற்கும் துன்னிடுமோர் வீட்டிற்கும்
வகைசெய்தல் வேண்டுமென வளமெல்லாம் வரண்டுவிடும் !
மிகையான சுமையாக விளைமக்கள் பெருக்கத்தை
அணைபோட்டுத் தடுத்திடுதல் வேண்டுமென அறிஞரெலாம்
இணைகின்ற ஐ.நா.நல் மன்றத்தார் இவ்வாண்டை
'உலகமக்கள் தொகையாண்டு' நல்லாண்டாய்க் குறித்துள்ளார்!
நலமான உலகமைக்க நாடிடவே எண்ணுகிறார் !
சேய்நலமும் தாய்நலமும் திறமாகப் போற்றுதற்கும்
நோய்நொடிகள் தவிர்ப்பதற்கும் சத்துணவை நுகர்ந்திடணும்!
குறையுமெனில் உயிர்ச்சத்தே ஒளிவிழியும் குறைந்திடுமாம்!
முறையாக முளைகளுக்கும் பூச்சிகொல்லி தூவுதல்போல்
பிள்ளையர்க்கே தடுப்பூசி போட்டால்தான் பின்னாளில்
தொல்லைதரும் நோய்பலவும் இல்லாமல் நலமோங்கும் !
பள்ளியிலே சிறார்க்கெல்லாம் உடல்நலத்தைப் பார்த்திடவும்,
உள்ளபல விழியிழந்தோர் ஒளிபெறவே செய்திடவும்,
தொழுநோயின் இரவலர்கள் துன்பங்கள் துடைத்திடவும்,
பழுதுற்ற - ஊனமுற்றோர் பயன்பெற்றே வாழ்ந்திடவும்,
நல்வாழ்வு முதலான முன்னேற்றத் திட்டங்கள்
எல்லாமும் செயற்படுத்தப் பல்குகிற பிறப்புகளை
இரண்டோடு நிறுத்திட்டால் குடும்பத்தில் எந்நாளும்
திரண்டபல செல்வமெலாம் செழித்தோங்க நனிவாழ்வோம்!
செல்வத்தில் அறிவியலில் திகழ்கின்ற உலகமெலாம்
நல்லபெரும் நலத்திட்டம் குடும்பநலம் கைக்கொண்டே
ஓங்குவதை உணர்ந்திடுவோம்! உலகமெலாம் இவ்வாண்டைப்
பாங்காகப் பிறப்புகளைக் குறைத்திடவே பகுத்துளதை
எண்ணிடுவோம்! எல்லாரும் பெற்றிடுவோம், உலகத்தின்
வண்ணமுடன் இயைந்தேநாம் வரலாறு சமைப்போமே!






மனசை ப.கீரன்

# பொன்னான பணிகள் செய்யும் – அண்ணா அமைத்த சீரணி



எம். அப்துல்ரஹிம், பி.ஏ.,
தனி அலுவலர், சீரணி

பொது நன்மைக்காக ஒன்றுபட்டு உழைக்கும் உணர்ச்சிக்குத் தமிழகத்தில் என்றுமே குறைவில்லை. இந்த கருத்தினை மையமாக வைத்து 1967-ஆம் ஆண்டில் சீரணி என்ற சிறந்த அமைப்பை உருவாக்கித் தந்தவர் அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் என்பதைத் தமிழகம் அறியும்-ஏன்? உலகமே அறியும். நாட்டு விடுதலைக்குப்பின், சமூகத் தொண்டு, அறிவுத் தொண்டு வளர நல்ல பல திட்டங்கள் உருவாக்கப்பட்டன. நாட்டின் தந்தை காந்தியடிகள், உழைப்பின் உயர்வை உணர்த்திட, நிர்மாணத் திட்டத்தை நாட்டிற்குத் தந்தார். அவர் வழியிலே தன்னை ஈடுபடுத்திக்கொண்டு தான் அரசுப்பொறுப்பினை ஏற்றுக்கொண்ட பின் இல்லாமை, போதாமை, அறியாமை என்ற இடர்பாடுகளைப் போக்க எண்ணி, சீரணி என்ற அமைப்பை தமிழ் நாட்டிற்கு உருவாக்கித் தந்தார், மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள்.

மக்களின் நல்வாழ்வுக்கெனத் தீட்டப்படும் திட்டங்கள் முழு அளவில் நிறைவேற்றப்பட அரசு மட்டும் முயன்றால் போதாது, அரசோடு மக்களும், தொண்டுள்ளம் படைத்த இளைஞர்களும் முன்வரவேண்டும். எல்லாரும் எல்லாக் காலத்திலும் பொதுத் தொண்டில் ஈடுபட இயலாது. தொழில் தொல்லைகள், குடும்ப பாரம், இன்னும் பல ஆசாபாசங்கள், அதற்குக் குறுக்கே நிற்கும். அவைகளை ஒதுக்கித் தள்ளி நாட்டைச் சீராக்கிச் செம்மைப்படுத்த, அதற்கென்று ஒரு சிலராவது அவசியம் பொதுப்பணிக்குத் தங்களை அர்ப்பணிக்க வேண்டும். தங்களது குடும்பக் காரியங்களைக் கவனித்தது போக மீதமுள்ள நேரத்தை வெறும் பொழுதுபோக்குக் களியாட்டங்களில் வீணடிக்காமல் நாட்டு மக்களின் நல்வாழ்விற்குத் தங்களின் உழைப்பினைப் பயன்படுத்த வேண்டும். பணம் படைத்தோர் நிதியும், ஆற்றல் மிக்கோர் ஆற்றலையும் அளித்து உழைப்பின் ஒரு பகுதியைச் சமுதாயப் பணிக்கு அளித்திட வேண்டும். இத்தகைய தத்துவத்தின் அடிப்படையில் பின்னிப் பிணைந்ததுதான் சீரணி.

சீரணியின் நோக்கம் வன்முறை அல்ல. தூய தொண்டாற்றவும், தோழமை வளர்க்கவும், மக்களின் வாட்டத்தைப் போக்கவும், நாட்டின் வளத்தைக் கூட்டவும் உருவாக்கப்பட்டதுதான் சீரணி.

மோட்டார் நன்றாக ஓட, அதை ஓட்ட விசை இருந்தால் மட்டும் போதாது. அது தவறான வழியில் செல்லாமல் தடுக்க பிரேக்கும் வேண்டும். நாடு செழிக்க நல்ல ஆறு இருந்தால் மட்டும் போதாது. அது தடம்புரண்டு ஊரை அழித்திடாமலிருக்கக் கரை வேண்டும். சமூகத்தொண்டு புரிய இளைஞர்கள் பலபேர் இருந்தால் மட்டும் போதாது. அவர்களின் ஆற்றலை, திறமையை, உணர்ச்சியை ஆக்கப் பணிக்குத் திருப்ப கட்டுப்பாடான அணி ஒன்று தேவை. அது தான் சீரணி.


உணர்ச்சிப் பிழம்பாய், உள்ளத் துடிப்போடு நிற்கும் இளைஞர் சமுதாயத்தை ஆக்கப் பணிக்கு ஈடுபடுத்தவும், நாடு எனக்கென்ன செய்தது என்று கேட்காமல், நாட்டிற்கு நான் என்ன செய்தேன் என்று சிந்திக்க வைக்கவும்—தன் கையே தனக்குதவி என்ற தாரக மந்திரத்தை தரணிக்கு நினைவுப்படுத்தி, மக்களைத் தன்னலங் கருதாத பொதுப்பணிக்குத் தயார்ப்படுத்தவும், எல்லாவற்றிற்கும் அரசையே நம்பும் நிலையைப் போக்கி, தன்னால் முடிந்ததை நாட்டிற்குச் செய்ய அணி ஒன்று தேவை. அதுவும், சர்க்கார் பற்றற்ற, சர்க்கார் நேரடித் தலையீட்டில் வராத-ஊதியம், பணம் உத்தியோக உணர்வு கோராத ஒருவித அணி எல்லா நாட்டிற்கும் தேவை—எண்ணினார் அறிஞர் அண்ணா; சீரணி உருவாயிற்று. நாட்டை சீர்படுத்த, சிக்கல்களை நீக்கிச் சமுதாயத்தைச் செப்பனிட மக்கள் வாழ்வைச் சீரமைக்க அறிவைப் பரப்ப, ஆக்கப்பணி

களை ஆற்ற அமைக்கப்பட்டது தான் சீரணி.

இந்த அமைப்பில் வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள் பொறியியல் வல்லுநர்கள், பாட்டாளிகள், மாணவர்கள், தாய்மார்கள், எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், அரசியலில் ஈடுபாடில்லாத முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் 56,180-ஆக சீரணி தொண்டர்கள் பைந்தமிழ்நாடு பல்வளம் பெறவும் சமூகநல ஏற்றம் எய்தவும் எல்லாத் துறைகளிலும் மறுமலர்ச்சி காணவும், நல்ல ஆக்கப் பணிகள் ஆற்றவும், சீரணியில் நம்பிக்கையும், கொள்கையில் பற்றும் செயலில் ஈடுபாடும் கொண்டு உள்ளத் தூய்மையோடு, காய்தல், உவத்தல் அகற்றிக் கைமாறு கருதாது, கட்டுப்பாடோடும், கண்ணியத்தோடும் கடமையாற்றுவேன் என்று உறுதிமொழி ஏற்று "சீரணி பத்து' என்ற கோட்பாடுகளை வழிகாட்டியாக அமைத்துக் கொண்டு நாட்டின் வளத்தைப் பெருக்க, காட்டைத் திருத்திக் கழனியாக்கி, நீண்ட நெடுங்காலமாகச் செப்பனிடப்படாத ஏரிகள், குளங்களைச் செப்பனிட்டு, அறிவைப் பெருக்கப் பள்ளிகள் அமைத்து, கிராமங்கள் செழிக்க இணைப்புச் சாலைகள் ஏற்படுத்திக் கடந்த ஏழாண்டுக் காலத்தில் உருவாக்கித் தந்த சாதனைகள் ஏராளம், ஏராளம்!

கல்வி, வேளாண்மை, ஊர்ப்புறங்களில் சாலைகள் அமைத்தல், ஊர்ப்புறச் சாலைகளை நெடுஞ்சாலைகளுடன் இணைத்தல், திறந்தவெளி அரங்குகள், வானொலி மன்றங்கள் தரைமட்டக் குடிநீர்த்தொட்டிகள் அமைத்தல், குளங்கள்—கால்வாய்கள் ஆழப்படுத்துதல், அரிசன மக்களின் மயானங்களுக்குச் செல்லும் பாதைகள் அமைத்தல், பேருந்து பயணிகள் இளைப்பாற நிழற்குடைகள் அமைத்தல், சமுதாயக் கூட்டங்கள் அமைத்தல் போன்ற பொதுமக்களுக்குத் தேவையான வளர்ச்சிப் பணிகளில் சீரணி ஈடுபட்டு தொண்டாற்றி வருகின்றது.

சென்னை நகரில் சீரணியினரின் துப்புரவுப் பணிகளை அமைச்சர்கள் தொடங்கிவைத்தனர்



சீரணிச் செம்மல் பேரறிஞர் அண்ணாவின் 'சீரணிப் பத்து' என்னும் பத்துக் கட்டளைகளாவன:

1. ஊதியம் பெறா ஓய்வு நேரப்பணியாற்றல்,.

2. தன்னலங் கருதாப் பொதுப்பணி பேணல்.



சேலம் ஏர்க்காடு அருகில் சீரணியினர் கட்டியுள்ள பள்ளிக் கட்டடம்

உங்கள்
எதிர்காலத்திற்கு
ஓர்
நற்செய்தி

TNSC
BANK

எப்பொழுதும் இல்லாத
அதிகப்படியான வட்டி
இப்பொழுது கொடுக்கிறது

23-7-1974 லிருந்து தவணை டெபாஸிட்டுகளுக்கு
கொடுக்கப்படும் வட்டி உயர்வு:

| ரூ 100/-ம், அதற்கு மேலும் | வட்டி விகிதம் வருடத்திற்கு |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக | 5.50% |
| 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக | 6.00% |
| 9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக | 7.00% |
| 1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக | 8.00% |
| 3 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை | 9.00% |
| 5 வருடங்களுக்கு மேல் | 10.00% |

தற்பொழுது உள்ள தவணை டெபாஸிட்டுகளுக்கும் 23-7-1974 லிருந்து தவணை தேதிவரை மேற்கண்டவாறு அதிகப்படி வட்டி கொடுக்கப்படும்.

ரூ 1000/-மும் அதற்கு மேலும், ஓராண்டு காலத்திற்கும் அதற்கு மேலும் முதலீடு செய்யப்படும் டெபாஸிட்டுகளுக்கு மாதந்தோறும் வட்டி கொடுக்கப்படும்.

"உங்கள் சேமிப்புக்கு எங்கள் சேவை"

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை-600001
தந்தி அர்பாங்க் தொலைபேசி: 20367 டெலக்ஸ்: 7225

என்.எல்.ஹெப்ளிகர், நிர்வாக இயக்குநர்.
குடவாசல் சி. கிருட்டிணமூர்த்தி துணைத்தலைவர்
ஆர். கனகசபை, தலைவர்.

3. தன் மதிப்பையும், தன்னம்பிக்கையையும் வளர்த்தல்.

4. உழவும், தொழிலும் வளர உறுதுணையாக நிற்றல்.

5. கல்வியறிவும், பொது அறிவும் வளர வகை செய்தல்.

6. பொதுநலம் காணத் துப்புரவுப்பணி மேற்கொள்ளல்.

7. தீண்டாமைக் கொடுமைகளை அகற்றுதல்.

8. அன்பு வழியாக சமூகக் கேடு களைதல்.



9. திக்கற்றவர்களுக்குத் துணைபுரிதல்.

10. அறவழி நின்று அனைவருக்கும் உதவுதல்.

**சீரணி செயல்திட்ட அமைப்பு முறை :** கிராமங்களுக்குத் தேவையான திட்டங்களை உருவாக்கி ஒன்றிய அளவில் செயல்படுத்தவும், கோட்ட அளவில் மேற்பார்வையிடவும், மண்டலம் அளவில் ஆய்வு செய்யவும், மாநில அளவில் திட்டத்தின் சாதனைகளைப் பரிசீலிக்கவும், கூற்றம், கோட்டம், மண்டலம் மாநிலம் எனப்பிரித்து குழுக்களையும், தலைவர்களையும், நியமித்துச் சீரணிப் பணிகளைச் செயல்படுத்த வழி செய்யப்பட்டுள்ளது. சீரணித் தொண்டர்களுக்கு அரசின் சார்பில் உதவ, கூற்ற அளவில் ஆணையாளர்களும், கோட்ட அளவில் கோட்டாட்சித் தலைவர்களும், மண்டல அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் உதவி செய்கிறார்கள். சீரணி படைத்த பணிகளை ஆய்வு செய்யவும், மேலும் பல புதிய ஆக்கப் பணிகளையும் திட்டங்களையும் உருவாக்கவும், கூற்றம், கோட்டம், மண்டலம், மாநில அளவில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னை நகரைப் பொருத்தவரை 12 சீரணித் தொகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு தலைவர் வீதம் 12 தொகுதிச் சீரணித் தலைவர்களும், வடசென்னை, தென் சென்னை, பகுதிகளுக்கு இரு சீரணிச் செயலாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மாவட்ட சீரணித் தலைவனின் கீழ் பணிபுரிகின்றனர். இவர்களுக்கு ஆலோசனைகள் கூற நிர்வாகக்குழு ஒன்றுள்ளது. சென்னை மாவட்டத் தலைவருக்கென தனியே ஓர் அலுவலகம் அண்ணாசாலையிலுள்ள அரசினர் தோட்டத்தில் இயங்கி வருகிறது.

சென்னை மாவட்டத்தில் துப்புரவுப் பணி, பேருந்துப் பயணிகளுக்கு நிழற்குடைகள் அமைத்தல், சீரணி அரங்கம், பள்ளிக் கட்டிடங்கள்போன்ற பணிகள் இதர சமூகப் பணிகள் பலவும் மேற்கொள்ளப்படுகின்றன. சென்னை நகரில் 410 மையங்களில் 820 சீரணித் தொண்டர்கள் குடிசைவாழ் குழந்தைகளுக்கும், கர்ப்பிணிப் பெண்டிருக்கும் சத்துணவு வழங்கும் திட்டத்தில் ஈடுபட்டு வாரத்தில் 5 நாட்கள் பணிபுரிகின்றனர். சென்னையில் மட்டும், சுமார் 80,000 பேர் இத்திட்டத்தினால் பயனடைகின்றனர். தீத்தடுப்பு பணிகளில் உதவுவதற்கும், அமைதி காக்கும் பணிகளில் ஈடுபடவும் ‘குடியரசு நாள்’ போன்ற நாட்களில் அணிவகுப்புகளில் கலந்து கொள்ளவும், நேர் நடைப் பயிற்சி பெற்ற தொண்டர்கள் சென்னையில் 970 பேர் உள்ளனர். அதேபோன்று தமிழக முழுவதும் 3,000 பயிற்சி பெற்ற தொண்டர்கள்

உள்ளனர். இத்தொண்டர்களுக்குச் சீருடை வழங்கப்பட்டுள்ளது.

மைய அரசின் நிதியுதவிடன் சீரணித் தொண்டர்களுக்கு ஊர் விரிவாக்கப் பயிற்சிப் பள்ளிகளில் தீவிரவேளாண்மை முறை, கால்நடை வளர்ச்சி, கிராமங்களில் தலைமைப் பொறுப்பை மேற்கொள்ளல் போன்ற இவைகளில் ஒவ்வொரு வருடமும் சுமார் 320 தொண்டர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

**சீரணி அறிவகங்கள்:** பொது மக்கள் மத்தியில் அறியாமையை அகற்றவும், நாட்டில் நடைமுறைகளையும், அரசின் சாதனைகளையும் அறிவிக்கும் வகையில் தமிழக முழுவதும் 534 சீரணி அறிவகங்கள், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு சீரணி அறிவகம், தேர்ந்தெடுக்கப்பட்ட 100 பேரூராட்சி மன்றங்களிலும் சீரணி அறிவகங்கள் என்ற எண்ணிக்கையில் செயல்படுகின்றன. இவ்வறிவகங்கள் வாரத்தில் 3 அல்லது 4 நாட்கள் மாலை நேரத்தில் நடைபெறும். ஒவ்வொரு அறிவகத்திற்கும் ஒரு சீரணித் தொண்டர் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு உள்ளார். இவருக்கு கௌரவ ஊதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 5 வழங்கப்பட்டு வருகிறது.

சீரணி அறிவகங்களுக்கு நாள் வார, மாத இதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இச்சீரணி அறிவகங்கள், தமிழக அரசின் சாதனைகள், முற்போக்கு நாடுகளில் உள்ள நிலை, சமூகக் கேடுகளைக் களைதல் ஆகியவற்றினைத் தெரிவிக்கும் பகுத்தறிவு மன்றங்களாக செயல்படுகின்றன.

கடந்த ஏழு ஆண்டுகளில் சீரணித் தொண்டர்கள் தமிழகத்தில் தங்களின் அயராத உழைப்பாலும், ஆர்வத்தாலும், உருவாக்கித் தந்த சாதனைகளை எண்ணி, எண்ணி ஏறுநடை போடுகிறார்கள். மக்களிடையே புதியதொரு சமுதாய விழிப்பு உணர்ச்சியை உருவாக்கித் தன்னலம் கருதாத் தொண்டுணர்ச்சியைத் தூண்ட வேண்டும் என்ற முக்கிய குறிக்கோளுடனும், தமக்கென ஊதியம் எதுவுமின்றிச் சேவையுள்ளத்துடன் ஆண்களும், பெண்களும் ஓய்வு நேரத்தில் பிறர்க்கெனப் பணியாற்ற வேண்டும் என்ற உயரிய கோட்பாடுடன் அமைக்கப்பட்ட சீரணியின் வியத்தகு சாதனைகள் தமிழகத்தில் ஏராளம்.


சென்னை நகரில் பேருந்து நிலையங்களில் பயணிகளை ஒழுங்குபடுத்தும் பணியில் 83 சீரணித் தொண்டர்கள் ஈடுபட்டு வருகின்றனர். சீரணித் தொண்டர்கள் பயணிகளை வரிசைப்படுத்திச் சரியான பேருந்து தடயங்களில் ஏற்றி அனுப்புவதோடல்லாமல், கத்தரிக்கோல், களவு போன்ற சமூக விரோதச் செயல்கள் ஏற்படாமல் எல்லாராலும் பாராட்டப்படும் அளவிற்கு, விழிப்புடன் பணியாற்றுகின்ற இத்தொண்டு பொதுமக்களாலும், பத்திரிகைகளாலும் ஒருமனதாகப் பாராட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆறாண்டுகளில் சீரணி தனது ஒப்பற்ற சாதனைகள் மூலம், பொதுமக்களின் கவனத்தையும், மத்திய அரசின் கவனத்தையும் கவர்ந்துள்ளது. இப்பணிகளை கண்ணுற்ற பெரியோர்கள், எல்லை புற காந்தி, மத்திய அரசைச் சார்ந்த அமைச்சர்கள் பலர் பாராட்டியுள்ளனர். மேலும், மத்திய அரசின் பொதுமக்கள் ஒத்துழைப்பு இயக்குநர் திரு பால் சௌத்ரி அவர்கள் தமிழகத்திற்கு வருகைதந்து, சீரணியின் சாதனைகளை பார்வையிட்டுப் பாராட்டியதோடு அல்லாமல் பிற மாநிலங்களிலும் இத்திட்டத்தினைச் செயல்படுத்தப் பரிந்துரை செய்து நாட்டின் எல்லா மாநிலங்களுக்கும் தமிழக சீரணியின் விவரங்கள் அடங்கிய கடிதம் அனுப்பியிருப்பது குறிப்பிடத்தக்கது.

**குறிப்பிடத்தக்க சில சீரணிப் பணிகள்:**

1. தஞ்சை மாவட்டத்தில் கோட்டூரில் ஊர்ப்பொதுமக்களும், சீரணித் தொண்டர்களுமாகச் சேர்ந்து சுமார் 25,000 பேர்கள், திரண்டு 8 மைல் நீளமுள்ள சாலையை ஒரே நாளில் அமைத்தனர்.

2. திருச்சி மாவட்டத்திலுள்ள வார்ப்பட்டு கிராமத்தையும், இராமநாதபுரம்



நாமக்கல் அருகிலுள்ள பெரியப்பட்டியில் சீரணியினரால் கட்டப்பட்டுள்ள திறந்தவெளிக் கலையரங்கம்

மாவட்டத்திலுள்ள ஒரத்துப் பட்டி கிராமத்தையும் இணைத்து 3 மைல் நீளத்திற்கு ஒரு சாலையை சுமார் 3000 பேர் ஒன்று சேர்ந்து ஒரே நாளில் நிறுவினர்.

3. எல்லா அரசியல் கட்சிகளுக்கும் பயன்படும் வகையில் சென்னை கடற்கரையில் 'சீரணி அரங்கம்' ஒன்றைச் சீரணித் தொண்டர்கள் 21 நாட்களில் கட்டி முடித்தனர்.

4. சென்னை, அடையாறு ஊரூரில் பத்தே நாட்களில் 30,000/- ரூபாய் மதிப்புள்ள பள்ளிக் கட்டிடம் ஒன்றைச் சீரணித் தொண்டர்கள் கட்டி முடித்தனர்.

5. சென்னை வியாசர்பாடியில் 5 பர்லாங் நீளமுள்ள ஒரு



வடிகால் 21 நாட்களில் தோண்டப்பட்டது.

6. துப்புரவின் அவசியத்தையும், உழைப்பின் உயர்வையும் பொது மக்களுக்கு உணர்த்தும் வகையில் சீரணித் தொண்டர்கள், மாநகராட்சி ஊழியர்களின் உதவியோடு சென்னை நகர முழுவதும் பொதுமக்கள் பாராட்டக்கூடிய அளவில் துப்புரவுப் பணியினை அவ்வப்போது மேற்கொண்டனர்.

7. குடுமியான் மலையில் உள்ள மாநில வேளாண்மைப் பண்ணையில் நிலச் சீர்திருத்தப் பணியை மேற்கொண்டனர். அச்சமயத்தில் முற்றிலும் மறைந்து போனதொரு குளத்தைக் கண்டு புதுப்பித்து, சுமார் 45 ஏக்கர் நிலம் பாசனம் பெறச் சீரணித் தொண்டர்கள் உதவினர்.

8. ஏழை மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும்பொருட்டு சென்னை நகரில் சைதாப்பேட்டையில் 170 வீடுகள் கொண்ட குடியிருப்புப் பகுதிகள் ஒன்றை கட்டி முடித்தனர்.

9. கன்னியாகுமரி மாவட்டத்தில், விளவங்கோடு ஊராட்சிஒன்றியத்தில் கிராம மக்களின் ஒத்துழைப்போடு 2.5 மைல் நீளமுள்ள—நீர்ப் பாசனமுள்ள மடிச்சல் கால்வாயினைத் தோண்டும் பணியினை மேற்கொண்டுள்ளனர். கால்வாய் வெட்டும் இடங்களில் உள்ள சுமார் 1.5 லட்சம் மதிப்புள்ள தனியார் நிலங்களை தானமாகப் பெற்று, சுமார் 4 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பணியினை ரூ. 1.5 இலட்சம் அரசு செலவில் முடிக்கத் திட்டமிட்டு பணி நடைபெற்று வருகின்றது. இதனால் 431 ஏக்கர் பரப்பளவு, நிலங்களுக்குப் பாசன வசதி கிடைப்பதோடல்லாமல் 500 மெட்ரிக் டன் நெல் உற்பத்தித்திறன் உடையதாக இருக்கும். சுமார் 850 குடும்பங்கள் இச்சீரிய பணியினால் பயனடையும்.

10. முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் கட்டளையை ஏற்றுச் சென்னை எலியட்ஸ் கடற்கரையில், முட்புதர்களை நீக்கி, கடற்கரையைச் சமம் செய்து மெரினா பீச்சுக்குச் சமமாக காட்சியளிக்கும் வகையில் 840 சீரணித் தொண்டர்களின் 5 நாட்கள் உழைப்பில் எழில் மிகு கடற்கரையாக மாற்றப்பட்டது.

11. டாக்டர் கலைஞர் அவர்களின் 48-வது பிறந்தநாளையொட்டி, சென்னை நகரில் முக்கிய இடங்களில் சீரணித் தொண்டர்கள் உழைப்பின் மூலமும், பொதுமக்கள் நன்கொடை மூலமும், 48 பேருந்து நிலையங்களில் நிழற்குடைகள் அமைக்கப்பட்டன.


12. டாக்டர் கலைஞர் அவர்களின் 49-வது பிறந்த நாளையொட்டி மாவட்டங்களில் 49 திறந்த வெளியரங்குகள் முழுவதும் பொதுமக்கள் நன்கொடை மூலமே, சீரணியினரால் கட்டப்பட்டன.

13. உணவுப் பொருள் வழங்குதுறையினரின் வேண்டுகோளிற்கிணங்கச் சர்க்கரைக் கார்டுகள் கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்டு சென்னை நகரில் மாத வருமானம் ரூ. 300/க்கு மேலுள்ள குடும்பங்களை மிகவும் குறுகிய காலத்தில் கணக்கெடுத்தும் கார்டுகளை வழங்கியும் பொதுமக்களின் பாராட்டுதல்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

14. சென்னை நகரில் சைதாப்பேட்டையில் நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் தங்கிப் படிக்க வசதியாக ரூ. 25,000/- மதிப்பில் மாணவர் விடுதியொன்று, 14 நாட்களில் சீரணியினரால் கட்டி முடிக்கப்பட்டது.

15. தமிழ் நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் 11-வது ஐந்தாண்டுக் கால்நடைக் கணக்கெடுப்புப் பணிகளில் சுமார் 700 சீரணித் தொண்டர்கள் பயன்படுத்தப்படுத்தப்பட்டனர்.

இப்பணிகளைத் தவிர, பூச்சி மருந்து தெளித்தல், தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுதல், காய்கறித் தோட்டங்கள் அமைத்தல், பள்ளிக் கட்டிடங்களுக்கு வெள்ளையடித்தல் போன்ற இதர பணிகளிலும் சீரணித் தொண்டர்கள் ஈடுபடுகின்றனர். தமிழகத்தில் சீரணியின் கடந்த காலச் சாதனைகளை நோக்குமிடத்து, மக்களுக்குத் தேவையான, குறிப்பாக சமுதாயத்தின் அடித்தட்டில் வாழும் மக்களின் தேவைக்காகச் சீரணி தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது மட்டுமல்லாமல், நாடும் ஏடும் போற்றும் வகையில் இன்று தமிழக மக்களிடையே சீரணி ஒரு இன்றியமையாத இயக்கமாக இருந்து வருகிறது. எந்த உயரிய நோக்கத்திற்காகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் 'சீரணி'யினை உருவாக்கினார்களோ, அந்த நோக்கத்தை தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் செயலாற்றி வருகிறார்கள். அவற்றை முழு அளவில் நிறைவேற்றி மேலும் நாட்டு மக்களின் நலனுக்காகவே நிரந்தரமாகச் சீரணி பணிபுரியும் என்பதில் ஐயமில்லை.




# சாதனைப் பட்டியல்

1-7-1967 முதல் 31-3-1974 முடிய தமிழகம் முழுவதும் நிறைவேற்றப்பட்டுள்ள சீரணிப் பணிகள் :

| | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பள்ளிக் கட்டடங்கள் | 1,306 |
| 2. | இணைப்புச் சாலைகள்-வண்டிப் பாதைகள் - மயானத்திற்குப் பாதைகள் | 1,661 |
| 3. | தூர் எடுக்கப்பட்ட ஏரிகள், கால்வாய்கள், குளங்கள் | 1,627 |
| 4. | திறந்த வெளி அரங்குகள் | 160 |
| 5. | வானொலி, இளைஞர் மனமகிழ் மன்றங்கள் | 585 |
| 6. | தரைமட்ட குடிநீர்த் தொட்டிகள் | 27 |
| 7. | கதிரடிக்கும் களங்கள் | 12 |
| 8. | மதிய உணவு மையத்திற்கான கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள் | 83 |
| 9. | பேருந்துப் பயணிகளுக்கு நிழற் கோடைகள் | 64 |








10. தரிசு நிலங்களை விளைநிலங்களாக்கல், பூச்சி மருந்து தெளிக்கப்பட்ட நிலங்கள், வெள்ளை அடிக்கப்பட்ட பள்ளிகள், காய்கறித் தோட்டங்கள், பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட பெயர்ப்பலகைகள், துப்புரவுப் பணி போன்ற மற்ற சமூகப் பணிகள் 40,776

மேற்கண்ட பணிகளின்
மொத்த மதிப்பு ரூ. 2,02,50,960-00


அரசின் செலவு ரூ. 85,72,226-00












**1968 முதல் 1974 மார்ச் திங்கள் முடிய**
**சேரணியின் சாதனை**

### மாவட்ட வாரியாகத் தகவல்

| வரிசை எண் | மாவட்டம் | பணிகள் எண்ணிக்கை | அரசு செலவு ரூபாய் | பணிகளின் மதிப்பீடு ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. | செங்கற்பட்டு | 1,938 | 8,79,634 | 14,68,930 |
| 2. | வடஆர்க்காடு | 3,924 | 6,50,767 | 12,05,711 |
| 3. | தென்ஆர்க்காடு | 3,846 | 3,86,199 | 11,19,819 |
| 4. | தஞ்சாவூர் | 2 313 | 8,08,333 | 22 93,594 |
| 5. | திருச்சிராப்பள்ளி | 5,142 | 7,97,187 | 21,84,006 |
| 6. | சேலம் | 6,575 | 9,59,368 | 21,04,643 |
| 7. | தருமபுரி | 574 | 4,18,686 | 10,35,843 |
| 8. | கோயம்புத்தூர் | 14,035 | 12,78,045 | 34,76,354 |
| 9. | நீலகிரி | 286 | 2,84,613 | 4,75,154 |
| 10. | மதுரை | 4,726 | 5,67,755 | 13,56,282 |
| 11. | இராமநாதபுரம் | 2,594 | 5,82,818 | 14,62,412 |
| 12. | திருநெல்வேலி | 1,297 | 5,10,931 | 12,22,159 |
| 13. | கன்னியாகுமரி | 187 | 2,72,890 | 5,26,059 |
| 14. | சென்னை | 527 | 1,75,000 | 3,20,000 |
| | மொத்தம் | 47,934 | 85,72,226 | 2,02,50,966 |

# தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ஆற்றும் பணிகள்



கைரிக்ஷா இழுப்போர் நிதிக்கு முதல்வர் கலைஞரிடம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் ரூபாய் ஒரு லட்சம் நிதிக்கான காசோலை வழங்கப்பட்டது.

## திரு. கொளத்தூர் கோதண்டம்
### — பேட்டி —

இந்தியாவிலே கூட்டுறவு இயக்கம் செழித்து வளர்ந்து சிறப்புடன் பணியாற்றும் மாநிலங்கள் தமிழ்நாடு, மகாராஷ்டிரம், குஜராத், பஞ்சாப் அரியாணா முதலியன ஆகும்.

இந்தியாவிலேயே மிகச் சிறந்த மத்திய கூட்டுறவு வங்கி கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிதான்.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுவதில் இந்தியாவில் முதன்மையான இடம் வகிப்பது தமிழ்நாடுதான்.

இந்தியாவிலுள்ள கூட்டுறவு ஒன்றியங்களில் முதன் முதலில் தோன்றியது, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமாகும். கூட்டுறவு இயக்கத்தின் பிரச்சார அமைப்பாக இருந்து கூட்டுறவு ஒன்றியம் செயல்படுகிறது. சுருங்கக் கூறின் பணிகளை விளக்கிடச் செய்தி மக்கள் தொடர்புத்துறை செயல்படுவதுபோலக் கூட்டுறவு அமைப்புக்களின் பணிகளை விளக்கிடக் கூட்டுறவு ஒன்றியம் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் பெருந்தலைவராகப் பணியாற்றிவரும் திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்கள் கூட்டுறவு இயக்கத்தில் இளமையிலேயே ஈடுபாடு கொண்டவர். அவருடைய . நண்பர் கிருஷ்ணதாஸ் என்பவர் ஊட்டிய ஆர்வத்தின் காரணமாகக் கொளத்தூரில் கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கத்தைத் தோற்றுவித்தார். 1961-ஆம் ஆண்டில் மதுராந்தகம் தாலுகா கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் இயக்குநராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1962-ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் இந்தியாவின் வடக்கு மாநிலங்களில் செயல்பட்டு வரும் கூட்டுறவு அமைப்புக்களைப் பார்வையிட்டு வர சில பிரதிநிதிகளை அனுப்பி வைத்தது. அந்தக் குழுவில் திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்கள் சென்றார்கள்.

1966-ஆம் ஆண்டிலே காஞ்சிபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கி இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1968-ஆம் ஆண்டில் செங்கற்பட்டு பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனத்தின் தலைவரானார். 1970 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு நுகர்வோர் சங்கத்துக்கு இயக்குநரானார். 1971-ஆம் ஆண்டில் செங்கற்பட்டு மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவரானார். பின்னர் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் துணைத் தலைவராகி 1974-ஆம் ஆண்டில் டாக்டர் நடேசனார் மறைவுக்குப் பின்னர், அதன் தலைவரானார்.


1973-ஆம் ஆண்டில் இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு கொளத்தூர் கோதண்டம் அனைத்திந்திய அடிப்படையில் காணப்படும் கூட்டுறவாளர்களில் மிகவும் இளைஞராவார்.

முன்னரே குறிப்பிட்டுள்ளவாறு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் இந்தியாவிலேயே மிகப் பழமையானதாகும். இந்தியத் துணைக்கண்டத்தில் கூட்டுறவு இயக்கம் துளிர்விட முதன்முதலில் வித்திட்ட பெருமை தமிழகத்திற்கே உரியது. 1904-ஆம் ஆண்டில் அனைத்திந்தியக் கூட்டுறவுச் சங்கம் செயல்முறைக்கு வந்து 10ஆண்டுகள்கடந்து 4.1.1914 அன்று தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் பதிவு செய்யப்பட்டு இயங்கத் தொடங்கியது.

கூட்டுறவியக்கம் வளர்ந்தோங்கக் கூட்டுறவுப் பிரச்சாரம் முக்கியமாகும். அதனைக் கருத்திற்கொண்ட பழம்பெரும் தோன்றிய பிரச்சார நிறுவனமாக இந்த ஒன்றியம் தோன்றியது.

கூட்டுறவு ஒன்றியத்தின் முதல் தலைவரான திவான்பகதூர் திரு எம். ஆதிநாராயணய்யா அவர்களாகும். இவர் தமிழகத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் கூட்டுறவுச் சங்கமான 'திரூர்' கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பழுத்த அனுபவமுள்ள முதிய தலைமுறையின் வழித்தோன்றலான கூட்டுறவாளர் டாக்டர் பி. நடேசன் அவர்களின் சீரிய தலைமையில் இயங்கிச் செழித்து வளர்ந்தது



தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் விழாவில் கூட்டுறவு அமைச்சர் திரு. மன்னை நாராயணசாமி அவர்கள்.

கூட்டுறவாளர்களான திவான் பகதூர் எம். ஆதிநாராயணய்யா, திரு. யூ. வெங்கட்ராமையா, திரு. டி. ஆதிநாராயண செட்டியார், திரு. எம். சிவராவ் இன்றும் பல பெரியவர்கள் கூடி இவ்வொன்றியத்தை நிறுவினர்கள். ''சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்'' என்ற பெயரில் இந்தியாவில் முதன் முதலாகத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்.

கூட்டுறவு ஒன்றியம் செயல் முறைக்கு வகுத்துக் கொண்டுள்ள நோக்கங்களைக் கீழ்க் கண்டவாறு பிரித்துக் கொள்ளலாம்.

1. ஒன்றியத்தின் ஆட்சி எல்லையில் கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பது.

2. கூட்டுறவுக் கல்வியைப் பரப்புவது.

3. கூட்டுறவு நிறுவனங்களை அமைப்பதும் வளர்ப்பதும்.

4. கூட்டுறவுச் சங்கங்கள் வளர்ச்சிக்குத் துணைபுரிவது.

5. கூட்டுறவாளர்களின் மாநாடுகள், பொதுக் கூட்டங்கள் ஏற்பாடு செய்வது.

6. கூட்டுறவாளர்கள் கூட்டங்கள், கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், ஆய்வுக் குழுக்கள், உறுப்பினர் பயிற்சி முகாம்கள், மற்றும் கிராம மக்களை கூட்டுறவியக்கத்தில் பயிற்றுவித்தல்.

7. தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளால் கூட்டுறவு இதழ்கள் வெளியிடுவது.

8. கூட்டுறவு இயக்கம் தொடர்பான புத்தகங்கள், நாடகம், பாடல்கள் இதழ்கள் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுதல், மற்றும் அவற்றை வாங்கி விற்பனைக்கு ஏற்பாடு செய்தல்.


9. கூட்டுறவாளர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்கள், மேலாளர்களிடையே பயிற்சி வகுப்புக்கள் அல்லது அது தொடர்பான முறைகளில் கூட் கூட்டுறவுக் கல்வியை வளர்ப்பதற்காக பாடத் திட்டம் வகுத்தல், மற்றும் அதற்கான தேர்வுகள் நடத்துதல்.

10. நூலகங்கள் அமைத்தல்.

11. கூட்டுறவுப் பயிற்சிக் கழகங்களுக்கு நிதியுதவி வழங்குதல், நிர்வகித்தல்.

இந்தப் பணிகளை செயல்படுத்திவரும் திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்களுக்கு புதிய அனுபவம் ஒன்று ஏற்பட்டது.

இந்திய அரசுக்குச் சொந்தமான கூட்டுறவுப் பயிற்சிக் குழு 1974-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஜப்பான் நாட்டுக்கு 'இண்டர் நேஷனல் கோ ஆப்ரெடிவ் அலையன்ஸ்' சார்பில் நடைபெற்ற கூட்டுறவு உறுப்பினர் கல்வித் திட்ட கருத்தரங்குக்கு இந்தியாவின் பிரதிநிதிகளாக மூவரை அனுப்பி வைத்தது. இந்த மூன்று பேரில் இருவர் அதிகாரிகள்.



சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியம் நடத்திய பொருட்காட்சியில்...

அதிகாரச் சார்பற்ற முறையில் சென்ற ஒருவர் திரு. கொளத்தூர் கோதண்டம்.

பதினெட்டு நாடுகள் பங்கேற்ற இந்தக் கருத்தரங்கின் மூலம் கூட்டுறவு உறுப்பினர் கல்வித் திட்டத்தில் புதிய முறையைச் செயல்படுத்தும் அனுபவத்தை இவர் பெற்றுள்ளார். இதன் வாயிலாகப் புதிய முறையில் கூட்டுறவுக் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தும் வழிமுறை வகுக்கப்பட்டுள்ளது முன்னோடித் திட்டமாகக் காஞ்சிபுரத்திலும் கும்பகோணத்திலும் இத்திட்டம் செயல்படுத்தும். நம் நாட்டுக்கு ஏற்றவாறு கூட்டுறவு உறுப்பினர் கல்வித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

''ஜப்பான் நாட்டில் கூட்டுறவு பெருமளவில் வளர்ந்துள்ளது. கூட்டுறவுத்துறைகளின் முழுநிர்வாகமும் அரசுக்கு அப்பாற்பட்டு விளங்குகிறது'' என்கிறார் திரு. கொளத்தூர் கோதண்டம்.

'தென்கிழக்கு ஆசியநாடுகள் அனைத்திலும் கூட்டுறவாளர்கள் அனைவரும் முழு ஊதியம் பெறுபவர்களாகவோ அல்லது பகுதிநேர ஊதியம் பெறுபவர்களாகவோ பணியாற்றுகின்றனர்' என்கிறார் இவர்.

''இந்தியாவில் கூட்டுறவுத் துறையில் சிறந்து விளங்கும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று: தமிழ்நாட்டில் கூட்டுறவுத்துறையில் நடைபெறும் முன்னோடித் திட்டங்களை அனைத்து மாநிலத்தினரும் பாராட்டுகின்றனர்.

''தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்கு உள்ளது போல அலுவலகக் கட்டடமும் விருந்தினர் இல்லமும் போன்று வேறு எந்த மாநில கூட்டுறவு ஒன்றியங்களுக்கும் இல்லை'' என்றும் பெருமையோடு சொல்கின்றார். தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு. கொளத்தூர் கோதண்டம்.

கூட்டுறவுத்துறை நிறுவனங்களில் பணிபுரிய பயிற்சி பெற்றோர் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தில் பதிவு செய்து கொண்டு வேலைவாய்ப்புகளைப் பெறத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் உதவுகிறது. இந்த வகையில் கூட்டுறவு ஒன்றியம் வேலைவாய்ப்பு நிறுவனமாகவும் பணியாற்றுகிறது.

கூட்டுறவு ஒன்றியத்தால் நடத்தப்படும் கூட்டுறவுப் பொருட்காட்சி எல்லோராலும் பாராட்டப்படும் பொருட்காட்சியாகும்.

மதுராந்தகத்தில் 1967-ஆம் ஆண்டு நடைபெற்ற கிராம நலக் கண்காட்சி தமிழ்நாட்டிலேயே முதன்முதலாக அமைக்கப்பட்ட கண்காட்சியாகும். அறிஞர் அண்ணா அவர்களால் மிகவும் பாராட்டப்பட்ட இந்தக் கண்காட்சியை ஒட்டியே கூட்டுறவுப் பொருட்காட்சி நடைபெறுகின்றது. காஞ்சிபுரம், மன்னார்குடி, பூம்புகார் போன்ற இடங்களில் நடைபெற்ற கூட்டுறவுப் பொருட்காட்சிகள் எல்லோராலும் பாராட்டப்பட்டன.

கூட்டுறவுப் பணிகள் பற்றிய கலைநிகழ்ச்சிகளும் எங்கும் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் 'கூட்டுறவு' பற்றிய திரைப்படம் எடுப்பதற்கு முதல்வர் கலைஞர் அவர்கள் கதையும் உரையாடலும் எழுதித்தர இசைவு அளித்துள்ளார்கள்.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் மேற்பார்வையிலுள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிக்கு முப்பது இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் ஒன்று கட்டப்படவிருக்கிறது. எல்லாவசதிகளுடனும் பல மாடிக் கட்டடமாக அமையும் இதற்கு டிசம்பர் திங்களிலேயே முதல்வர் கலைஞர் அவர்கள் அடிக்கல்நாட்டவிருக்கிறார்கள்.

இப்படி ஒவ்வொரு பணியிலும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தன்னிகரில்லா வகையில் சாதனைகளை ஆற்றிவருகிறது.

அப்பணிகளின் வெற்றிக்கு ஒன்றியத் தலைவர் திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்களின் அயராத உழைப்பும் ஒரு காரணம் என்பதையும் சொல்லவும் வேண்டுமோ?

—மாமூலன்.

# தஞ்சைத் தரணியில் தேக்கு

எஸ்·ஏ·ரஹமதுல்லா·I·F·S·

இருபது ஆண்டு முன்னர் கேரளம், ஆந்திரம் கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் ஒரு சில பகுதிகள் தமிழ்நாடுடன் இணைந்து இருந்தன. 1956-ஆம் ஆண்டு மாநிலங்களைத் திருத்தி அமைத்த காரணமாக (Re-organisation of States) வளமிக்க வனப் பகுதிகள் பல ஏனைய மாநிலங்களுக்குப் பிரித்து கொடுக்கும் நிலை ஏற்பட்டது. தென்கோவை வனக் கோட்டத்திலிருந்து சுமார் 7000 ஹெக்டர் சிறந்த தேக்குத் தோட்டங்களையும், தேக்கு உற்பத்தி செய்யும் செழிப்பு மிகுந்த காடுகளையும் கேரளாவிற்கு கொடுக்கப்பட்டன. வளம் நிறைந்த மலைப் பகுதிகளையும் மற்ற மாநிலங்களுக்குக் கொடுத்த பின்னர் எஞ்சிய மலைப் பகுதிகள் வளம் குன்றியதாகவும், தேக்குத் தோட்டங்களை மிகவும் குறைவாகக் கொண்டனவாகவும் காணப்பட்டன.

இந்திய வனக்கொள்கையின்படி நிலப்பரப்பில் 33 சதவீதம் வனப்பகுதிகளாக இருத்தல் அவசியம். ஆனால் தற்போது 22 சதவீத வனப்பகுதிதான் உள்ளது. அவற்றில் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் மலைப்பகுதி 16.2 சதவீதமாகும். தமிழ்நாட்டின் மக்கள் தொகை 1971-ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி 41,103,125 ஆகும். தஞ்சை மாவட்டத்தின் ம்க்கள் தொகை 38 இலட்சமாகும்.


தேக்கு மரத்தின் தேவை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருகின்றது. இம்மரத்தின் சிறப்பு யாவரும் தொன்றுதொட்டு அறிந்ததே. இதன் உபயோகம் நம் அன்றாட வாழ்க்கையோடு இணைந்து இருக்கின்றது. கட்டிட வேலைகளுக்கும், நாகரிகமான சாமான்கள் செய்வதற்கும் தேக்கு மரம் பெரும் அளவில் பயன்படுத்தப்படுகின்றது. தமிழ்நாட்டில் தேக்கு மரத்தின் உற்பத்தி மிகவும் குறைந்த அளவில்காணப்படுகின்றது. தேக்கு, இதுபோன்ற மற்ற கடினமான மரங்களின் தேவை தமிழ் நாட்டில் 2.98 லட்ச மெட்ரிக் டன் என்றும், வனத்துறை 0.70 லட்ச மெட்ரிக் டன் மரங்களை மட்டுமே வழங்கும் நிலையில் இருக்கின்றது எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. தேக்கு ம்ரத்தின் தேவைக்கும், உற்பத்திக்கும் இடையே நீண்ட இடைவெளி உள்ளது.

தமிழ்நாட்டில் தேக்கு மரம் பயிரிடத்தக்க இடங்கள் கன்னியாகுமரி, நெல்லை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாவட்டங்களில் ஒரு சில இடத்தில்தான் காணப்படுகின்றன. இம்மாவட்டங்களிலிருந்து நம் மாநில தேவைக்கான தேக்கு மரங்களைப் பெறுவது என்பது இயலாத காரியமாகும். தமிழக அரசு மக்களின் தேவையை உணர்ந்து அதிக அளவில் தேக்குக் காடுகளை உற்பத்தி செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. தமிழ் நாட்டிலுள்ள வனப்பகுதிகளில் அநேக இடங்கள் வளம் குன்றியும், தேக்கு உற்பத்தி செய்வதற்கான போதிய அளவு மழை இல்லாமலும் காணப்படுகின்றன. மலைப்பகுதிகளில் தேவையான இடங்கள் இல்லாத காரணத்தால் அரசுக்குரிய உபரி நிலங்களிலும், நதிக்கரைகளிலும் கால்வாய் ஓரங்களிலும் உள்ள படுகை நிலங்களில் தேக்கு மரங்களையும் மற்றும் கிராமத்து மக்களுக்குப் பயன்படும் மரங்களையும் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டது.

1956-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் நாள் தஞ்சாவூரில் வனக்கோட்டம் ஒன்று நிறுவி தேக்குத் தோட்டங்களை உற்பத்தி செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. காவேரி நதியின் இருமருங்கிலும், அதன் கிளை நதியான கொள்ளிடம், துணை நதிகளான வெண்ணாறு, வெட்டாறு, அரசலாறு, சோலை சூடாமணியாயாறு, நீலாறு, நாட்டாறு, முடிகொண்டான் ஆறு, வேலப்பாறு, திருமலைராசன் ஆறு, குடமுருட்டி ஆறு முதலியவைகளின் கரைகளிலும் தேக்கு, சிசு, வாகை, புங்கம் வேம்பு, கருவேல், மூங்கில் ஆகிய மரங்களை உற்பத்தி செய்யும் வேலைகள் தொடங்கப்பட்டன. இத்திட்டமானது திருநெல்வேலி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் சரகத்திலுள்ள தாம்பரபரணி நதியின் இருகரைகளிலும் தேக்கு உற்பத்தி பெருகச் செய்ய விரிவு செய்யப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் மலைப்பகுதியும், மழையும் இல்லாத போதிலும் தேக்கு மர் உற்






பத்தி செய்வதற்கான மற்ற சூழ்நிலைகள் சாதகமாக அமைந்துள்ளன. காவேரி நதியின் கரைகளில் அமைந்துள்ள பொதுப் பணித்துறையின் அநேக ஓய்வு விடுதிகளில் நூறு ஆண்டுகளுக்கும் முன்னர் வளர்க்கப்பட்ட பெரிய தேக்கு மரங்கள் இருப்பதே இதற்கு சான்றாகும். மேலும் தனியார் தோட்டங்களிலும் தேக்கு மரங்கள், பல ஆண்டுகளுக்கு முன்னர் வளர்க்கப்பட்டு அவை இன்னும் ஓங்கி வளர்ந்து மலைகளில் இயற்கையான சூழ்நிலையில் வளர்வது போன்று காணப்படுகின்றன. தேக்கு மரங்கள் மலைப் பகுதிகளில் மட்டுமே வளரும் தன்மை உடையன, மற்ற இடங்களில் வளர்க்க முடியாது என நிலவி வரும் கருத்திற்கு மாறாக தஞ்சாவூர் மாவட்டத்தில் நதிக் கரைகளில் தேக்கு மரங்கள் நன்கு வளர்ந்து வருகின்றன.

தேக்கு மரம் வளர்வதற்குச் சுமார் 1200 மி.மீ. மழையும், நல்ல வண்டல் மண் பூமியும் தேவையாகும். மழை-நீர் நிலத்தில் நிற்காமல் உடனுக்குடன் வடிதல் அவசியம். மலைப்பகுதிகளில் மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் கடல் மட்டத்திலிருந்து 90 மீட்டருக்கு மேல் 600 மீட்டர் வரையிலும் தேக்கு செழிப்பாக வளர்கின்றது. தஞ்சை மாவட்டத்தில் ஆண்டு சராசரி மழை 850 மி.மீ. முதல் 1420 மி.மீ. வரையில் உள்ளது. சராசரி வெப்பநிலை 900 பா. ஆக அமைந்துள்ளது. மேலும் காவேரி நதிக் கரைகளிலும், கால்வாய் ஓரங்களிலும் வண்டல் மண் அதிகமாகப் படிந்துள்ளது. வருடத்தில் ஒன்பது மாதங்களுக்குக் குறைவில்லாமல் கால்வாய்களில் தண்ணீர் இருந்து வருகின்றது. மேலே குறிப்பிட்ட தனிச்சிறப்புகளால் தஞ்சை மாவட்டம் தேக்கு மர வளர்ச்சிக்குச் சாதகமான சூழ்நிலையைத் தன்அகத்தே கொண்டுள்ளது என்பது புலனாகிறது.

தேக்கு மரங்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதை சிறிது ஆராய்வோம். தேக்கங்கழிகள் (நாற்றுகள்) நடுவதற்கு முந்திய ஆண்டு தேக்கு நாற்றுங்கால் அமைக்கப்படுகின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த தேக்கு விதைகளை கோவையில் சேகரம் செய்து-உபயோகிக்கப்படுகிறது. ஒரு கிலோ விதையில் 1800 விதைகள் உள்ளன. சமதள பூமியில் 30 செ.மீ. ஆழத்திற்கு மண்ணைக் கிளரிவிட்டு 10 மீ. நீளத்திலும் 1 மீ. அகலத்திலும் பாத்தி அமைக்க வேண்டும். கால் வண்டி அளவு பண்ணை எருவு இட வேண்டும். பின்னர் பாத்தியின் நான்கு பக்கங்களிலும் மரக்குச்சிகளை நிறுத்தி, நீண்ட மரத்துண்டுகளையோ அல்லது மூங்கில் தட்டிகளையோ சுற்றிலும் வைத்து மரக்குச்சிகளோடு நன்கு கட்டப்பட வேண்டும். பாத்தியில் போதிய அளவு வண்டல் மண் போட்டு, எட்டு முதல் பத்து கிலோ தேக்கு விதைகளைப் பரவலாக விதைக்க வேண்டும். விதையின் மேல் சிறிது மண் தூவி விதைகளை மூடுவது அவசியம். அவற்றிற்கு மேல் வைக்கோலைச் சிறிதளவு பாத்தியின் மேல் பரப்பி காலையும் மாலையும் பூவாளியினால் தண்ணீர் விடவேண்டும். இந்த வேலைகள் யாவும் ஏப்ரல் மாதத்திற்கு முன்பே முடித்தாக வேண்டும். விதைகள் முளைக்க ஆரம்பித்த உடன் வைக்கோலை பாத்தியிலிருந்து அகற்றி விடவேண்டும். பின்னர் களை எடுத்தல் அவசியம். மேலே குறிப்பிட்ட அளவில் தயார் செய்யப்பட்ட ஒரு பாத்தியில் ஐந்து ஹெக்டர் அளவில் உற்பத்தி செய்யும் தேக்கு நாற்றுகளைப் பெறமுடியும். ஓராண்டு நாற்றுகளே நடுவதற்கு உகந்தவை. தேக்கு நாற்றுகளை நடுவதற்கு முன்னர் அவைகளை 6 முதல் 8 அங்குல குச்சிகளாக (Stump) மாற்றப்படுகின்றன. நாற்றின் வேர்ப் பகுதியில் சுமார் 7 அங்குலம் விட்டு துண்டிக்கப்படுகின்றது. வேருக்கு மேலுள்ள தண்டுப் பகுதியில் சுமார் ஒரு அங்குலம் அளவு விட்டு துண்டிக்கப்படுகிறது. வேரின் மேல் பாகம் (Collar) 2 செ.மீ. முதல் 5 செ.மீ. வரை சுற்றளவு உள்ளதாக இருந்தல் அவசியம். துண்டிக்கப்பட்ட தண்டு பாகத்தின் மேலே மெழுகு பூசப்படுகின்றது. இது தண்டுப் பாகம் கெட்டுப் போகாமல் இருக்க உதவுகிறது.



காவேரிக் கரைகளிலும், கிளை நதிக் கரைகளிலும் தேக்கு நாற்றுகளை 3.5 மீட்டர் இடைவெளி அளவிற்கு ஒன்றாக இரும்புக் கம்பிகளால் துளை செய்த சிறு குழிகளில் நடப்படுகின்றன. இந்த நடுவை ஜூன்-ஜூலை மாதங்களில் கால்வாய்களில் தண்ணீர் திறந்து

விடப்பட்டதும் துவங்குகிறது. நட்ட நாற்றுகளைச் சுற்றிலும் 60 செ.மீ. விட்டத்தில் 15 செ.மீ. ஆழத்தில் பண்ணை (Saucer) அமைக்கப்படுகின்றன. ஒரு நாற்றிற்கு ஒரு குடம் அளவில் (10 லிட்டர்) ஒரு நாள் விட்டு இருபது நாட்களுக்குத் தண்ணீர் விடப்படுகின்றது. ஒரு நபர் ஒரு நாளைக்கு 200 நாற்றுகளுக்கு தண்ணீர் விட முடியும். பின்னர் ஐந்து தினங்களுக்கு ஒரு முறை தண்ணீர் விடப்படுகிறது. அக்டோபர் மாதத்தில் பட்டுப்போன நாற்றுகளுக்கு பதில் நாற்றுகள் போடப்படுகின்றன. ஒரு ஹெக்டர் நிலப்பரப்பில் 200 நாற்றுகள் நடமுடியும். நாற்றுகளைப் பாதுகாக்க 800 நாற்றுகளுக்கு (4 ஹெக்டர்) ஒரு நபர் காவலராக நியமிக்கப்படுகிறார். தேக்குச்சாலைத் தோட்டங்களில் 1.5 கிலோ மீட்டருக்கு 1000 நாற்றுகள் நடமுடியும் (5 ஹெக்டர்). மழைக் காலங்களில் தேக்கு நாற்றுகளைச் சுற்றிலும் தேங்கி நிற்கும் மழை நீரை உடனுக்குடன் வடிய வைத்தல் மிகவும் அவசியம். கோடை காலத்தில், நட்ட தேக்கு நாற்றுகளுக்கு தண்ணீர் விடப்படுகிறது. கால்வாய்க் கரைகளில் கிணறுகள் வெட்டப்படுகின்றன. தேக்கு நாற்றுகளை நட்ட முதல் ஆண்டில் இரண்டு முறை களை எடுத்தும் ஒரு முறை நாற்றைச் சுற்றிலும் மண்ணைக் கிளரிவிடும் வேலையும் டிசம்பர்-ஜனவரி மாதங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

சேதாரம் அடைந்த நாற்றுகளைத் துண்டித்து நன்கு பராமரிக்கப்படுகின்றன. முதல் ஆண்டு செய்த வேலைகள் இரண்டாவது ஆண்டிலும் செய்யப்படுகின்றன. தேக்கு நாற்றுகளில் இரண்டு அடிக்கு மேல் உள்ள பக்கவாதுகளைத் துண்டித்து பராமரிக்கப்படுகிறது. மேலும் நாற்றுகளின் மீது படர்ந்துள்ள கொடிகளையும் வெட்டி அப்புறப்படுத்தப்படுகின்றது. இரண்டாவது ஆண்டு முடிய ஒரு நாற்றிற்கு ஆகும் செலவு ரூபாய் 2.40 ஆகும். நாற்றங்கால் செலவும் இதில் அடங்கும். மூன்றாவது ஆண்டு தேக்கு மரத்தின் பக்க வாதுகளை மட்டும் அப்புறப்படுத்தப் படுகின்றது. நான்காவது ஆண்டு சாலைத் தேக்குத் தோட்டத்தை பொதுப் பணித் துறையிடம் ஒப்புவிக்கப்படுகின்றது. இவ்வாறு நட்ட தேக்கு மரங்கள் நன்கு வளர்ந்து, பயன்தரும் நிலையை அடைந்ததும் அவைகளை, அவற்றின் வளர்ச்சிக்கேற்ப வணிக அடிப்படையில் பல இனங்களாகப் பிரித்து வெட்டி, அப்புறப்படுத்தி விற்பனை செய்யப்படுகின்றன. தேக்கு வாரிகளாகவும், சிறு உத்திரங்களாகவும், கிளைகளை விறகுகளாவும் விற்பனை செய்யப்படுகின்றன. விற்பனை மூலம் கிடைக்கப்பெற்ற வருமானத்தை வனத்துறைக்கும், பொதுப்பணித் துறைக்கும் பகிர்ந்து கொடுக்கப்படுகின்றது. தஞ்சையில் உற்பத்தியாகும் தேக்கு இந்தியாவில் உற்பத்தியாகும் சிறந்த தேக்குகளில் நான்காவது தரத்தில் இடம் பெறுகிறது.



இதுவரை தஞ்சை மாவட்டத்தில் தேக்கு மற்றும் சிசு, புங்கம், வேம்பு, மூங்கில் முதலியன 6756 ஹெக்டரில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும் இம்மாவட்டத்தில் 7000 ஹெக்டர் நிலத்தில் தேக்கு மற்றும் கடின மரங்கள் வரும் பதது ஆண்டில் உற்பத்தி செய்யத்திட்டமிடப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் தேக்குத் தோட்டங்கள் கல்லணையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு காவேரி மற்றும் அதன் கிளை நதிக்கரையோரங்களில் ஏறத்தாழ 2174 கி.மீ. (Avenue) அளவில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. இம்மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட தேக்குத் தோட்டங்களில் திருகாட்டுப்பள்ளி, திருவையாறு, பாபநாசம், நாச்சியார் கோவில், நன்னிலம் முதலிய இடங்களில் காணப்படும் தோட்டங்கள் (Compact areas) கன்னியாகுமரி, மதுரை, கோயம்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கும் தேக்குத் தோட்டங்களுக்கு இணையாக விளங்குவது தஞ்சைத் தேக்கின் சிறப்பு நிலையாகும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் வாழும் மக்களின் அன்றாடத் தேவைக்கான தேக்கு மரங்கள் வெளி மாவட்டங்களிலிருந்தும், கொண்டு வரப்படுகின்றன. தேக்குப் பலகைகள், சட்டங்கள் முதலியன போதிய அளவில் கிடைக்காத காரணத்தாலும் வெளி இடங்களிலிருந்து இறக்குமதி செய்வதாலும் இந்த மாவட்ட மக்கள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இந்நிலை மாற வேண்டுமானால் மேலும் அதிகமான படுகை நிலங்களை தேக்குத் தோட்டங்களாக மாற்றும் பணியில் அதிகமாக ஈடுபடவேண்டும். இது சம்பந்தமாக அரசும், வனத்துறையும் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றன. இந்த மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் தேக்குத் தோட்டங்கள் ஓர் அளவு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்பதில் ஐயமில்லை. ஆயினும் வருங்காலச் சந்ததியினரின் தேவைக்கான தேக்கு மரங்களை அதிக அளவில் மேலும் உற்பத்தி செய்வது நமது கடமையாகும்.

இம்மாவட்டத்தில் தேக்குக் காடுகள் அதிக அளவில் உற்பத்தி செய்வதின்மூலம் காவேரி, அதன் உபநதிகளின் கரைகளும் மிகவும் பலப்படுத்தப்படுகின்றன. தேக்கம் வேரின் அமைப்பு வலை போன்று மண்ணில் பரவி இருக்கின்ற தன்மையால் சுலபமாக மண் அரிப்பு ஏற்படாது காத்துக் கால்வாய்க்கரையை நன்கு வலுப்படுத்துகின்றது. நீர் ஓட்டத்தின் வேகத்தாலோ அல்லது வெள்ளப்

பெருக்கத்தால் ஏற்படும் அழுத்தத்தாலோ மண் சரிவு ஏற்படாது தேக்குத் தோட்டங்கள் பாது காக்கின்றன. பலத்த மழைகாலங்களில் காவிரியிலும் அதன் கிளை நதிகளிலும் வெள்ளம் கரை புரண்டு பரவலாக ஓடும் காலத்தில் நதியின் கரைகளும், அதை அடுத்த நெல்வயல்களும் சேதம் அடைவது இயல்பு. ஆனால் எங்கெங்கே மரம், சோலை, தேக்கந் தோட்டமாக இருந்ததோ அங்கெல்லாம் இவ்வாறு சேதம் மிகவும் குறைந்த அளவில்தான் ஏற்படுகிறது. 1960 ஜுலை மாதம் எதிர்பாராது ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சேதமடைந்த கரைகளில் மரங்கள் இல்லாததுதான் முக்கிய காரணம் என்பது அது சமயம் தணிக்கையிட்டோர் அறிந்த உண்மை.

மேலும் தேக்குத் தோட்டங்கள் நதிக்கரைகளில் வரிசை, வரிசையாக அமைந்திருக்கின்ற தோற்றமும், பசுமையான நெல் வயல்களுக்கு அருகில் வானளாவி நிற்கும் தோற்றமும் பார்ப்பவர் பரவசமடையவும் செய்து, அவர் உள்ளத்தில் புத்துணர்ச்சியையும், மகிழ்ச்சியையும் தோற்றுவிக்கின்றன. தேக்குத் தோட்டங்களுக்கிடையே செல்லும்போது கதிரவனின் கடுமையான வெப்பத்தை நாம் சிறிதும் உணர்வது இல்லை. கால்வாய்ச் சாலைகளில் சிறந்த நிழல் தரும் தோட்டங்களாக அமைந்திருக்கின்றன. இவையெல்லாம் சுற்றுலா வளர்ச்சிக்கு அவசியமாகும்.

ஒரு கிலோ மீட்டர் அல்லது 3 ஹெக்டர் பரப்பளவில் தேக்கு தோட்டம் உற்பத்தி செய்ய ஏற்படும் செலவு விவரம் வருமாறு.

செலவு :

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | நாற்றங்கால் செலவு | .. | ரூ. | 14.00 |
| 2) | முதல் ஆண்டு உற்பத்தி செலவு (தண்ணீர் விடுதல் சேர்த்து) | .. | ரூ. | 728.40 |
| 3) | இரண்டாவது ஆண்டு பராமரிப்பு செலவு | .. | ரூ. | 720.00 |
| | ஆக மொத்தம் | .. | ரூ. | 1,462.40 அல்லது 1,460.00 |
| | ஒரு ஹெக்டர் தேக்கம் தோட்டம் உற்பத்தி செய்ய ஆகும் செலவு | | ரூ. | 487.00 |


மக்கள் நலனைக் கருதி அரசு ஏற்படுத்தும் திட்டங்கள் நல்ல முறையில் செயல்பட மக்களின் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாதது. மக்களின் ஆர்வத்தைப் பொறுத்தும் அரசிற்கு அவர்கள் நல்கும் ஒத்துழைப்பைப் பொறுத்துமே எந்தத் திட்டமும் திறம்பட அமையும். கிராமப் புறங்களில் செயல்படுத்தும் திட்டங்களில் அந்தக் கிராம மக்களின் பொறுப்பும், கடமை உணர்ச்சியும் அந்தத் திட்டத்தின் பெரும் வெற்றிக்கு அடித்தளமாக அமைகின்றன. மக்களின் எண்ணத்தின் பிரதிபலிப்பே திட்டத்தின் முன்னேற்றத்திற்கு உயிராக அமைகின்றது. தஞ்சை மாவட்டத்தில் தேக்குத் தோட்டங்கள் உற்பத்தி செய்யும் முயற்சியில் ஆரம்ப காலத்தில் வனத்துறை பல இன்னல்களை எதிர்நோக்கி, இறுதியில் மக்கள் ஒத்துழைப்பால் இந்த ஆயிரக் கணக்கான ஏக்கர் தோட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டன. நாட்பட நாட்பட திட்டத்தின் சிறப்பு அம்சங்களை மக்கள் உணர நேர்ந்ததும் ஒத்துழைப்புக் கொடுக்க முன் வந்தனர் என்பது போற்றத்தக்கதாகும்.

இம்மாவட்ட மக்கள் மேலும் ஆர்வம் பெற்று அரசிற்கும் வனத் துறைக்கும் ஊக்கமும், பெரும் ஒத்துழைப்பும் கொடுக்க முன் வருவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ''சோழ நாடு சோறுடைத்து'' என்னும் முதுமொழியைத் தொடர்ந்து ''சோழ வள நாடு தேக்குமுடைத்து'' என்னும் புதுமொழி தோன்றும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

## மாவட்ட வாரியாகச் சேர்ந்த தொண்டர்கள் எண்ணிக்கை

| வரிசை எண் | மாவட்டம் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | செங்கற்பட்டு | 3,210 | * * * | 3,210 |
| 2. | வட ஆர்க்காடு | 2,964 | 37 | 3,001 |
| 3. | தென் ஆர்க்காடு | 5,513 | 108 | 5,621 |
| 4. | தருமபுரி | 1,900 | 100 | 2,000 |
| 5. | சேலம் | 5,977 | 416 | 6,393 |
| 6. | கோயம்புத்தூர் | 4,890 | 185 | 5,075 |
| 7. | மதுரை | 3,164 | 84 | 3,248 |
| 8. | இராமநாதபுரம் | 5,439 | 371 | 5,810 |
| 9. | தஞ்சாவூர் | 11,076 | 129 | 11,205 |
| 10. | திருச்சிராப்பள்ளி | 3,137 | 157 | 3,294 |
| 11. | திருநெல்வேலி | 2,500 | 207 | 2,707 |
| 12. | நீலகிரி | 998 | 76 | 1,074 |
| 13. | கன்னியாகுமரி | 462 | 22 | 484 |
| 14. | சென்னை | 3,000 | 60 | 3,060 |
| | | 54,230 | 1,952 | 56,182 |

# விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்



## அதிக விலை கொடுக்காதீர்கள்

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை. அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள். எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR IC CEMENT

**இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்**
175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

IS:269 மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது.

## சங்கர் சிமெண்ட்
தயாரிப்பாளர்கள்

FDSIC/1813TMA



இலக்கியங்களுக்கு
இறவாப் புகழ் தருவது...

காகிதம்

ஹோமர் முதல் ஹெமிங்வே வரை,
காளிதாசர் முதல் காஃப்காவரை,
ஆதிசங்கரர் தொட்டு அரிஸ்டாடில் வரை,
திருவள்ளுவர் தொட்டு தோரூவரை......

*தரமான காகிதம், சிந்தனையாளர்களின் எண்ணங்களும், கருத்துக்களும் காலத்தால் அழிவுறா வண்ணம் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கி உதவுகிறது.*

## சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்

பள்ளிப்பாளையம்,
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு

SPB

The Watermark of Quality

எழுத, அச்சிட, உறையிட
உன்னதமான காகிதங்கள்

# காணி நிலம் வேண்டும்

பூவை எஸ். ஆறுமுகம்

## 24. சீதைக்கேற்ற ராமர்! ராமருக்கேற்ற சீதை!

பச்சைமண் அழகாகக் கண் வளர்ந்து, அன்பாகக் கண்மலரும் காட்சியே காட்டி! அந்தக் கண்கொள்ளாக் காட்சியை நடைமுறையில் சொல்லிக் காட்டும் அர்த்தத்தில், பொழுது மெல்ல மெல்ல விடிந்து கொண்டிருக்கிறது.

வீரமணி நீராடி, நீறுதரித்து மகமாயியைச் சந்தித்துத் திரும்பினான். வீட்டின் தலைவாசலை மிதித்ததும் அவனுக்குத் 'திகீ'ரென்றது. வீட்டை ஏக்கமும் சோகமும் சூழ, ஏற இறங்கப் பார்வையிட்டான். எதை நினைப்பான்? எதை மறப்பான்? நீள் மூச்சுப் பிரிந்தது. பிரிந்து கிடந்த 'யூரியா—அமோனியம் பாஸ்பேட்' உரங்களைக் கண்டதும், அவனுக்கு நெஞ்சை அடைத்தது. கண்கள் குளமாயின. 'அன்பு, தர்மம், சத்தியம் முதலான மனிதாபிமானக் குணப்பண்புகளை மனிதன் கைவிடாத பரியந்தம், அவனைத் தெய்வம் ஒருபோதுமே கைவிடாது! பின் மனிதன் ஏன் தெய்வமாக ஆக முடியாது? தெய்வமாக ஆகாவிட்டாலும் மனிதன் கேவலம் மிருகமாக மாறாமல், கடைசிப் பட்சம் மனிதன் மனிதனாக நிலைத்து நிற்கவாவது பழகக்கூடாதா? ஆத்தா!' என்று கொட்டாவி தொடர்கதை படித்தது.

விடியாத இரவும் விடிந்து விட்டது!

தண்டோராச் சத்தம் கேட்டது.

பாம்பைக் கண்டமாதிரி பயந்து, ஆனால் பாம்பை நோக்கிப் பாய்ந்தவராக வெளியே ஓடிவந்தார் பெரியவர்; ''ஐயையோ, தெய்வமே! ஐயோ, ஆத்தா!'' என்று நெஞ்சைப் பிசைந்து கொண்டே ஓலம் பரப்பினார்.

''அப்பா!..ஐயோ, அப்பா!'

வீரமணியின் அன்பெனும் பிடியில் தலைசாய்ந்த பிடியாகச் சாய்ந்தார் ஆதிமூலம்.

''அப்பா!'' விம்மினான்; வெடித்தான் வீரமணி. கருப்பாயாவும் நடராசனும் கொணர்ந்து தந்த விசிறியையும் செம்பையும் வாங்கினான். தந்தையின் முகத்தில் நீரைத் தெளித்தான்; ஒரு கையினால் மார்பைத் தடவிக் கொடுத்துக் கொண்டே இன்னொரு கையினால் விசிறினான்.

அட்சய பாத்திரமாகப் பொழிந்த-பொலிந்த வெய்யிலின் குடை நிழலிலே நடந்து கொண்டேயிருந்த தர்மயுத்தத்திற்குச் சவால் போலே தமுக்குச் சத்தம் அண்டி வந்தது;

கச்சேரிச் சேவகன் புடை சூழ, அங்கே வாசலில் தோன்றினார் சிங்கப்பூர்ச் சீமான் ராமையாத் தேவர்.

ஆடிப்பட்டத்தில் தூவப்பட்ட விதைநெல் பருவமும் பருவமழையும் பெற்றதும் நாற்றுக் கண் திறப்பது உண்டு. அதுமாதிரி, ஊர்த் தலைக்கட்டு பெரியவர் கண்களைத் திறக்கலானார்; ''தம்பி வீரமணி! ஆதியிலே நான் போட்டு வச்சிருந்த அயனை திட்டப்படிக்கு நீ சிலட்டூர்க் கங்காணி மகள்



பவளக்கொடியைக் கண்ணுலம் கட்டிக்கிட நல்ல வாக்குக் கொடுத்திருந்தால், சிலட்டூர்க் கங்காணியைக் கொண்டு நான் உன் அம்மான் பாவி ராமையா வுக்குக் கொடுக்க வேண்டிய கடன் பூராத்தையும் இந்நேரம் அடைச்சிருப்பேனே? புரோ நோட்டிலே வரிஞ்சுக்கிட்டு ஆனல், கொடுக்காமல் ஏமாற் றின பணம் ரூபாய் ரெண்டா யிரத்துக்குத்தான் அதுக்கு மேலே பெறுமதி கொண்ட வைரச்சிமிக்கி ரெண்டையும் சிக்க வச்சுக்கிட்டேனே! நீ பவளக்கொடியைக் கொண்டுக் கிட ஒப்புதல் சொல்லியிருந் தால், உன் பேரிலே எந்தப் பழியையுமே அந்தப் பவளப் பொண்ணு மனசு துணிஞ்சு சொல்லியும் இருக்காதே! ஐயை யோ! ஊருக்கு நாட்டாண்மை செஞ்சுக்கிட்டு தலைமுறை தத்துவமாய்க் கட்டிக் காத்து வந்த நம்ப குடும்ப கவுரவமும் மானமும் கப்பலேறப் போகு தேடா, பாவி!'' என்று புலம்பி ஞர்; மண்டையில் அடித்துக் கொண்டு, மயிரைப் பிய்த்துக் கொண்டார் பெரியவர்.

வீரமணி அமளி துமளியாகச் சிரிப்பைக் கக்கிஞன்.

''அட, ரோசம் கெட்ட வனே! நீ என் மகனு? சே!நான் வயிறு வெடிக்க அழுகிறேன். நீ வயிறு குலுங்கச் சிரிக்கிறீயா? ஊம், சிரி; நல்லாச்சிரி. மானம் இல்லாமல் இப்படிச் சிரிக் கிறியே நீ? நீ என்ன பெரிய விதியாக்கும்? ம்..இன்னும் நல் லாய்ச் சிரி. பொட்டுப் பொழு துக்குள்ளே என் சீவன் பட் டுன்னு பிரிஞ்சிடும். நல்லாச் சிரிடா பாவிமகனே!''

''அப்பா!'' என்று கூக்குர லிட்டான் வீரமணி. ''ஆமா, நான் பாவி மகன்தான்!'' என்று விம்மினன். ''ஏய் வெத்துவேட்டு நாட்டாண் மைக்காரரே! கையாலாகாத பேடிகணக்கிலே பதுங்கிக்கிட்டு இருந்தால், சட்டம் உம்மைச் சும்மாவா விட்டுப் பூடும்? வாருங்காணும், வெளியிலே!'' என்று கொள்ளிவாய்ப் பிசா சாக இடிமுழக்கம் செய்து கொண்டிருந்த தாய்மாமன் ராமையாத்தேவரின் சுடுகணை களை நெஞ்சில் உதிரம் வழிய ஏந்தியவனக, அருமைத் தந் தையைத் தரையிலே கிடத்தி விட்டு, உள்ளே தாய் வீட்டுக்கு ஓடித் திரும்பினன் வீரமணி. ''அப்பா, நான் பாவிமகனே, என்னவோ! அந்தத் துப்பு உங்களுக்குத்தானே புரியுமுங்க? ஆனு நான் பாவி இல்லே! இன்னெரு ரகசியத்தை நீங்க புரிஞ்சுக்கிட்டால் தேவலாம். உங்களுக்கு ஆயுசு கெட்டி!'' என்று தாழ்குரலில் கூறிவிட்டு, தலைவாசலுக்கு ஓடத் தலைப் பட்டான் ஆதிமூலத்தேவரின் புதல்வன். பிறகு என்ன நினைத்துக் கொண்டானே? திரும்பவும் தந்தையைப் பிடித்து உட்கார வைத்தான். ''அப்பா! விதி என்ன விதி? விதியை மதியாலே வெல்லலா மாக்கும்!'' என்று தெரிவித்து விட்டு மறுபடியும் வாசலுக்கு ஓடலானன் வீரமணி.

சமுதாயம் என்பது வெறும் நாலு பேருக்கு மேற்பட்டது; அப்பாற்பட்டது என்கின்ற நியதிக்கு வாய்த்த தத்துவ மெனக் கூட்டம் நிர்த்தூளிப் பட்டது.

வீரமணி தலைவாசலில் வந்து நின்ருன்; கூட்டத்தை நாட் டத்தோடு நோட்டம் இட் டான்; முகத்தை வெகு கம்பீர மான மிடுக்குடன் உயர்த்தி ஞன்; ''அம்மான்!'' என்று கோபாவேசத்தோடு அலட்டி ஞன்; அடிமடியைத் தடவிப் பார்த்துக் கொண்டான். சத்தி யம் சுடர் தெறிக்கக் காட்சி யளிக்கும் வீரனைப் போன்று காட்சியளித்தான் அவன்.

ராமையாத் தேவர் கலக்கம் மிஞ்ச, நிமிர்ந்தார். அவரு டைய எக்காளச்சிரிப்பு இப் போது போன இடம் தெரியக் காணும்!

''மாமா, வார்த்தையை எண்ணிப் பேசுங்க, ஆமா!''

''உங்க அப்பன் என்கிட்டே பட்டிருக்கிற கடன் ரூபாய் இருபதாயிரத்தை வட்டி முதல் தொகையோடே 'ஐசாபைசா' வாக எண்ணி வச்சுட்டால், நான் வார்த்தையை எண்ணிப் பேசமாட்டேனு, மாப்பிள்ளே?

''மாப்பிள்ளையும் ஆச்சு மண் ணுங்கட்டியும் ஆச்சு! மாப் பிள்ளை முறையெல்லாம், முறைகெட்ட உமக்கு ஒரு கேடாக்கும்?''

''ஓகோ! அம்புட்டு ரோசம் பொத்துக்கிட்டு வந்தாக்க, இப்பவே இந்த மினிட்டிலேயே என் கடனை அப்பனும் மகனும் எண்ணி வச்சுப்பிடுறது தானே? இல்லே ஓங்க வீடு வாசல், காணி கரை சகலத்தையும் கச் சேரி அமினவைக் கொண்டு இப்பவே சட்டப்படி ஐப்தி பண்ணி ஏலம் விட்டுப்புடு வேன்!'' என்று ராமையா கொக்கரித்தார்.

''எங்களோட வீடு வாசலை யோ, இல்லே நிலம் நீச்சையோ இல்லே, காடு கரம்பையையோ ஏலம் விடுறதுக்கு நீங்க செத்து சிவலோகம் போய்த் திரும்ப வேணுமாக்கும்!'' என்று அரும்பு மீசையைக் குறும்பாக முறுக்கிக் கொண்டே எக்காள மிட்டான் வீரமணி. கண்களில் ரத்தம் 'பாத்தி' அமைத்திருந் தது.

புத்தி தடுமாறியவர்போன்று பாய்ந்து வந்தார் நாட்டாண் மைத் தேவர். பதுங்காமல் பாயுமே, கிழட்டுப்புலி, அப் படி! ''டேய் ராமையா! உம் புட்டு மானம் மரியாதை எல் லாத்தையுமே உன்னேட சிறுக்கி செங்கமலம் ஏலம் போட்டுப்புட்டு, வேடிக்கை காட்டி, வேடிக்கை பார்த்துக் கினு நிற்கிருளே? அந்த இடு சாமக் கதையெல்லாம் மறந் துப்புட்டியாடா? என் உயிர் என்னேட எலும்புக் கூட்டிலே உறைஞ்சு இருக்கிறமட்டுக்கும் உன் பேராசைக் கோட்டை யிலே இடியைத்தான் வீசுவாள் ஆத்தாமகமாயி! எனக்கு முன் னலேயே என்னேட சொத்துச் சுகங்களை ஏலம் போடப்போ றேன்னு நாக்குமேலே நாக்குப் போட்டுச் சொல்லுறதுக்கு உனக்கு அம்மாம் தைரியம் வந்திடுச்சாடா? ஊம், எங்கே காட்டு உன் கைவரிசையை? நானும் உன்னை ஒரு கை பார்த் துக்கிடுறேன்! ம்..'' என்று உச் சாடனக் குரலெடுத்து உக்கிரத் தோடு முழங்கினர் பெரியவர். அவிழ்ந்து திரிந்த வெண்முடி களை முடிந்து கொண்டார் அவர்.

''ஐயா அமீன! கோர்ட்டு உத்தரவை அமல்படுத்தி நட வடிக்கை எடுங்க! ம்..சீக்கிரம்!'' என்று உத்தரவிட்டு, ஊர்க் கூட்டத்தை ஊடுருவிய வண்

தமிழ்நாட்டில் கோவை, நீலகிரி, சேலம், திருச்சி ஆகிய மாவட்டங்களுக்கான 'வட்டா ரக் கிடங்குக் கழகம்' ஒன்றை அமைப்பது குறித்துத் தமிழக அரசு திட்டமிட்டு வருகிறது.

இந்த மாவட்டங்களில் உள்ள 10 பெரிய 'மொத்த விற்பனைக் கூட்டுறவுச் சங்கங் கள்' இந்தப் புதிய கழகத்தில் அங்கம் வகிக்கும். இவற் றின் பிரதிநிதிகள், இந்தக் கழகத்தின் நிர்வாகக் குழு வில் இடம் பெறுவர்.

ணம்ஏளனமாகஎக்காளமிட்டுச் சிரிக்கலானார் சிங்கப்பூர்ச் சீமான் ராமையா.

''டேய் சண்டாளப்பாவியே ....ராமையா!'' என்று விண்ணும் மண்ணும் அதிர அலறிக் கொண்டே தன் மைத்துனன் ராமையா மீது பாய்ந்தார் ஆறுகரை ஆதிமூலம்.

பெற்றவரைத் பதட்டத்துடன் பாய்ந்தோடித் தடுத்தான் வீரமணி. பிறகு, தயங்கி பயந்து முன்னேறிக் கொண்டு நீதிமன்றச் சேவகருக்குக் குறுக்கே மறித்து நின்றான்!

''அமீனா ஐயா! இப்படியே நிற்கிற இடத்திலேயே நில்லுங்க. வாதி ராமையாத் தேவருக்குப் பிரதிவாதியான என்னோட தகப்பனார் கொடுக்க வேண்டிய கடன் முதல் ரூபாய் இருபதாயிரமும் இதுக்குச் சட்டப்படி உண்டான வட்டிப் பணம் ரூபாய் மூவாயிரத்து அறுநூற்றுச் சொச்சமும் இதோ கைக்கு மெய்யாக வச்சிருக்கேன்!'' என்று நாணயமும் கம்பீரமும் குலிங்கிட, அடிமடியிலிருந்து கரன்ஸி நோட்டுக் கத்தைகளை வீரமணி வெளியே எடுத்துக் காட்டினான். இளங்கதிரொளியில் அசோகச் சக்கரங்கள் மின்னிச் சுழன்றன. ''ஊம், புறப்படுங்க. கோர்ட் அடைக்கிறதுக்குள்ளே நானே அங்கே கட்டிப்பிடுவேன். இன்னும் கால்மணி நேரத்திலே அறந்தாங்கியிலேருந்து வருற தஞ்சாவூர் பஸ் சாலைக்கு வந்திடும்'' என்றான் வீரமணி.

''மகனே!'' என்று மெய் சிலிர்க்க விம்மி அழுதார் ஊர் நாட்டாண்மைக்காரர் ஆதிமூலத்தேவர்.

சிங்கப்பூர்ச் சீமான் ராமையாத் தேவர் முகத்தில் ஏமாற்றமும் அசடும் ஒன்றுக்கொன்று போட்டிக் கொண்டு வழிய, சிலையாக நின்றார்.

கூட்டம் மூக்கில் விரலை வைத்தது.

அப்போது.

வேலைக்காரன் பரமசிவம் தலைதெறிக்க ஓடிவந்தான். ராமையாத்தேவரின் முன்னே மூச்சிரைக்கநின்றான். ''எசமான் வெள்ளம் தலைக்கு மேலே பூடுச்சுங்க! தங்கச்சி அன்னம் தன்னோட அத்தை குடும்பத்தைச் சந்திசிரிக்க வச்சுப்புடாதீங்கன்னு விடிய விடிய உங்க காலடியிலே விழுந்து கெஞ்சிக் கூத்தாடிச்சுங்களே! நீங்க கேட்கவே மாட்டேன்னு சொல்லிட்டீங்களே? இப்ப உங்களையும் கேட்காமல் குன்றிமணி விதைகளை அரைச்சுக் குடிச்சிடுச்சுங்க!....... பேச்சு மூச்சு இல்லாமல் கிடக்குதுங்களே, முதலாளி!'' என்று கதறினான்.

''ஐயையோ, மகளே!'' என்று நெஞ்சு வெடிக்ககூப்பாடு போட்டுக் கொண்டே ஓடினார் ராமையாத்தேவர்.

அன்னம்! என் தெய்வமே!'' விண்முட்டி மண்முட்ட அலறினான் வீரமணி.

பிரளயத்தில் சிக்கித்தவித்து. ஜீவமரணப் போராட்டம் நடத்தி, பின்னர், உயிர்தப்பிப் பிழைத்த நாணயமான அமைதியோடும் நேர்மையான ஆனந்தத்தோடும் வீரமணி தன்னுடைய மனையின் மண்ணை அந்த கும்மிருட்டில் மிதித்தபோது, ரத்த ஓட்டம் வேலை நிறுத்தம் செய்துவிட்ட மாதிரி அரைக்கணம் உணர்ந்தான், தவிப்பு துடித்தது.

அப்பா இருமிக் கொண்டிருந்தார்.

''அப்பா,'' என்று விளித்தான் வீரமணி. ''தஞ்சாவூர்க் காரியம் முடிஞ்சாச்சு, கோர்ட்டிலே அம்மான் கடனைக் கட்டியாச்சுங்க,'' என்று விவரம் சொன்னான். முகமும் கண்களும் ஒளிகாட்டின.

''தம்பி, வீரமணி'' என்றார் ஆதிமூலத்தேவர். நெஞ்சைப் பிசைந்து கொண்டார். ''பணம் காசோட அருமைபெருமையை என்னைக் காட்டிலும் நீ ரொம்ப கச்சிதமாகப் புரிஞ்சுக்கிட்டு, மரபு காத்து வந்த நம்மோட குல கவுரவத்தையும் குடும்ப மானத்தையும் கட்டிக் காத்துக் காட்டிப்புட்டே!'' என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார். என்னவோ ரகசியம் கேட்கவோ, அல்லது ரகசியம் சொல்லவோ எண்ணியிருக்க வேண்டும்.

பாசம் பூவிலங்காகச் சுமக்க, ''அப்பா! புறப்படுக நம்ம சொந்த மண்ணுக்கு!'' என்றான் வீரமணி.

''இதுதானே நமக்குப் பூர்வீகமான சொந்தமண், தம்பி?' என்று உயிரும் உள்ளமும் நடுங்கி ஒடுங்கக் கேட்டார் ஆதிமூலம்.

வீரமணி தொண்டை கம்மப் பேசலானான். ''இது இப்ப ஆண்டுமாறிப் போயிடுச்சுங்க; கைமாறிப் போயிடுச்சுங்க, அப்பா! நம்மளுக்கு இது மட்டும் சொந்தமாக இருந்த நம்மோட வீடு வாசல், காடுகரை, நிலம் நீச்சு எல்லாம் இனி லேவாதேவி நல்லதம்பிச் செட்டியாருக்குச் சொந்தம்! அந்தப் புண்ணியவானை மட்டும் ஆத்தா எனக்கு இனம் காட்டாமல் இருந்திருந்தால், காலம்பறவே நம்ப குடும்பத்தோட மானமும் நம்ப ரெண்டு பேரோட உயிரும் பறிபோயிருக்குங்களே, அப்பா! தெய்வம்னு ஒண்ணு கட்டுச்சோறு கட்டிக்கிட்டுத் தனியே வந்து நமக்கு முன்னே குதிக்குமா, என்ன? நல்லதம்பி அண்ணுவுக்கு நான் ரொம்ப ரொம்பக் கடமைப்பட்டவனுக்கும்!''

நாட்டாண்மைத் தலைவர் இருதயத்தைப் பற்றிக்கொண்டு குமுறிக் குமுறி அழுதார்.

''அப்பா, கண் கெடுறதுக்கு முந்தியே சூரியனைக் கும்பிடுறதுதான் விவேகம். அழாதீங்க. அழுகிறதுக்காக வாழ்க்கை இல்லே; சிரிக்கிறதுக்காகத்தான் வாழ்க்கை ! ஆண்டவன் நமக்குக் கொடுத்த உயிருக்கு நாம் ஒரு அர்த்தம் கொடுக்க வேணும். இந்த நியதியையும் நீதியையும் மறந்துப்புட்டு என்னையும் மறந்துபுட்டு நீங்க விஷப் பொடியைத் தின்னு ரகசியமாகச் சாகத் திட்டம் போட்ட உங்களை ஆத்தா பாதிச்சாமத்திலே எனக்கு காட்டிக் கொடுத்துப்புட்டா! நல்லகாலம், விஷப் பொடியை மாற்றி அதுக்குப் பதிலாக காய்ச்சல் பொடியை வச்சுப்புட்டு, நலியாமல் நழுவிட்டேன்! எதிர்வெயில் அடிக்காமலிருக்குங்களா? எதிர் நீச்சல் போடாமல் தப்பிக்க முடியுங்களா அப்பா?''

நிதானமாகப் பேசி நிறுத்தினான் பட்டதாரி இளைஞன்.

''மகனே!'' என்று வீரிட்டார் ஆறுகரைத் தேவர்.

''அப்பா, என்னோட சொந்தச் சேமிப்புப் பணத்தைக் கொண்டு, மகமாயி திடலுக்குக் கிழக்காலே காணிநிலம் கிரயம் பண்ணி, அங்கிட்டு ராத்திரியோடு ராத்திரியாய் ஒரு குடிசையும் போட்டிருக்கேன். அந்தக் குடிசைதான் இனி நமக்கு வீடுவாசல், மாளிகை எல்லாம்! மனம் கொண்டது மாளிகை ஆச்சுங்களே? மனம் வச்சுப் பாடுபட்டால், குடிசையையே மாளிகையாகவும் ஆக்கிப்புட முடியாதுங்களா, அப்பா?''

''நூத்திலே ஒரு சேதி, தம்பி!''

கொட்டு மேளம் கொட்டியது ஆவணி.

'ஆயிமகமாயி' வெறும் கல் அல்லள்! அவள் சிரிக்கிறாள்; சிரித்துக் கொண்டே இருக்கிறாள்! ஊராண்டு, உலகாளும் அன்னையின் அறச் சிரிப்பு அல்லவா அது!

''அம்மான் மகளே!''

''அயித்தை மகனே!''

''எல்லாம் நீங்க தந்த பாக்கியம்! ஆத்தா இட்ட மடிப் பிச்சை!'' என்று மெய்ம் மறந்து பேசினாள் அன்னக் கொடி.

''ஓ!'' என்று கண்களைச் சிமிட்டினான் வீரமணி.

''ஊம்!'' அமுதூறும் இதழ்கள் துடித்தன; கனவூறும் கயல்விழிகள் பொடித்தன.

காஞ்சிபுரம் கூறைப்பட்டும் மாணம்புச் சாவடிச் சரிகை வேட்டியும் சல்லாபம் செய்தன.

மணமாலைக்கு அர்த்தமாக அமைந்து தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்த மஞ்சள் தாலியை எடுத்துக் கண்களிலே ஒற்றிக்கொண்டாள் அன்னம்.

புனிதத்தின் தரிசனத்தைப் புனிதத்தோடு ஊடுருவினான் வீரமணி. தலைநிமிர்ந்தான்; கம்பீரத்தின் நேர்மையும் சத்தியத்தின் நாணயமும் கண்ணீராகப் பளிச்சிட்டன!

''அன்னம், நீ வச்ச ஆணைப் படியே, சீதைக்கு ஏற்ற ராம ராக நானும், ராமருக்கு ஏற்ற சீதையாக நீயும் ஆத்தா மகமாயியைச் சாட்சிவச்சு, இந்தச் சமுதாயத்துக்கு மெய்ப் பிச்சுக் காட்டிப்புட்டோம்! 'மனசுக்கு மனசுதான் சாட்சி; மற்றதுக்குத் தெய்வமேசாட்சி' அப்படின்னு சொல்லுவாங்க. அந்த வேதவாக்கை நம்பியும் மதிச்சும் நீயும் நானும் ஆத்தா சந்நிதானத்திலேயே புருசனும் பெண்சாதியுமாக ஆகிப்புட்டோம். ஆத்தா தயவிலே நம்ப லட்சியமும் கனவும் பலிச்சிடுச்சி. நாம் கொடுத்து வச்சவங்க. அதனாலே நாம ரெண்டுபேரும் ஒருத்தருக்கு ஒருத்தராக நம்மை நாமே கொடுத்துக்கிட்டோம்!''

''மெய்தானுங்க மச்சான்! அஞ்சு வயசிலே அறியாப் பருவத்திலே நீங்களும் நானும் மணல்வீடு கட்டி, புருசன் பொண்டாட்டி விளையாட்டு விளையாடினோம். இப்ப அன்பு வீடு கட்டிக் கணவனும் மனைவியுமாக ஆகியிருக்கோம்! நான் உங்களாலம் தாலிபாக்கியம் பெறவேணும் என்கிறது ஆத்தா முடிவு; அதனாலேதான். என்னையும் செத்துப் பிழைக்க வச்சுப்புட்டா, நான் செத்துப் போயிடுவேனோன்னு பயந்து, நீங்களும் செத்துப் போயிடத் துடிச்சிருக்கீங்க. உங்களையும் காப்பாற்றிப்புட்டா ஆத்தா!''

அன்னம்! உழைத்து வாழ்பவனே வணங்கத்தக்கவன் என்று பேரறிஞரும், உழைப்பே தமிழனின் சரித்திரம் என்று கலைஞரும் சொல்லியிருக்காங்க அல்லவா? அந்த அமுத மொழிகளைக் கும்பிட்டு, நாமும் நம் மோட உழைப்பை வணங்கி வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கோம்! நம்மோட காணிநிலத்திலே இனி நாம் நெற்றி வேர்வை நிலத்திலே விழ உழைச்சுப் பிழைப்போம். அப்பாலே, மண்ணிலே பொன் விளையக் கேட்கவா வேணும்? நாட்டிலே பசுமைப்புரட்சி பூத்துக்குலுங்காதா, அம்மான் மகளே!''

''மெய்தானுங்க, அத்தான்!

பொன்மணித் தீபம் புன்னகை செய்கிறது.

இளங்கதிர்கள் கண்ணுமூச்சி ஆடுகின்றன.

அப்போது:

''மகனே, வீரமணி!'' என்று ஓடி வந்தார் ஊர் நாட்டாண்மைக்காரர் ஆதிமூலத்தேவர். கட்டுக் குடுமியில் புதிய ஒளி பளிச்சிட்டது.

''மகளே, அன்னம்!'' என்று நாடிவந்தார் சிங்கப்பூர்ச் சீமான் ராமையாத் தேவர். அவர் முகத்தில் புதிய சிரிப்பு நிழலாடியது.

மறுகணம்:

அழகான கூண்டு வண்டி பாய்ந்து வந்தது.

''மச்சான்!'' என்று அலறிப் புடைத்த வண்ணம் தட்டுத் தடுமாறியவாறு ஓடிவந்தாள் சிலட்டூர்க் கங்காணியாரின் செல்வத் திருமகள் பவளக் கொடி. புதுமணப்பெண்ணைக் காட்சியளித்தாள் அவள். வீரமணியின் காலடியிலே நெடுஞ் சாண்கிடையாகச் சரண் அடைந்தாள் அவள். மல்லிகைப் பூக்கள் சிதறின.

மணமகன் வீரமணி திகைத்தான்!

மணமகள் அன்னக்கொடி திடுக்கிட்டாள்!

கூட்டம் நெரியத் தலைப் பட்டது!

பவளக்கொடி விம்மினாள். ''மச்சான்! ஒருவாட்டி நான் இங்கிட்டு விருந்தாடி வந்த காலத்திலே, உங்களோட மணல்வீடு கட்டி விளையாடக் கொடுத்து வச்ச அந்த நாள் தொட்டு நீங்க என் மனசைத் தொட்டு விளையாடினீங்க... அது முதல் நீங்களேதான் என்னோட ஆசை மச்சான் அப்படின்னு நான் எனக்குள்ளே முடிவு பண்ணிக்கிட்டேனுங்க! ஆனா, விதி என்னோடு மெய்யாய் விளையாடிச்சு; நானோ விதியோடு பொய்யாய் விளையாடினேன்! பொய்ப்பித்தலாட்டம் செஞ்சு, உதயசூரியனோட பரிசுத்தமான ஒளியை வெறும் கையைக் காட்டி மறைச்சுப்புடலாம்னு தப்புக் கணக்குப் போட்டேன்! என்னை இந்தத் தமிழ்ச் சமுதாயம் சமிக்கவே சமிக்காது! நான் பாவி! ஆனாலும், இந்தப் பாவிக்கும் ஒரு பாக்கியம் கிடைச்சிருக்குதுங்க. உங்களோட தூய நினைவின் பேராலே, உங்களை நினைச்சு எனக்கு நானே கட்டிக்கிட்ட புண்ணியத்தாலிங்க இது! உங்கபேரிலே உங்க அன்னத்துக்கு உள்ள உரிமையும் உறவும் எனக்கு எப்பவும் உண்டுங்க-ஆமாங்க, மச்சான்!

பவளக்கொடியின் பவள இதழ்கள் மூடிக்கொண்டன. நுங்கும் நுரையுமாக வழிந்து கொண்டிருந்தது ரத்தம். 'அந்தத் தாலி' இரத்தத் திலகம் இட்டுக் கொண்டதோ?

''பாவம், பவளக்கொடி!''-வீரமணி இப்போது வாய் விட்டுச் செருமினான்.

அன்னக்கொடி விம்மினாள்.

அதோ, ஆத்தா மகமாயி இன்னமும் சிரித்துக்கொண்டு தான் இருக்கிறாள்.

முற்றும்

# மீன்களுக்கு ஒரு மருத்துவமனை

மனிதர்களுக்கு நோய் வந்தால் அதனைக் குணப்படுத்துவதற்கு ஊரெங்கும் மருத்துவமனைகள் உள்ளன.

கால்நடைகளுக்குப் பிணி ஏற்பட்டால் அவற்றின் பிணி நீக்குவதற்குக் கால்நடை மருத்துவமனைகள் இருக்கின்றன.

இவற்றைப்போலவே, நீரில் நீந்தித் திரியும் மீன்களுக்கு ஏற்படும் பிணிகளை நீக்குவதற்கும் ஒரு மருத்துவமனை உள்ளது! எங்கே உள்ளது என்று மிக அவசரமாகக் கேட்கிறீர்கள் அல்லவா? உங்களது ஆர்வத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால்-ஜப்பானில் உள்ள 'தோபா' நகருக்குச் செல்ல வேண்டும். ஆம்! மீன்களுக்கான மருத்துவமனை அங்கேதான் உள்ளது!

1965-ஆம் ஆண்டிலே துவக்கப்பட்ட இந்த மீன் மருத்துவமனை நாள்தோறும் சுறுசுறுப்பாக இயங்கி வருகிறது.

மீன்களுக்கு ஏற்படும் நோய்களைக் குணமாக்குவதுடன், மீன் வளர்ப்போருக்குத் தேவைப்படும் கருத்துரைகளையும் இந்த மருத்துவமனை வழங்கி வருகிறது.

மீன்களுக்குத் தரும் சிகிச்சையும் மீன் வளர்ப்போருக்கு வழங்கும் கருத்துரையும் இலவசம் என்பது இந்த மருத்துவமனையின் தனிச் சிறப்பு. இதனால் இந்த மருத்துவ மனையின் புகழ் பரவிவருகிறது. உள்நாட்டிலிருந்து மட்டுமல்ல, அமெரிக்கா, ஜெர்மனிபோன்ற வெளிநாடுகளிலிருந்தும் கூட மீன் வளர்ப்பு குறித்து ஆலோசனை கேட்போர் நாளுக்கு நாள் அதிகமாகி வருகின்றனர். உள்நாட்டில் மட்டும் ஆண்டொன்றுக்கு, 200-லிருந்து 300 பேர் வரை ஆலோசனை கேட்கிறார்கள். அவர்களின் கேள்விகளுக்கு உடனடியாக அஞ்சல் வாயிலாக மறுமொழியை அளித்து வருகிறது இந்த மருத்துவமனை.

இந்த மருத்துவ மனையில் பணிபுரியும் மருத்துவர்கள் நீரில் மூழ்கி எழும் கலையில் வல்லவர்கள்; அதற்குரிய அனுமதி பெற்றவர்கள். மீன்களைப் பார்த்த மாத்திரத்திலேயே அவற்றிற்கு ஏற்பட்டுள்ள நோய் என்னவென்று சொல்லும் திறம் படைத்தவர்கள்.

இந்த மருத்துவமனையில் சிகிச்சை அறை உள்ளது. அந்த அறையினுள்ளே 20 நீர்த்தொட்டிகள் உள்ளன. டெலிவிஷன் பெட்டி போல் காட்சிதரும் அந்த நீர்த் தொட்டிகள் மூன்று அடுக்குகளாக வைக்கப்பட்டுள்ளன. தொட்டிகள், நோயுற்ற மீன்களுக்குப் படுக்கைகளாகப் பயன்படுகின்றன. மருத்துவர்கள் இந்த உள்ளிருப்பு நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக, நாள்தோறும் நீர்த் தொட்டிகளை நாடி வருகின்றனர்.


கண்விழி பிதுங்கியவை, செதில்களில் வெண்புள்ளி விழுந்தவை, செதில்கள் உதிர்ந்தவை ஆகிய வகை மீன்களே இங்கு அதிக அளவில் சிகிச்சைக்குக் கொண்டு வரப்படுகின்றன. சில சமயங்களில், உடலின் உள்ளுறுப்பு வீக்கத்தின் காரணமாக, மீன்கள் ஒருபக்கமாக — சாய்ந்த நிலையில் செல்கின்றன. அவை இங்கே கொண்டு வரப்படுகின்றன. அவற்றின் முதுகுத் துடுப்புகளில் ஒருவகை மிதவையை இணைத்தும் அவற்றின் வயிற்றில் பளுவை இணைத்தும் அவற்றின் அசைவுகளைச் சமப்படுத்துகின்றார்கள், மருத்துவ ஆய்வாளர்கள்.


அறுவைச் சிகிச்சை, ஊசி போடுதல், உள்ளுறுப்புகளுக்கு மருந்து கொடுத்தல் ஆகிய வகைச் சிகிச்சைகள் இந்த மருத்துவமனையில் நடைபெறுகின்றன.

'வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரிகுவது' மனித இனத்துக்கு மட்டும் சொந்தமல்ல; மீன் இனத்துக்கும் உரிமையுடையதுதான், என்பதைச் சில மீன்கள் மெய்ப்பித்து வருகின்றன. அவை தமக்குள் சண்டையிட்டுக் கொண்டு, ஒன்றுக்கொன்று தீங்கு விளைவித்துக் கொள்வதும் உண்டு. அதன் காரணமாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. அந்த மீன்களுக்குப் பாதரச சிகிச்சை (Mercury — Chrome Treatment) செய்யப்படுகிறது.

உள்நோயுள்ள மீன்களின் கூட்டத்திலிருந்து, நல்ல நிலையில் உள்ள மீன்களை உய்த்து உணர்வது என்பது மெய்யாகவே மிகவும் கடினமான பணி

'விழிபிதுங்கல்' நோயுற்ற மீனுக்குச் சிகிச்சை நடைபெறுகிறது





காயமுற்ற மீனுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

தான். என்றாலும், மீன்களின் நீச்சல் திறம், கண்களின் நிறம், பசி உணர்வு ஆகியவற்றைக் கொண்டு, மீன்கள் நலமான நிலையில் உள்ளனவா, இல்லையா என்பதை முடிவு செய்யமுடியும்.

குடற்புழுக்கள் சில மீன்களுக்குத் தொல்லை தரலாம். ஒட்டுண்ணிகளின் மூலம் குடற்புழுக்கொல்லி மருந்தை மீன்களுக்குச் செலுத்துகிறார்கள், பசியற்ற மீன்களுக்கு செரிமானத்திற்குரிய மருந்தைச் செலுத்துகிறார்கள்; உயிர்ச்சத்துக்கள் குறைந்திருக்கும் மீன்களுக்கு உயிர்ச்சத்துக்களை உட்செலுத்துகிறார்கள்.

அவ்வப்போது மிகவும் ஆபத்தான நிலையில் வருகின்ற மீன்களுக்குப் பெரிய அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. விழி பிதுங்கல் நோயால் தாக்குண்ட மீன்களுக்குச் சிகிச்சை செய்ய-அவற்றின் உடலின் உட்புறத்திலுள்ள காற்றை ஓர் ஊசிக் குழாய் (சிரிஞ்சி) மூலம் வெளியேற்றுகின்றனர் மருத்துவர்கள்.

மீன் மருத்துவமனை துவக்கப்பட்ட காலத்தில் 'நோயாளிகள்' வெப்ப மண்டலத்திலிருந்து வந்து கொண்டிருந்தார்கள்! ஆனால் இந்நாளில்..! பலநாடுகளிலிருந்தும் படையெடுத்து வருகிறார்கள். மீன் கூட்டுறவு நிலையங்கள், உணவு விடுதிகள், சிற்றுண்டி நிலையங்கள் முதலிய இடங்களில் இருந்தெல்லாம் மருத்துவர்களுக்கு அவசர அழைப்புகள் வருகின்றன. தாங்கள் அன்போடு வளர்த்துவரும் மீன்களை-அல்லது-உணவாக்க இருக்கின்ற மீன்களைச் சோதிக்குமாறு மருத்துவர்களுக்கு அழைப்பு விடுக்கிறார்கள்.

பலவகை மீன்கள் இருந்தாலும், அடிக்கடி மருத்துவர்களிடம் எந்த வகை மீன்களுக்கு ஆலோசனை கேட்கப்படுகிறது தெரியுமா? தங்க மீன் (Gold Fish) வெப்ப மண்டல மீன் (Tropical Fish) குளத்து மீன் (Carp Fish) ஆகிய வகைகளே! அவற்றிற்கு ஏற்படுகின்ற நோயின் காரணத்தை ஆய்ந்து சொல்கிறார்கள் மருத்துவர்கள்; நோய்க்குக் காரணம் என்ன தெரியுமா? ''மிகு தீனி தான்'' (Over Eating)! இதனை நகைச்சுவையாகச் சொல்ல வேண்டுமென்றால் இப்படிக் கூறலாம். மீன் வளர்ப்போரின் அளவுக்கு மீறிய அக்கறைதான் ஆபத்தைத் தேடித் தருகிறது!

மீன் மருத்துவமனை 'தோபா' நகரின் மீன் பொருட்காட்சி நிலையத்தின் பத்தாவது ஆண்டு விழா நினைவாக உருவாக்கப் பெற்றது. இந்தக் காட்சிசாலையில் 300 வகையைச் சேர்ந்த 3,000 மீன்கள் உள்ளன. முதுகுத் துடுப்பற்ற ஒருவகை கருநிற மீன்கள் இங்கே உள்ளன. இவ்வகை மீனைச் செயற்கைச் சூழ்நிலையில் வளர்ப்பது மிகமிகக் கடினமான பிரச்சினை. உலகத்தின் எந்தப் பகுதியில் உள்ள காட்சிச் சாலையிலும் சரி ஆறு திங்களுக்கு மேல் இவ்வகை மீன் உயிர்வாழ்வதில்லை. ஆனால் ஜப்பானில் உள்ள மீன் பொருட்காட்சிக் கூடம் ஒரு புதிய சாதனையை உருவாக்கியுள்ளது. ஏறக்குறைய நான்காண்டுகளுக்கும் மேலாக இவ்வகைக் கறுப்பு மீனை உயிர் வாழச் செய்து வருகிறது. இந்தச் சாதனைக்குக் காரணம் என்ன தெரியுமா? மீன் மருத்துவ மனையினரும், அதன் மருத்துவ ஊழியர்களும் எடுத்துக் கொள்கின்ற சிறப்பான அக்கறை-அருமையான கவனிப்பு-திறமையான முயற்சி ஆகியவைதான்!

ஜப்பானில் மட்டும் காணப்படும் இந்த மருத்துவமனை மற்ற நாடுகளிலும் தோன்றினால் மீன் இனம் நீடு வாழும்!

த. பி.



...ாபா நகரிலுள்ள மீன் மருத்துவமனை




**எஸ். எஸ். சண்முக சுந்தரம்,**
உறுப்பினர், காப்பி வாரியம்.

இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் தேவையான அந்நியச் செலவாணியை ஈட்டித் தருவதில் காப்பி முக்கியமான இடம் பெற்றுள்ளது. காப்பி ஏற்றுமதியின் மூலம், 1972-73-ஆம் ஆண்டில் 32.92 கோடி ரூபாய் மதிப்புள்ள அந்நியச் செலாவணி, நம் நாட்டிற்குக் கிடைத்துள்ளது!

அந்நியச் செலவாணியை ஈட்டித் தரும் காப்பி இந்தியாவிற்குள் புகுந்தவிதம் விந்தையானதாகும்!

ஏறத்தாழ கி.பி. 1600-ஆம் ஆண்டு பாபாபுதன் சாகிப் என்ற மகம்மதிய மதத் தலைவர், சந்திரகிரி மலையில் இருந்து தன் சீடர்களிடம், தான் புனித மெக்கா நகருக்கு யாத்திரை போக முடிவு செய்திருப்பதாக சொல்லி ஒரு குகையில் மறைந்தார். வெகு காலமாக அவரது சீடர்கள் அவரது வருகைக்காக குகையின் வாயிலில் காத்திருந்தார்கள். அவர் திரும்பி வந்து, புனித தலத்தில் இருந்து அவர்களுக்கு அன்பளிப்பாக உணவாகவும், பானமாகவும் உபயோகப்படுத்தக் கூடியதான அற்புதமான ஏழு விதைகளை கொண்டு வந்திருக்கின்ற நற்செய்தியைத் தெரிவித்தார். இந்த விதைகளைச் சந்திரகிரி மலையில் பயிர் செய்தனர். அன்று முதல் சந்திரகிரி மலையானது ‘பாபாபுதன் மலை’ என பெயர் பெற்றது. இதுவே இந்தியாவில் காப்பி தோன்றிய விதமாகும்!

இப் பயிர்கள் வளர்ந்து, அதில் சிவப்பு நிறப் பழங்கள் தோன்றின! பழங்களின் உள்ளிருந்த விதைகளில் இருந்து முதன் முதலாக தயாரிக்கப்பட்ட பானம்தான் காப்பி !

பாபாபுதன் மலையில் இருந்து இந்த காப்பி பயிர்கள் கடல் கடத்தப்பட்டு, டச்சு கிழக்கிந்தியா, பிரேசில் நாடுகளில் பெருமளவில் பயிரிடப்பட்டன. 1696-இல் மலபாரில் உள்ள கன்னனூரில் இருந்து, டச்சு கிழக்கிந்தியாவுக்கு முதன் முதலாக காப்பி பயிர்கள் எடுத்துச் செல்லப்பட்டன. அப்பயிர்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன. மூன்று ஆண்டுகள் கழித்து இரண்டாவது முறையாகக் காப்பி பயிர்கள் எடுத்து செல்லப்பட்டன. இதுதான் டச்சு கிழக்கிந்தியாவில் அராபிக்கா காப்பி சாகுபடிக்கு முன்னேடியாக அமைந்தது. 1760-ஆம் ஆண்டு போர்ச்சுக்கீசியர் ஆட்சியின் கீழ் இருந்த கோவாவில் இருந்து பிரேஸில் நாட்டின் ‘ரியோடிஜெனிரோவுக்கு’ (Riode Janeiro) காப்பி பயிர் எடுத்துச் செல்லப்பட்டது.

இந்தியாவில் 17, 18-ஆம் நூற்றுண்டுகளில் காப்பியின் பெருமையை மக்கள் அறியாதிருந்தனர். 1799-ஆம் ஆண்டு கிழக்கிந்திய கம்பெனியார் காப்பியை வியாபார நோக்கத்துடன் பயிர் செய்ய முனைந்தனர். அதே ஆண்டு தலைச்சேரியில் பரிசோதனையாக காப்பி பயிர் சாகுபடி தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தென்னிந்தியா மலைச்சரிவுகளில், காப்பி சாகுபடி வேகமாகப் பரவ ஆரம்பித்தது.

மலைப்பகுதிகளில் இருந்த, ஆயிரக்கணக்கான ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டுக் காப்பி பயிரிடப்பட்டது. இது மிக கடினமானதொரு வேலையாக இருந்தது. அப்பொழுது போக்குவரத்து சாலைகளோ, நவீன இயந்திரங்களோ இல்லாது கால்நடைகள் மூலம் சுமைகளை ஏற்றி மலைப்பகுதிகளுக்குள் சென்று - சொல்ல முடியாத இன்னல்களுக்கிடையே-இக் காப்பிப் பயிரைப் பயிர் செய்வதில் ஈடுபட்டு, காடுகளாக இருந்த இடங்களை எழில்மிக்க காப்பித் தோட்டங்களாக மாற்றினர். அவர்களது விடாமுயற்சியாலும், திடமான

உழைப்பின் பயனாலும் 1872-ஆம் ஆண்டு ஏறத்தாழ 2,500 டன் காப்பியை வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்தனர்.

மிகச் செழிப்பாகவும், செல்வாக்காகவும் செய்யப்பட்டு வந்த காப்பிச் சாகுபடிமுறை, குறுகிய காலத்திலேயே மிகக் கடுமையான சூழ்நிலைக்கு உள்ளாகி, பெரியதொரு பாதகமான திருப்பத்தை எதிர்நோக்க வேண்டியதாயிற்று. இலை நோயாலும், குருத்துப் பூச்சியாலும் (ஸ்டெம்போர்) செடிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இதனால் உற்பத்தி குறைந்து, பராமரிப்பு செலவும் அதிகரித்தது. உலக காப்பிச் சந்தையில் ஏற்பட்ட நெருக்கடியான போட்டியைச் சமாளிப்பது உழவர்களுக்கு முடியாததாயிற்று. முடிவில் இரண்டாவது உலக மகா யுத்தத்தால், வெளி நாட்டு வியாபார தொடர்பு துண்டிக்கப்பட்டது. இதன் விளைவாக 1940-41-ஆம் ஆண்டில் ஏறத்தாழ 3,00,000 ஏக்கராவில் இருந்து 1,81,000 ஏக்கராவாக காப்பிப் பயிர் பரப்பளவு குறைந்து, கவலைக்கிடமாகியது. இதனால் இந்தியாவில் காப்பி விவசாயமே அழிந்து விடுமோ என்று அச்சப்பட வேண்டியதாயிற்று!

இந்திய அரசு, இப்பிரச்சினைக்குத் தீர்வு காண 1940-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு மாநாடு கூட்டி ஒருமனதாக "Coffee Market Expansion Ordinance XIII of 1940)" என்ற சட்டம் இயற்ற பரிந்துரைத்ததுடன் இந்தியாவிலும் வெளிநாட்டிலும் காப்பி வியாபாரத்தைக் கட்டுப்படுத்த "Indian Coffee Expansion Board" -ஐ, 1940 - ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ஆம் தேதி தோற்றுவித்தது. இதுதான் தற்போது காப்பி சட்டத்தின் கீழ் இயங்கி வரும் காப்பி வாரியம் (Coffee Board) ஆகும்.

இந்த ஏற்பாட்டினால் காப்பி விவசாயத்தில் ஏற்பட்ட இன்னல்கள் நீங்கி, புதிய சகாப்தம் தொடங்க ஆரம்பித்தது. யுத்தத்திற்கும், நாட்டு விடுதலைக்கும் பின்னால் இத் தொழில் கணிசமான முன்னேற்றத்தை அடைய ஆரம்பித்தது. 1,81,000 ஏக்கராக இருந்து வந்த காப்பிப்பயிர் பரப்பளவு, 1959-60-ஆம் ஆண்டில் 2,94,929 ஏக்கராவாக விரிவாக்கப்பட்டு சுமார் 49,740 டன் உற்பத்தியை எட்டியது. (31-7-1961 தேதிய புள்ளி விவரப்படி- 46,597 பல்வேறு அளவான தோட்டங்களில் இருந்து). நல்ல உயர்ந்த ரகக் காப்பி விளைவதற்கு தகுதியாக இந்தியாவில் இருக்கின்ற பல மலைச் சரிவுகளைப் போல் உலகத்தில் சில மலைகளே தகுதி வாய்ந்ததாக இருக்கின்றன. உயர்ந்த தரமானதும், அதிக அளவு உற்பத்தியாவதற்குத் தகுதியான மலைச் சரிவுகளும், வெப்ப தட்ப நிலையும், போதுமான மழையளவும், சக்தி மிகுந்த மண் வளமும் நம் நாட்டில் நிரம்பி இருக்கின்றன.

நம் நாட்டு காப்பி உற்பத்தியில் 70 சதம் கருநாடக மாநிலத்திலும், 15 சதம் தமிழ் நாட்டிலும், 15 சதம் கேரள மாநிலத்திலும் கிடைக்கிறது. கருநாடக மாநிலத்தில் பாபா புதன் மலைகளிலும், குடகிலும் தமிழ்நாட்டில் நீலகிரி, சேர்வராயன் மலை, ஆனைமலை, பழனி மலை, சிறுமலை, போடி மலையிலும், கேரள மாநிலத்தில் நெல்லியம்பதி, கண்ணன் தேவன், வயநாடு மலைகளிலும் ஆந்திரமாநிலத்தில் சில பகுதிகளிலும் காப்பி நல்ல முறையில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

மேலும், நல்ல காப்பி உற்பத்தி செய்வதற்குத் தகுந்த நிலங்கள் அசாம், ஒரிசா, மத்தியபிரதேசம், மகாராட்டிரம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலும், அந்தமான் தீவுகளிலும் இருக்கிறபடியால் அங்கும் காப்பி உற்பத்தி செய்ய ஆரம்பித்துள்ளார்கள்.

**காப்பி வகைகள் :**

உலகத்தில் உள்ள 'அராபிக்கா', 'ரோபஸ்டா', 'லிபரிக்கா' என்ற மூன்று வகைக் காப்பியும் தென்னிந்தியாவில் பயிரிடப்பட்டு வருகின்றன. 'அராபிக்கா காப்பி' அபிசீனியாவில் இருந்தது. அராபியாவில் உள்ள ஏமனில் இருந்து, இந்த ரகம் கொண்டு வரப்பட்டதால், இக்காப்பிக்கு 'அராபிக்கா' என்று பெயரிடப்பட்டது. இந்த ரகம் நம் நாட்டில் 84,362 எக்டேர் பரப்பில் பயிரிடப்படுகிறது. 'ரோபஸ்டா' காப்பி 1910-ஆம் ஆண்டு ஜாவாவிலிருந்து கொண்டு வரப்பட்டது. இந்த ரகம் 55,116 எக்டேர் பரப்பில் பயிரிடப்படுகிறது. ஆக மொத்தம் இவ்விரு ரகமும் 1,39,478 எக்டேர் பரப்பில் பயிரிடப்படுகிறது.

காப்பி வாரியம் அமைக்கப்பட்டதில் இருந்து பொதுவாக 'அராபிக்கா', 'ரோபஸ்டா' பயிர் நிலங்கள் விரிவாக்கப்பட்டும், குறிப்பாக 'ரோபஸ்டா' பயிர் நிலம் மிக அதிகமாக விரிவாக்கப்பட்டிருக்கிறது. உற்பத்தியும் பெருகி இருக்கிறது. இந்தியாவின் சராசரி உற்பத்தி 90,000 டன் ஆகவும், அதிக உற்பத்தியாக 1,10,231 டன்னும், 1970-71-ஆம் ஆண்டு கிடைத்திருக்கிறது ('அராபிக்கா' 58,348 டன், 'ரோபஸ்டா' 51,883 டன்).



'அராபிக்கா' காப்பியின் பல ரகங்கள் பற்பல காலங்களில் பயிரிடப்பட்டன. 'சிக்' (Chick) என்ற ரகம் தான் முதன் முதலில் தோன்றிச் செழிப்புடன் இருந்தது. ஆனால் அது குருத்துப்பூச்சியாலும் (ஸ்டெம்போரர்), இலை நோயாலும் பெரிதும் பாதிக்கப்பட்டது. பின் இலை நோய் பாதிக்காத 'கூர்க்' (Coorg) என்ற புது வகை கண்டு பிடிக்கப்பட்டு பெரிதும் விரும்பப்பட்டது. அதன்பின் வீரியத்திற்கும், தரத்திற்கும் பெயர் பெற்ற 'கெண்ட்' (Kent) ரகம் பரவியது. கடைசியாக பாளே கண்ணூரில் உள்ள காப்பி ஆராய்ச்சிப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள உறுதியும், நோய் தாக்காததுமான புதிய காப்பி ரகங்கள் எஸ். 795-ம், நெ. 1934-ம் மிக பிரபலமடைந்து வருகின்றன. இந்த ரகப் பயிர்கள் அதிக பரப்பளவில் பயிரிடப்பட்டு வருகின்றன.



பலர் நினைப்பதுபோல் காப்பி விவசாயம் செய்வதும், உற்பத்தி செய்வதும் எளிதான காரியமல்ல! மிகச் சிக்கல் நிறைந்த வழிமுறைகளை உடையது. முதலாவதாக, ஒரே சீரான இடைவெளி விட்டு ஒழுங்கான வரிசைக் கிரமமாக செடிகள் நட குழிகள் எடுக்க வேண்டும். உறுதியானதும், எவ்வித நோய் தாக்காததுமான காப்பி விதைகளை உற்பத்தி செய்யக் கூடிய நல்ல காப்பிச் செடிகளைத் தேர்ந்தெடுத்து, அதில் உற்பத்தியாகும் விதைகளில் இருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட விதைகளையே நடுவதற்கு உபயோகப்படுத்த வேண்டும். சாதாரணமாக டிசம்பர், ஜனவரி மாதங்களில் நாற்றங்கால்களுக்காக தயாரிக்கப்பட்ட படுகைகளில் விதைகளை நட வேண்டும். நாற்றுக்கள் முளைத்து இரண்டு வாரத்திற்கு பின், சிறிய மூங்கிற் கூடைகளிலோ அல்லது 'பாலிதீன்' பைகளிலோ நல்ல சக்தி உள்ள மண்ணை நிரப்பி அதில் நட வேண்டும். இந்த நாற்றுக்களை மரநிழலில் சுமார் 8 மாத காலத்திற்கு வைத்திருக்க வேண்டும். அதன்பின், இந் நாற்றுக்களை வரிசையாக நிழல் தரும் மரங்களின் மத்தியில் ஒழுங்கான வரிசைப்படி எடுக்கப்பட்டிருக்கும் குழிகளில் வைத்து நட வேண்டும். இச் செடிகளுக்கு முறைப்படி தேவையான அளவு உரம் கொடுத்து, நோய்களினால் பாதிக்காதபடி மருந்துகள் தெளித்து, களை வளராதபடி அடிக்கடி களை எடுத்தும் செடிகளைப் பாதுகாத்து வளர்க்க வேண்டும்.

மூன்றாவது ஆண்டில் செடிகள் பலன்தர ஆரம்பித்த போதிலும், ஐந்தாவது ஆண்டில்தான் முழு அளவில் பலன் தரும். பலன் தர ஆரம்பித்ததில் இருந்து செடி தேவைக்கு அதிகமாக வளர்ந்து நிலத்தில் உள்ள சக்தியை அதிகமாக எடுத்து விடாதபடி செடிகளை கவாத்து செய்ய வேண்டும். சாதாரணமாக காப்பிச் செடிகளின் வயது 50 ஆண்டு எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தியாவில் காப்பி ஆண்டிற்கு ஒருமுறைதான் காய்க்கிறது. மார்ச்சு, ஏப்ரல், மாதங்களில் பெய்யும் மழைக்குப் பின், பூ பூக்கின்றது. பூ பூத்ததில் இருந்து காப்பி, 8 அல்லது 9 மாதங்களில் பழுத்துப் பறிப்பதற்குப் பக்குவமாகி விடுகின்றது. ஆனால் தமிழ் நாட்டில் பழனி மலையில் மாத்திரம் 6 மாதங்களிலேயே காப்பிப் பழம் பறிப்பதற்குப் பக்குவமாகி விடுகின்றது. சாதாரணமாகப் பழம் பறிப்பு மூன்று எடுப்புகளில் முடிந்து விடுகின்றன.

பறித்த காப்பிப் பழங்களை இயந்திரத்தின் மூலம் பழத்தின் மேல் தோலை நீக்கி, கிடைக்கும் விதைகளை சுமார் 36 மணி நேரம் புழுங்க வைத்திருந்து, தண்ணீர்விட்டு கழுவினால் விதைகளின் மேலே உள்ள பசைப் பொருள் நீங்கி விடும். பின், ஈர விதைகளை வெய்யிலில் உலர வைக்க வேண்டும். இவ்வாறு உலர்ந்த காப்பி, 'தளிர்' (Plantation அல்லது Parchment) என்று சொல்லப்படுகிறது. பழங்களில் இருந்து விதைகளைப் பிரிக்க மற்றொரு சுலபமான முறை கையாளப்படுகிறது. பழங்களைப் பறித்தவுடனேயே வெய்யிலில் நன்றாக உலர்த்தினால் பழத்தின் தோலும், விதைக்கும் தோலுக்கும் மத்தியில் உள்ள பசைப்பொருளும் நன்றாகக் காய்ந்த பின் கைக்குத்தலாலோ அல்லது இயந்திரத்தின் உதவியாலோ பிரித்து எடுக்கப்படுகிறது. இந்த முறையில் எடுக்கப்பட்ட காப்பி 'நாட்டுக்காப்பி' அல்லது 'செரி' (Cherry) காப்பி என்று சொல்லப்படுகிறது.

காப்பி தளிரின் மீதுள்ள மெல்லிய ஓடையும், விதையின் மேல் ஒட்டிக் கொண்டிருக்கும் பட்டுபோன்ற மிருதுவானதும், இலேசானதுமான தோலையும் இயந்திரத்தின் மூலம் நீக்கி, புடைத்து எடுத்துக் கிடைக்கின்ற விதைகளை உருவத்திற்கும், பருமனுக்கும் தக்கபடி பல வகைகளாகப் பிரிக்கிறார்கள். இம்முறைகளை செய்யும் நிலையங்களுக்கு 'Curing works' என்று பெயர். இந்த நிலையங்களில் பல தனிப்பட்டோரா

லும், சில கூட்டுறவு முறையா லும் நடத்தப்படுகின்றன. இம் முறையில் காப்பி கீழே கண்ட விவரப்படி பிரிக்கப்பட்டு விற் பனைக்குத் தயாராகின்றன.

### பிளான்டேஷன்

1. அராபிகா பார்ச்மெண்ட்
   (அண்டு கியூர்டு)

2. அராபிகா பார்ச்மெண்ட்
   (கியூர்டு அண்டு கிரேடட்)
   பி.பி. (பீபரி)
   ஏ. பி.
   டிரையேஜ்
   பிளாக்ஸ்
   பிட்ஸ்

3. அராபிகா பார்ச்மெண்ட்
   பீல்டுபல்க்
   (12 சத 'டிரையேஜ்',
   பேசின் 8 சத பீ.பி)

### அராபிகா செர்ரி

1. அராபிகா வெள்ளை கிராப்
   செர்ரி (அண்டு கியூர்டு)

2. அராபிகா வெள்ளை கிராப்
   செர்ரி (கியூர்டு அண்டு
   கிரேடட்)
   பி. பி. (பீபரி)
   ஏ .பி.
   பல்க் 5 சத 'டிரையேஜ்'
   'டிரையேஜ்'
   பிளாக்ஸ்/பிரௌன்ஸ்/
   பிட்ஸ்

### ரோபஸ்டா பார்ச்மெண்ட்

1. ரோபஸ்டா பார்ச்மெண்ட்
   (அண்டு கியூர்டு)


2. ரோபஸ்டா பார்ச்மெண்ட்
   (கியூர்டு அண்டு கிரேடட்)
   பி.பி. (பீபரி)
   ஏ.பி.
   பல்க் 5 சத 'டிரையேஜ்'
   பிளாக்ஸ்/பிரௌன்ஸ்/
   /பிட்ஸ்

### ரோபஸ்டா செர்ரி

1. ரோபஸ்டா செர்ரி
   (அண்டு கியூர்டு)

2. ரோபஸ்டா செர்ரி
   (கியூர்டு அண்டு
   கிரேடட்)
   பி. பி. (பீபரி)
   ஏ. பி.
   ,பல்க் 5 சத 'டிரையேஜ்'
   'டிரையேஜ்'
   பிளாக்ஸ்/பிரௌன்ஸ்/
   பிட்ஸ்

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் காப்பி மாதக் கணக்கில் கப்பல்களில் இருக்க வேண்டிய நிலை ஏற்படுவதால், குளிர்ச்சி தன்மையில் காப்பி விதைகள் தன் இயற்கை நிறத்தை இழந்து வெளிறின. இவ்விதம் வெளி நாடுகளில் இறக்குமதி செய்யப்பட்ட காப்பி அதனது இயற்கை மணத்தையும், குணத்தையும், ருசியையும் இழந்தது. இதைத் தவிர்ப்பதற்காக மங்களூரில் புதிய முறை கண்டு பிடித்த னர். அதாவது மே, ஜுன் மாதங்களில் தென்மேற்குப் பருவ மழை காலத்தில் 'செரி' காப்பியை நல்ல காற் றோட்டம் உள்ள கிடங்குகளில் 4 முதல் 6 அங்குல உயரத் திற்குப் பரப்பி, நான்கு அல்லது ஐந்து நாட்களுக்கு பரப்பி இருக்கின்ற காப்பியை அப் போதைக்கப்போது கிளறி விட்டு, சணல் பைகளில் இறுக் கம் இல்லாது நிரப்பி, நிரப்பப் பட்ட பைகளை நல்ல இடை வெளி விட்டு வரிசை வரிசை யாக ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி, பருவக்காற்று தாராள



மாக தொடர்ந்து அங்கு படும் விதத்தில் அடுக்கப்படுகின்றன. பின் வாரத்திற்கு ஒரு முறை எல்லா இருப்பையும் மொத்த மாகக் கொட்டி மறுமுறை சணல் பைகளில் நிரப்பியோ அல்லது ஒரு பையில் இருக்கும் சரக்கை மறு பைக்கு மாற்றி யோ வைக்கிறார்கள். இந்த முறையில் சுமார் 50 நாட் களில் காப்பிக் கொட்டைகள் பளபளக்கும் வெள்ளை நிறத்தை அடைந்து விடுகின்றன. இது, ஏற்றுமதிக்குச் சரக்கு தயாரா ராகி விட்டது என்பதைக் காட்டுகிறது. இந்த முறையில் காப்பி தன் மணத்தையும், குணத்தையும், ருசியையும் இழப்பதில்லை. இந்த முறைக்கு 'Monsooned Coffee' என்று பெயர்.

காப்பி ஏற்றுமதியின் மூலம் நம் நாடு, கோடிக்கணக்கான ரூபாய் அந்நியச் செலாவணி யை சம்பாதிக்கிறது. 1972-73-ஆம் ஆண்டில் 50,855 டன் ஏற்றுமதி செய்து 32, 92, 96, 908 ரூபாய் மதிப்புள்ள அந்நியச் செலா வணியை ஈட்டியுள்ளது.

விவசாயிகள் அவர்களுக்கு கிடைக்கும் காப்பி மகசூலில் தங்களது வீட்டு உபயோகத் திற்கும், விதைக்காகவும் ஓர ளவு நிறுத்தி வைத்துக் கொள் ளும் காப்பி போக மீதி காப்பி முழுவதையும் ஆங்காங்கே நிறுவப்பட்டிருக்கும் 'பூல்' டிப்போக்களிலோ அல்லது 'பூல்' ஏஜென்ட்களிடமோ கொடுத்து விட வேண்டும். 25 ஏக்கர் நிலப்பரப்பு வரை வைத்திருப்பவர்களையும், ஒரு டன் காப்பி மகசூல் வரை எடுக்கும் காப்பி விவசாயிகளை யும் சிறு விவசாயிகள் என்றும், மற்றவர்களை பெரிய விவசாயி கள் என்றும் பிரித்து இருக் கின்றனர். இதில் சிறு விவ சாயிகளுக்கு காப்பி மகசூலைப் 'பூல்' செய்தவுடனே அவர் களுக்கு அவ்வாண்டிற்கு உண் டான நிர்ணயிக்கப்பட்ட விலையை கொடுத்து விட்டு, அவ்வாண்டு காப்பி முழுவதும் ஏலத்தின் மூலம் விற்பனை செய்ததில் கிடைக்கின்ற விலை

யில் விற்பனை செலவுகள்போக மிதியை போனஸாக கொடுக்கப்படுகிறது.

பெரிய விவசாயிகள் அவர்களது காப்பி மகசூலைப் 'பூல்' செய்யும்பொழுது அவ்வாண்டிற்கு உண்டான நிர்ணயிக்கப்பட்ட முன் பணத்தை மாத்திரம் கொடுக்கிறார்கள். அவர்களால் 'பூல்' செய்த காப்பி முழுவதும் விற்பனையான பிறகு விற்ற தொகையில் விற்பனைச் செலவுகள் போக மிகுதியை அவரவர்கள் செலுத்திய காப்பியின் தரத்திற்கும், அளவிற்கும், தகுந்தபடி பணத்தைப் பிரித்துப் பல தவணைகளில் கொடுத்து விடுகிறார்கள். இதன் படி சிறு விவசாயிகளுக்கும், பெரிய விவசாயிகளுக்கும் ஆண்டுக் கடைசியில் கிடைக்கின்ற விலை விகிதம் சமமாகவே இருக்கும்.

ஆண்டுதோறும் காப்பி வாரியத்தினர் காப்பி விளைச்சல் அளவை மதிப்பிட்டு, உள்நாட்டுத் தேவைக்கு ஒதுக்கியது போக, மிகுதியை வெளிநாட்டு ஏற்றுமதிக்கு ஒதுக்குகிறார்கள்.

உள்நாட்டுத் தேவைக்கான பெருமளவு காப்பி 'Pool Sales) மூலம் சுமார் மாதம் ஒருமுறை பல பகுதிகளில் பகிரங்க ஏலம் மூலம் விற்கப்படுகிறது. ஏலத்தில் காப்பி வாரியத்தில் பதிவு செய்துள்ள வியாபாரிகளே கலந்து கொள்ள முடியும். உயர்ந்த விலை கோருபவர்களுக்கு விற்கப்படுகிறது. ஒதுக்கீடுகள் மூலம், பல பகுதிகளில் இதற்காக காப்பி வாரியத்தில் பதிவு செய்துள்ள சில்லறை வியாபாரிகள், காப்பித் தூள் உற்பத்தியாளர்கள் நல்னுக்காக விற்கப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கும், விளம்பர இலாக்காவுக்கும் குறைந்த பட்ச விலைக்கு காப்பி கொடுக்கப்பட்டு, அக்காப்பியை இவ்விரு நிறுவனங்களின் கிளை நிறுவனங்களின் மூலம் காப்பிக் கொட்டையாகவோ, காப்பித் தூளாகவோ விற்கப்படுகிறது. இது, காப்பி உபயோகிப்போருக்கு விலை ஏற்றத்தை தடுப்பதற்குப் பெரிதும் உதவியாக இருக்கிறது.

மிகக் கவனமாக பதனிடப்பட்டதும், நல்ல தரமானதுமான இந்திய காப்பிக்கு, வெளிநாடுகளில் நல்ல விலை கிடைப்பதால் பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்கள் மூலம் - காப்பி வாரியத்தாரால் விதிக்கப்பட்டிருக்கும் விதிமுறைகள் படி-உலகத்தின் எல்லா பகுதிகளுக்கும் காப்பி ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஜெர்மனி, நெதர்லாண்ட்ஸ் பெல்ஜியம், இத்தாலி, பிரான்ஸ், யுனைடெட் கிங்டம், யுனைடெட் ஸ்டேட்ஸ், ரஷ்யா, ஸ்விட்ஸர்லாந்து, குவைட், ஹங்கேரி, போலன்ட், ருமேனியா, ஆஸ்திரேலியா, நியூஸிலண்ட் போன்ற சுமார் 45 நாடுகளுக்கு இந்தியா தனது காப்பியை ஏற்றுமதி செய்கிறது!

உலகக் காப்பி உற்பத்தியில், இந்திய காப்பி உற்பத்திசுமார் 2 சதம் ஆகும். ஏற்றுமதி அளவு இந்த 2 சதவிகிதத்திலும் ஒரு சிறிய பாகமே ஆகும்.

காப்பி வாரியத்தாரால் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் செய்யப்பட்டு வரும் விளம்பரத்தின் பயனைக் காப்பி அருந்துவோரின் எண்ணிக்கையும், காப்பியின் ஏற்றுமதி அளவும் கணிசமாக பெருகி வருகிறது.


வருங்கால உள்நாட்டு தேவைக்கும், வெளிநாட்டு ஏற்றுமதிக்கும் தக்கவாறு காப்பி உற்பத்தியைப் பெருக்க, காப்பி வாரியத்தால் பாளே கண்ணூரில் நிறுவப்பட்டிருக்கும் ஆராய்ச்சி பண்ணையில் நடத்திய ஆராய்ச்சியின் பயனைக்கிடைக்கப்பெற்றிருக்கும்

நோய் தாக்காததும், உறுதி வாய்ந்ததுமான விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு நாட்டில் காப்பி விளையும் எல்லா பகுதிகளுக்கும் பரப்பப்பட்டு வருகிறது.

ஆராய்ச்சியின் பலன்களை விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லியும், விவசாயிகளுக்கு உள்ள பிரச்சினைகளை ஆராய்ச்சி பண்ணைக்கு அறிவித்தும், பிரச்சினைகளை தீர்ப்பதிலும் ஆலோசனை கூறுவதிலும் தொடர்பு துறை, தீவிரமாக முனைந்து இருக்கிறது.

இதற்காக ஏற்றுமதி செய்யப்படும் காப்பிக்கு குவிண்டால் 1-க்கு ரூபாய் 9-50 சுங்கவரி (Customs duty) ஆகவும், உள்நாட்டில் விற்பனை ஆகும் காப்பிக்கு ரூபாய் 9.50 (Excise duty) ஆகவும், அதிலிருந்து கிடைக்கும் பணம் ஆராய்ச்சிக்காகவும், விளம்பரத்திற்காகவும் செலவிடப்படுகிறது.

இந்தியாவில் காப்பி விவசாயிகளுக்கும், காப்பி அருந்துவோருக்கும், பதனிடுவோருக்கும், காப்பி வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் நல்ல பலனும், பயனும் கிடைக்கும் முறையில் காப்பி வாரியம் மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் எல்லா சாராரின் பிரதிநிதிகளைக் கொண்டு விற்பனை, விளம்பரம், ஆராய்ச்சி, அபிவிருத்தி என்ற பிரிவுகளின் மூலம் நல்ல முறையில் சிறந்த பணியாற்றி வருகிறது.








சென்னைப் பெரம்பூர் மாதவரம் நெடுஞ்சாலையிலுள்ள ஒரு பட்டாசுக்கடை, போவோர் வருவோரின் கவனத்தையெல்லாம் ஈர்க்கிறது.

அதற்குக் காரணம், அது சாதாரணப் பட்டாசுக்கடை அல்ல, பட்டதாரிகள் பட்டாசுக்கடை!

படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்கள் ஒன்றுசேர்ந்து, பொழுதை வீணே கழிக்காமல் இப்படிப் பயனுள்ள செயலைச் செய்து வருவதை பொது மக்கள் பாராட்டுகின்றனர்.


மேலை நாடுகளிலெல்லாம் படிக்கும்போதே மாணவர்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுப் பொருளீட்டுகின்றனர். எந்தத் தொழிலையும் அவர்கள் தாழ்ந்ததாகக் கருதுவதில்லை. அந்த மனப்பக்குவம் நம் நாட்டிலும் வரவேண்டும்.

படித்துவிட்டு வேலை கிடைக்கவில்லையே என்று முயற்சி ஏதுமில்லாமல் வாழ்நாளை வீணே கழித்துக் கொண்டிருக்காமல், தொழில் எதுவானாலும் அதை ஏற்கின்ற மனத்தினராய் முன் வந்துள்ள பதினோரு பட்டதாரிகளின் இந்தப் பட்டாசுக்கடை நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளது.

பச்சையப்பன் கல்லூரி, மாநிலக் கல்லூரி, இலயோலாக் கல்லூரி மாணவர்களான இவர்கள் பி.ஏ., பி.காம்., பி.எஸ்சி., எம்.ஏ., எம்.எஸ்சி பட்டம் பெற்றவர்கள்.



இவர்கள் பட்டாசுக் கடையோடு உட்கார்ந்து விடுவதில்லை. வீடு வீடாகச் சென்று, குறிப்பாக அரசுக் குடியிருப்புகளுக்குச் சென்று 'ஆர்டர்'களைச் சேகரிக்கின்றனர். அரசு அலுவலகங்கள் பலவற்றிலும் இவர்களுக்கு ஆதரவு பெருகியுள்ளது. ஆர்வத்துடன் இளைஞர்கள் ஈடுபடும் எந்த ஒரு நல்ல செயலுக்கும் ஆதரவு இல்லாமல் போகுமா?




உணவுப் பொருள்களைத்தான் நியாய விலையில் தருவார்களா என்ன? இந்தப் பட்டாசுகளையும்தான் இவர்கள் நியாயவிலையில், அதாவது அரசு அலுவலகங்களுக்கு 10 சதவீதம் தள்ளுபடியில் தருகிறார்கள்.

தீபாவளி முடிந்ததும் என்ன செய்வீர்கள்? என்று கேட்டால் அவர்கள் சொல்லும் பதில்.

'பொங்கல்தான் வருகிறதே! கிராமத்துக்குப் போய்க் கரும்புகள், காய்கறிகளெல்லாம் வாங்கி வந்து விற்போம். பொங்கல் போனதும், பள்ளிக்கூட நாட்களில் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் முதலானவற்றை விற்போம்!' என்கிறார் ஒரு மாணவர் உற்சாகமாக.

விருதுநகரில் பட்டதாரி மாணவர்கள் ஒன்று சேர்ந்து தேநீர்க்கடை வைத்தார்களாம். அதைப்போலச் சென்னை நகரில் முதன் முதலாக வந்துள்ள பட்டதாரிகள் பட்டாசுக் கடையை—நாம் பாராட்ட வேண்டும்.




# மரம் நடு விழா!

அண்மையில் செங்கை மாவட்டத்தில் மரம் நடுவிழா நடைபெற்றிருக்கிறது. செடியை நட்டுவிட்டு மரம் நடு விழா (வன மகோத்சவம்) என்று சொல்வார்களே அப்படி இல்லாமல் மெய்யாகவே ஓர் இடத்திலுள்ள மரத்தைப் பெயர்த்து எடுத்து வந்து மற்றோர் இடத்தில் நடுகின்ற விழா இது!

புதிர் போடுவது போலத் தோன்றுகிறதல்லவா? புதிரல்ல! நடைபெற்ற நிகழ்ச்சி-நடைபெறும் நிகழ்ச்சி -நாளையும் நடைபெறப் போகும் நிகழ்ச்சி.

வேடந்தாங்கலுக்குப் பறவைகள் சரண்புக வருகின்றன அல்லவா? அவை ஏரியின் உள்ளே காணப்பெறும் நீர்க்கடப்பை மரங்களைத்தான் நாடி வருகின்றன. அருகில் வேறு பல வகை மரங்கள் இருந்தாலும் நீர்க்கடப்பை மரங்களில்தான் பறவைகள் கூடு கட்டுகின்றன; குடியிருக்கின்றன. எனவே ஏரியினுள் நீர்க்கடப்பை மரங்களை அதிக அளவில் இடம்பெறச் செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளனர் தமிழக அரசின் வனத்துறையினர்.



மரம் ஏற்றிச்செல்லப்படுகிறது.

சென்ற ஆண்டு, ஆய்வு முறையில் இந்தப் பணி நடைபெற்றது. ஏறக்குறைய 9 மரங்கள் பெயர்த்து நடப்பெற்றன. அவற்றில் 8 மரங்கள் உயிர் பெற்றுத் தழைத்தன. அதனால் இந்தப் பணியைத் தொடர்வதற்கு வனத்துறை முடிவெடுத்தது. அண்மையில் சில மரங்கள் நடப்பெற்றுள்ளன. மொத்தம் 100மரங்களை இந்த ஆண்டுக்குள் நடுவதற்குத் திட்டம் உள்ளது.

வேடந்தாங்கலுக்கு அருகில் உள்ள சிற்றூரில் இந்த நீர்க்கடப்பை மரங்கள் உண்டாக்கப்பெற்று, அவை அப்படியே பெயர்த்து எடுத்து வரப்பெற்று, நடப்பெறுகின்றன. இதில் கவனிக்கப்பட வேண்டிய செய்தி என்னவென்றால், இந்த மரங்கள் பெயர்த்துக் கொண்டு வரப்பட்ட 24 மணி நேரத்துக்குள் மீண்டும் நடப்பெற வேண்டும்.

எனவே நீர்க்கடப்பை மரங்கள் மிக அதிக அளவில் நடப்பெறுவதால் புத்தாண்டில் (1975) சரணாலயம் நோக்கிப் பறவைகள் படையெடுத்து வரும் என்று எதிர்பார்க்கப்பெறுகிறது.

—த. பி.


மரம் நடப்படுகிறது.



# இன்றைய சேமிப்பு நாளைய மகிழ்ச்சி!!



## வளமான நல்வாழ்வுக்கு வழிகாட்டும்

## சிறப்புமிக்க திட்டம் சிறுசேமிப்புத் திட்டம்

### தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு 'அதிக வட்டி' அளிக்கப்படுகிறது.

*சிறு சேமிப்புத் தரும் சீரிய திட்டங்களில் இரண்டு தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெக்கரிங் டெபாசிட் திட்டம்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.*

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ | ரூ | ரூ |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | . . . |
| | 10/- | 750/- | . . . |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | . . . | 825/- |
| | 10/- | . . . | 1, 650/- |

சலுகைகள்

1. தற்போது 1. 7. 1972 க்கு பிறகு ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் கணக்கு துவக்கியவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச்சலுகை கிட்டும். **இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்ப தில்லை.** சம்பளப்பட்டியல் மூலம் இத்திட்டத்தில் சேரலாம்.

2. வளரும் மாதச் சேமிப்புத் திட்டத்தின் மூலம் சேமிப்பவர்கள் செலுத்தும் தொகைக்கு ரூ. 20, 000 வரை வரிச் சலுகை உண்டு. இத்திட்டத்திலும் சம்பளப்பட்டியல் மூலம் சேரலாம்.

இப்போது தபால் நிலைய காலவரை வைப்புத் திட்டத்திற்கு 10% வட்டி அளிக்கப் படுகிறது.

உங்கள் குழந்தைகளின் சீர்மிகு வாழ்விற்காகவும்
நாடும் வீடும் வளம் பெறவும்,

''இன்றே ஒரு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்''

**இயக்குநர்,**
சிறு சேமிப்புத் துறை,
அண்ணா சாலை, சென்னை-2.